கல்கி








KALKI
15-8-1965
35
காசு



உங்கள் அழகுக்கு புதுப் பொலிவை அளியுங்கள்!

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் முகம் சோபையுடன் வழவழப்பாகத் தோற்றமளிக்கும்

உங்கள் முகத்திற்கு வசீகரிக்கும் பொலிவை அளியுங்கள். நல்ல அழகியாகத் தோற்றமளிக்க விரும்பும் எந்தப் பெண்மணியும் முதலில் செய்ய வேண்டியது அதுதான். எண்ணெய்ப் பசையில்லாத சௌம்யமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் உங்கள் சருமத்திற்கு மிருதுத் தன்மையும் பாதுகாப்பும் கிடைக்கும். அது சருமத்திலுள்ள பெரிய துவாரங்களை மூடி முகத்தில் 'எண்ணெய் வடியும் தோற்றம்' உண்டாகாமல் தடுக்கிறது... முகத்தில் கருப்புப் புள்ளிகள் உண்டாவதிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாக உபயோகித்தால் உங்கள் வதனம் இயற்கைப் பொலிவுடன் விளங்கும். இந்தக் க்ரீமைத் தடவி அதன்மீது பவுடர் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரேசீராகப் படிந்து மணிக்கணக்கில் கலையாமல் இருக்கும்.



**பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்து
உங்கள் அழகுக்கு மெருகூட்டுங்கள்**

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது)

கல்கி

பொருளடக்கம்




அதற்குள் நாம் அந்தச் சக்தி வாய்ந்த நண்பனை மறந்துவிட்டோமா? அல்லது அவன் உதவி இனிமேல் நமக்குத் தேவையில்லையென்று நான் நினைக்கத் தொடங்கி விட்டோமா? நான் நீண்ட நாள் வாழ வாழ, இந்த உண்மைதான் உறுதியாகிறது. அதாவது மனித வாழ்வை ஆண்டவன் இயக்குகிறான் என்பதுதான். அவன் பார்வையிலிருந்து தப்பி ஒரு சிட்டுக் குருவி கூடத் தரையில் விழமுடியாது என்றால் அவன் உதவியின்றி ஒரு சாம்ராஜ்யத்தையா ஸ்தாபிக்க முடியும்?

— பெஞ்சமின் ப்ராங்க்லின்

விசுவாவசு ஆடி 31 — ஆகஸ்டு 15

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


"பலே! தொடர்ந்து செய்து வாருங்கள் உங்கள் வேலையை"
காலனி ஆட்சிமுறை
"நம் பொருளாதாரம் பூமியை விட்டுப் பறக்கும் கட்டத்தை அடைந்து விட்டது போலிருக்கிறதே!"
திவாலா நிலைமை
PK



மலர் 25 • இதழ் 3

சுதந்திர தினச் செய்தி

ராஜாஜி

சுதந்திர தினத்தை யொட்டி வாசகர்களுக்கு நான் சமர்ப்பிக்கும் செய்தி இதுவே: சுதந்திரமாக வாழ வேண்டும் என்கிற உணர்ச்சி வேகத்தை நாம் மீண்டும் பெற முயல்வோமாக. கடந்த பன்னிரண்டாண்டுகளில் நமது சுதந்திர உணர்ச்சியில் பெருமளவை இழந்து விட்டோம். நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்கிற பலவீனம் நம்மைப் பற்றிக்கொண்டு விட்டது. இந்தப் பலவீனத்தை உதறித் தள்ளிவிட்டு நம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முற்படுவோமாக!

சர்க்கார் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு அதிகார நிலையமாக விளங்கும் ஒரு ஸ்தாபனத்திடம் தங்களது சுதந்திரத்தை மனமறிந்து பறிகொடுக்கும் மக்கள் சுதந்திர தினம் கொண்டாடுவதில் பொருள் இல்லை. எது நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல், சர்க்காரை அதனுடைய நியாயமான எல்லைக்குள் கட்டுப்படுத்த உறுதி பூண்டுள்ள மக்களுக்கே — தங்களது சுதந்திர உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளப் பாடுபடும் மக்களுக்கே — சுதந்திர தினம் என்பது மகத்தான பொருள் பொதிந்த விழாவாகும்.

அந்நியர் நல்ல முறையில் நிருவாகம் செய்தாலும், நாட்டுக்குச் சுதந்திரமில்லாதபோது நல்ல நிருவாகம் மட்டுமிருந்து பயனில்லை என்று முன்பு சொல்லி வந்தோம். அதேபோல் இப்போது சுபிட்சத்துக்காக ஏதேதோ செய்வதாகச் சொல்லப்பட்டபோதிலும், மக்களின் சுதந்திரத்தைப் பறி கொடுத்துத்தான் அந்தகைய சுபிட்சத்தை அடைய வேண்டுமாயின், சுபிட்சமே வேண்டாம் என்ற உணர்ச்சியைப் பெறவேண்டும். சுதந்திரத்தை இழந்தபின் சுபிட்சம் பெறுவது விரும்பத்தக்கதல்ல என்பதுமட்டுமின்றி, தனி மனிதனுக்குச் சுதந்திரமும் சுவாதீனமும் இன்றி நாடு சுபிட்சம் அடைவது சாத்தியமுமல்ல என்பதைக் கண்டுவிட்டோம். மக்கள் சுதந்திரத்தைப் பறித்தபின் சுபிட்ச வாழ்க்கையை ஏற்படுத்த முடியாது என்பதைக் கடந்த பன்னிரண்டாண்டுப் பரிசோதனை உணர்த்திவிட்டது. சுபிட்சத்தை அடையாமலே, சுதந்திரத்தை இழந்த நிலையில் நாம் சுதந்திர தினம் கொண்டாடி வருகிறோம்.

மக்களின் சுதந்திரமான செயல் ஊக்கமும், ஆர்வமும் இல்லாவிடில் உற்பத்திப் பெருக்கமோ, சுபிட்சமோ காண முடியாது என்பதை நிதரிசனமாகக் கண்டு விட்டோம்.

இந்தியாவில் உண்மையான சுதந்திரத்தைக் காக்க வேண்டுமாயின், கம்யூனிஸ நாடுகளில் நடப்பதுபோல் நம் நாட்டிலும் ஆள்கிற கட்சியின் 'மேலிடம்' நாட்டின் தலைமையான அதிகார ஸ்தானமாகி, மந்திரி சபைகளை இயக்கிவைக்கும் நிலைமையைத் தடுத்தேயாகவேண்டும். கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் உரிய எல்லைகளை ஆட்சியாளர் உணர வேண்டும். காங்கிரஸ் கட்சிக்காரராகு முன்பே சட்டசபையாளரான ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களேனும் இந்தப் பாகுபாட்டை அறிந்திருக்கக்கூடும் என்று வாசகர்கள் நினைக்கலாம்.

இச்சமயத்தில் ஒரு பழைய சம்பவத்தை நினைவூட்டுகிறேன்: 1937-ல் நான் சென்னையின் பிரதம மந்திரியாக இருந்தபோது (அப்போது முதன் மந்திரியைப் பிரதமர் என்றே சொல்வார்கள்) ஸ்ரீ டி. டி. கே.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

எதிர்க் கட்சியில் இருந்தார். நான் ஏதோ ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தபோது, 'இதற்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கீகாரம் உண்டா?' என்று அவர் கேட்டார். என் திட்டம் காரியக் கமிட்டியின் உத்தரவின் பேரில் உருவானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டி அதனைத் தோல்வியுறச் செய்ய வேண்டும் என்பது அவருடைய கருத்து. 'மாகாண சட்ட சபையில் ஒரு திட்டத்தைப் பற்றி விவாதிக்கும்போது, அக்கட்சியின் பெயரை இழுப்பது பொருத்தமற்றது' என்று நான் அவருக்கு அப்போது விடை அளித்தேன்.

சட்ட சபை மூலம் நிருவாகம் நடைபெறும் முறையில் சர்க்காரானது சட்ட சபைக்குப் பதில் சொல்லப் பொறுப்பு ஏற்றிருக்கிறதே யன்றிக் கட்சிக்குப் பதில் சொல்வதற்கல்ல. சட்ட சபையில் பல கட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. அவை அந்தரங்க சுத்தமாக விவாதம் நடத்தி முடிவெடுக்க, அம்முடிவுகளின் மீதே சர்க்காரின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். கொள்கைகளை உருவாக்குவதில் கட்சிக்குச் செல்வாக்கு உண்டு எனினும், அது நேரடியாகச் சட்டசபையின் மீதும், சர்க்கார்மீதும் தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடாது. 1937லிருந்து 1939ல் யுத்தம் தொடங்கும் வரையில் நான் சென்னைப் பிரதமராக இருந்தபோது இந்தக் கொள்கையையே பின்பற்றி வந்தேன். அப்போது கட்சியின் மேலிடத்தில் காந்திஜி, சர்தார் பட்டேல், நேருஜி முதலிய பெருந் தலைவர்கள் இடம் பெற்றிருப்பினும் இம்முறையை நான் அனுசரித்தேன். அவர்களும் உசிதமற்ற முறையில் தங்கள் சக்தியைப் பிரயோகித்ததில்லை. இப்போது நிலைமை மாறி விட்டது.

ஒரு கட்சியின் மெஜாரிட்டி பலம் அக்கட்சியை ஆட்சியில் அமர்த்தப் பயன்படுவதோடு முடிய வேண்டும். அதன் பின், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சர்க்கார்தான் ஆளவேண்டுமேயன்றி அந்த அதிகாரத்தைக் கட்சி பெறக் கூடாது. இவ்விதி அமுலாகாவிடில் கணவனும் மனைவியும் முறைப்படி நடத்தும் குடும்பத்துக்குப் பதில் மாமியார் கொடுங்கோன்மை நடத்தும் முறையையே காண்போம்.

தனியொரு கட்சி மிகப் பெரும்பான்மை பலம் பெற்று நடத்தும் ஆட்சி எப்போதுமே சுதந்திரத்துக்கு ஊறு விளைவிப்பதுதான். அதோடு இந்தியாவில் நடைபெறுவது போல் ஆள்கிற கட்சி தன்னையே அரசாங்கம் எனவும் நிருவாகம் எனவும் நினைக்கத்தலைப்பட்டு, அதனை மக்களும் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டால் கம்யூனிஸ ஆட்சி முறைக்கு மிகவும் நெருக்கமாகச் சென்றுவிடுவோம். சட்டபூர்வமான பார்லிமெண்ட் ஆட்சியை நாசம் செய்து நிறுவப்படும் சட்ட விரோதமான ஏக - கட்சி ஆட்சியைப் பார்லிமென்டும், மக்களும் முழுமூச்சுடன் எதிர்த்துப் போராட வேண்டும். காலம் கடந்துவிடாமல் இப்போதே இந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

ஒரு நாடு உண்மையாகச் சுதந்திரம் பெற்றிருக்கிறது எனில் அந்நாட்டுப் பிரஜைகள் தாங்கள் சுதந்திரமாகச் செயலாற்ற முடியும் என்ற உணர்வைப் பெற்றிருக்க வேண்டும். அந்நாட்டுச் சட்ட சபைகளில் மக்களின் பிரதிநிதிகளாக அமர்ந்திருப்பவர்கள் 'கொறடா'வின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியிராமல், பகுத்தறிவையும், விவேகத்தையும் துணையாகக் கொண்டு தாங்களே சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிக்க உரிமை பெற்றிருக்க வேண்டும்; அந்நாட்டுப் பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயங்களை உள்ளபடி வெளியிடத் தைரியம் பெற்றிருக்க வேண்டும். சுதந்திர வாழ்வு என்பதன் ஜீவாதாரம் இவையே. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? பிரஜைகள் யாவரும் எல்லாவிதமான கட்டுப்பாடுகளாலும் தடைகளாலும் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்; சட்டசபைகளில் பெரும்பான்மையாக உள்ளோர் கட்சிக் கமிட்டிகள் எவ்வாறு சூத்திரத்தை இயக்கி வைக்கின்றனவோ அதன்படி ஆடும் பாவைகளாக இருக்கிறார்கள்; பத்திரிகைகளோ முன்பு பிரிட்டிஷாரை எதிர்ப்பதில் காட்டிய தீரத்தை இன்றைய ஆட்சியாளரிடம் காட்ட அஞ்சி வருவதையும், சுதந்திர நாட்டில் தமக்குரிய சக்தியுடன் ஒலிக்காமல் இரகசியக் குரலில் முனகுவதையும் பார்க்கிறோம். ஆணும் பெண்ணுமாகப் பல வீரர்கள் மகத்தான தியாகம்செய்து பெற்ற சுயராஜ்யத்தில் இன்று சக்தி வாய்ந்த சுதந்திர உணர்ச்சியை எங்குமே காண முடியவில்லை. மக்கள் யாவரும் நம்பிக்கை இழந்தும், மனமுடைந்தும் ஏமாந்தும் போயுள்ள சூழ்நிலையைத்தான் காண்கிறோம். உலகச் சூழலை அணுகுண்டின் கதிரியக்கம் விஷமாக்குவது போல், சுதந்திரச் சூழலைக் கட்சியின் சர்வாதிபத்தியக் கதிரியக்கம் விஷமாக்கியுள்ளது. வருஷாந்திரச் சுதந்திரக் கொண்டாட்டம் ஒரு வெற்றுச் சடங்காக மாறிவிட்டது. அதைக் குறித்து மக்களின் இதயத்தில் நம்பிக்கையோ, உற்சாகமோ சிறிதும் இல்லை.

பொறுமைப்பட்டுப் பயனில்லை

நம் திட்டங்கள் படு தோல்வியடைந்து, நாடு திவாலா நிலையிலிருக்கும் இச்சமயத்தில் 'பாகிஸ்தானின் ஐந்தாண்டு திட்டங்கள் வெற்றி பெற்று, பொருளாதாரத் துறையில் அந்நாடு சுபிட்ச நிலையை எட்டி விட்டது' என்று கூறினால் 'இவர்கள் தேச பக்தர்கள் அல்ல' என்று கூறப்படலாம். போலி தேச பக்தியை விட உண்மையை உரைப்பது மேல் என்று கருதுகிறோம்.

சமீபத்தில் வெளியான உலக பாங்கு அறிக்கை, இந்தியாவின் பொருளாதார நிலைமையைப் பற்றிக் கடுமையாகத் தாக்கியிருக்கிறது. அதே உலக பாங்கு பாகிஸ்தானின் பொருளாதார நிலையைப் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் சில முக்கியமான அம்சங்களைக் குறிப்பிடுகிறோம்.

பாகிஸ்தான், நாட்டின் பொருள் உற்பத்தி அதன் இரண்டாவது திட்டகால (1960-65)

ஐந்தாண்டுகளில் 24 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என்று உயர்ந்தபட்ச குறிக்கோளுடன் திட்டத்தைத் தொடங்கியது. சாதனையில் இந்தக் குறிக்கோளை விட நான்கு சதவிகிதம் அதிகமாகவே உற்பத்தி பெருகியிருக்கிறது என்று உலக பாங்கி மதிப்பிட்டுக் கூறுகிறது.

இதே கால அளவில் பாகிஸ்தானின் தேசிய செல்வம், மொத்தத்தில் — உள்நாட்டு உற்பத்தி, வெளி நாட்டு இறக்குமதிகள் மூலம் ஏற்பட்ட வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி எல்லாமாகச் சேர்ந்து — 37 சத விகிதம் உயர்ந்திருக்கிறது என்று உலக பாங்கி கூறுகிறது.

இப்படி வியப்புறும் வண்ணம் ஒரு வளர்ச்சி பாகிஸ்தானில் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதையும் உலக பாங்கி அறிக்கையில் வெளியிட்டிருக்கிறது.

(1) முதலீடு செய்யும் பணத்துக்கு நல்ல பயனும் வருமானமும் துரிதமாகக் கிடைக்கக்கூடிய துறை தனியார் துறையே என்று உணர்ந்து அத்துறையில் முதலீட்டை அதிகப்படுத்தியது.

(2) விவசாயத் துறையிலும் தனிப்பட்ட நிலச்சுவான்தார்களிடம் நம்பிக்கை வைத்து, நீர்ப்பாசன வசதிகள், ரசாயன எருக்கள் விநியோகம் ஆகிய இரண்டிலுமே அதிக கவனம் செலுத்தியது.

(3) இறக்குமதிக் கொள்கையைப் பரந்த மனப்பான்மையுடன் கடைப்பிடித்தால் விளைந்த லாபத்தை, பூரணமாக நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டது.

சர்க்கார் துறையில் நஷ்டம் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் தனியார் துறையில் செய்யப்பட்ட முதலீட்டினால் விளைந்த லாபம் அந்த நஷ்டத்தை ஈடு செய்து நிகர லாபத்தையே கொடுத்தது.

விவசாயத் துறையில் ஆண்டுக்கு 3.5 சத விகிதம் உற்பத்தி பெருகி வந்திருக்கிறது. விவசாயத் துறையில் தனியார் செய்த முதலீடுகளில் பெரும் பகுதி, நிலச்சுவான்தார்களின் சேமிப்பிலிருந்துதான் வந்தது.

தொழில் துறையில் வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 9 சதவிகிதமாகும்.

தனிப்பட்ட முதலாளிகள் தொழில் துறையில் திட்டகாலத்தில் 370 கோடி ரூபாய் முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்களோ 444 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள்!

சர்க்கார் துறையில் 146 கோடி முதலீடு செய்ய வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் 135 கோடிதான் முதலீடு செய்திருக்கிறது.

பெருந் தொழில்களில் உற்பத்தி 85 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. அதாவது ஆண்டுக்கு 17 சத விகிதம் அளவில் பெருகியிருக்கிறது. இப்படிப் பெருகிய தொழில்கள் ரஸாயன உரங்கள், அடிப்படை உலோகங்கள், பத்திரிகைக் காகிதம், வனஸ்பதி, பெட்ரோலியம் தொழில் ஆகியவை.

இப்படியோர் அசாத்திய வளர்ச்சிக்கு உதவிய அம்சங்கள்:

(1) பாகிஸ்தானின் தொழிலதிபர்களின் ஆர்வமும், லாபம் சம்பாதிக்கச் சர்க்கார் அளித்த ஊக்கங்களும்.

(2) முதலீடு செய்ய அந்நியச் செலாவணி கடன் வசதிகள்.

(3) உற்பத்தியாகும் பொருள்களுக்கு விற்பனை வசதி பெருகி வருவது.

1960ல் பாகிஸ்தான் சர்க்கார் வரிகள் மூலம் இருநூறு கோடி பெற்றது என்றால் 1965ல் அது இரண்டு மடங்காகி விட்டது.

அந்நியச் செலாவணி வரவு — செலவு நிலைமை பாகிஸ்தானில் மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. ஏற்றுமதி வர்த்தகம் எதிர்பார்த்ததைவிட உயர்ந்து கொண்டே செல்வது கண்டு எல்லோரும் மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர். தேசிய உற்பத்தி வளரும்

வேகத்தைவிட ஏற்றுமதி வர்த்தகம் துரிதமாக வளர்ந்திருக்கிறது. இந்த முன்னேற்றங்களுக்கெல்லாம் முக்கிய காரணம் பஞ்சு, நெல் உற்பத்தியிலும் மீன் வளம் பெருகுவதிலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்திதான்.

இறக்குமதியும் கணிசமாகக் குறைந்து வந்துள்ளது. இறக்குமதியாகிக் கொண்டிருந்த இனங்கள் அதிகமாக உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாலும், புதிதாக அளிக்கப்படும் உதவி கூடுமான வரையில் சர்க்கார்த் துறை திட்டங்களுக்குப் போகாமல் பார்த்துக் கொள்வதாலும், இறக்குமதி குறைந்திருக்கிறது என்று காரணம் காட்டியிருக்கிறது உலக பாங்கி. தவிரவும், அபிவிருத்தியைத் துரிதப்படுத்தக்கூடிய இனங்களுக்கு இறக்குமதியைத் தாராளமாகவே அனுமதித்து, இதர இனங்களின் இறக்குமதியை மட்டும் கட்டுப்படுத்தும் போக்குப் பாராட்டுக்குரியது.

1964 ஜூலையில் கச்சாப் பொருள்கள், யந்திர உறுப்புகள் போன்ற 51 இனங்கள் மீதிருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, அதன் மூலம் தொழிற்சாலைகள் கணங்கிக் கிடக்காமல், முழு அளவுக்கு இயங்கச் செய்ததைப் பூரணமாக ஆதரித்து, கொடுத்த உதவியை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்த பாகிஸ்தானுக்கு மேலும் உதவி அளிப்பது நல்ல பயன் தரும் என்று உலக பாங்கு ஸிபாரிசு செய்திருக்கிறது.

அதாவது பாரத நாட்டில் சென்ற ஆறு ஆண்டுகளாகச் சுதந்திரக் கட்சி சொல்லி வந்த திட்ட முறையை, பொருளாதார முறையை பாகிஸ்தான் பின்பற்றி உலக பாங்கியின் அபாரமான பாராட்டையும் உள்நாட்டில் சுபிட்சத்தையும் பெற்றிருக்கிறது.

இப்படிச் சுபிட்ச நிலையை அடைந்திருக்கும் பாகிஸ்தானைக் கண்டு பொறாமைப்பட்டுப் பயனில்லை.

உலக பாங்கியின் குறிப்புகளை எடுத்துக் கூறுவதன் நோக்கம் நமது சர்க்கார் தனது தவறுகளை நீக்கிக்கொண்டு நல்ல பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே.

அருளாளரை இழந்தோம்

கிறிஸ்தவ சமயத்தின் பெரிய குருவாகிய ஆர்ச் பிஷப் டாக்டர் மத்தயாஸ் அவர்கள் இத்தாலி நாட்டில் நோய் வாய்ப்பட்டு சஸ்திர சிகிச்சைக்கு உள்ளாகிப் பின்னர் இறைவனடி எய்தினார் என்ற செய்தியைக் கேட்டுச் சென்னை நகரின் எல்லாச் சமய மக்களுமே பெருந் துயரத்தில் ஆழ்ந்து விட்டனர்.

அவர் பிறந்தது பிரான்ஸ் தேசத்தில். அதனால் என்ன? அவருடைய இளமைப் பருவத்தில் புனித போப்பாண்டவர் பாரத மக்களுக்குப் பணியாற்றும்படி பணித்தார். அதைச் சிரமேற்கொண்டு இந்தியாவுக்கு வந்து, சேவை புரிந்தார். பின்னர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். இங்கேயே முப்பதாண்டுகளுக்கு மேல் தங்கி, சென்னையில் வாழும் மக்களுக்கு அருந் தொண்டாற்றியிருக்கிறார்.

அவர் நிறுவிய பள்ளிகள் முப்பதுக்கு மேல் இருக்கும். ஏழை எளியவர்களுக்காக அவர் ஒரு குடியிருப்பே ஏற்படுத்தினார். இதற்காக வேண்டி நிதி திரட்ட ஐரோப்பாவில் எட்டுமாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

அவர் சமய வாழ்க்கை மேற்கொண்ட இருபத்தைந்தாண்டானதை 1959-ல் சென்னை நகர மக்கள் கொண்டாடி ஒரு லட்சம் ரூபாய்க்கு நிதி திரட்டிக் கொடுத்துக் கௌரவித்தனர். அதற்குச் சமமாக ஒரு லட்சரூபாய் தாம் வழங்கி முழுவதையும் கல்விப் பணிக்கு ஒதுக்கினார்.

அவரது அன்பு கொப்புளிக்கும் கண்களும் அமைதி தவழும் முகமும், புனித உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் அவரது கம்பீரமான தோற்றமும் சென்னைக்கு இனி காணக் கிடைக்காதே. அவர் ஆன்மா சாந்தியடைக.



ராஜாஜியின் கருத்துக்கள்

மெய்யை விடப் பொய்யே அழுத்தமாகப் பதிந்துவிடுகிறது. உண்மையை விடப் பொய்க் கதைகள் விரைவில் பரவி விடுகின்றன. சமீப காலத்தில் ஸ்ரீ காமராஜ் அவர்களது உபந்நியாசங்களில் முக்கியமான கதை, பஞ்சாபி ஸுபா பெறுவதற்காகத் தாராசிங் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று நான் ஊக்கி வருகிறேன் என்பதே. தேர்தல் செலவுக்காகக் காங்கிரஸுக்குத்திரட்டப்படும் தொகைகளைக் 'காமராஜ் பிறந்த தினம்' என்ற பெயரில் அவருக்குத் தருவதற்காகத் தென் இந்தியாவில் நடைபெறும் கூட்டங்களில் அவர் இக் கதையைப் பிரவசனம் செய்து வருகிறார்.

உண்மை என்னவெனில் சீக்கியர்கள் தற்போது தங்களுடைய சிறிய பிரச்னைகளை ஒதுக்கி வைத்துவிட்டுக் காங்கிரஸ் கட்சியின் நாசகாரமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து நாட்டைக் காப்பதற்கே முழு மூச்சுடன் முயல வேண்டும் என்று நான் தாராசிங் அவர்களின் மனத்தில் பதிய வைத்தேன்.

பஞ்சாபி மாகாணம் கோருவது குற்றமென்று நான் நினைக்கவில்லை. இந்திய யூனியனுக்கு உட்பட்டு ஆந்திர மாகாணமும் கேரள மாகாணமும் கேட்டது போன்றதே அது எனக் கருதுகிறேன். எனினும் இதைவிடக் காங்கிரஸ் ஆதிக்கத்தை ஒடுக்குவது அவசியமென்பதைத் தாராசிங் அவர்களுக்குக் கூறினேன். தங்களது அதிகாரத்தை நிலைப்படுத்திக்கொள்வதற்காகக் காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு தூரம் உண்மையைத் திரித்தும், அசத்தியமாகவும் பேசுகிறார்கள் என்பதைக் கண்டு ஆச்சரியமடைகிறேன்.

ஃஃஃ

ரேஷன் என்ற கோர மிருகம் மீண்டும் தலைதூக்கி நடக்க ஆரம்பித்து விட்டது. தில்லியில் கூடிய முதன் மந்திரிகள் ரேஷன் மிருகத்துக்குவரவேற்பு உபசாரம் நடத்தியாக வேண்டுமென முடிவு செய்து விட்டனர்.

சிறிய நகரங்களில் தலைக்கு நாளொன்றுக்கு ஆறு அவுன்ஸ் அரிசியும், பெரிய நகரங்களில் இதோடு ஆறு அவுன்ஸ் கோதுமையும் வழங்கப்படலாமெனத் தெரிகிறது. அளவு எதுவாயினும், ரேஷன் முறை அமுலாகத் தொடங்கும் காலம் எதுவாயினும் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது: அதாவது, நகரங்களில் சட்டத்தின் கண்டிப்புடன் சர்க்காரே ரேஷன் முறையை அமுல் செய்வதால் உணவுப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியும் என்று நினைக்கிறார்கள். உண்மையில் இது பஞ்சத்துக்கும், துயரத்துக்குமே முன்னோடியாகும். உணவுக் கார்ப்பொரேஷன் இது வரை மேற்கொண்ட பணிகளையே ஆற்ற முடியாமல் தோல்வியடைந்துள்ள போது, சர்க்காரின் தலையீட்டை மேலும் விஸ்தரிப்பது சற்றும் உசிதமல்ல. 'இப்போதைக்கு எந்தப் பெரிய மாறுதலும் நடக்காது' என்ற சொற்றொடர் அடிக்கடி பிரயோகிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் அடுத்த ஒன்றரை ஆண்டில் நடக்கவிருக்கும் தேர்தல்தான். வோட்டுச் சேர்ப்பதிலேயே கவனமுள்ள ஒரு ஸ்தாபனத்திடம் நாட்டுக்கு உணவு வழங்கும் பணியை ஒப்புவித்து விட்டோம். தேர்தலில் வெற்றி காண வேண்டும்; அதே சமயத்தில் உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்த்ததாகவும் காட்டிக் கொள்ள வேண்டும். அதற்கு 'இப்போதைக்கு இல்லை' என்ற சொற்றொடர் சஞ்சீவினியாய் உதவுகிறது.

ரேஷன் வரப் போகிறது என்ற நிலையை இப்போதே வாக்காளர்களுக்கு அறிவிக்கக் காங்கிரஸ் தலைவர்கள் அஞ்சுகிறார்கள். ஆனாலும் உணவு கார்ப்பொரேஷனின் ஏகபோகியத்துடன் ரேஷன் மிருகத்தையும் இணைத்துவிட வேண்டும் என்பதே காங்கிரஸ் முடிவாக ஏற்றுக் கொண்டுள்ள உணவுக் கொள்கை.

நாட்டுக்கு ஏதேனும் நல்லதிருஷ்டமிருந்து நாடு முழுவதற்கும் பொது விவகாரமான உணவு விநியோகத்தைச் சர்க்கார் மூலம் நடத்த முடியாது என்ற உணர்ச்சியைக் காங்கிரஸார் பெற்றாலன்றி, பழைய கொடூர ரேஷன் அநுபவங்களை மக்கள் மீண்டும் அநுபவித்தேயாக வேண்டும். பொருள் வாங்கும் மக்களின் திருப்தியைப் பெற முயலும் வியாபாரிகள், உணவு தானிய விநியோகத் துறையில் அநுபவம் பெற்றிருப்பதோடு, அவர்கள் நாடெங்கிலும் ஏராளமாகப் பரவியிருப்பதால் ஒன்று சேர்ந்து சதி செய்து மக்களை ஏமாற்றுவது இயலாத காரியம். உணவுதானிய விநியோகப் பொறுப்பு அவர்களிடமே இருக்கவேண்டும் என்பதைக் காங்கிரஸ் உணர்ந்தாலே கதி மோட்சம் உண்டு. இவ்வாறு காங்கிரஸ் உணர வேண்டுமாயின் ஏதேனும் அற்புதம் நிகழ்ந்தாக வேண்டும்.

ஃஃஃ

காங்கிரஸ் திட்டம் பயனற்று வருவதை மத்திய மந்திரி ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்களும் எடுத்துக்காட்டியிருப்பது விசேஷம். கட்சிக் கட்டுப்பாட்டின் 'விளிம்பு' வரை வந்து, தமது மனத்திலுள்ள தூயங்களை அவ்வப்போது வெளிப்படுத்தும் ஒரே ஒரு காங்கிரஸ் மந்திரி ஸ்ரீ எஸ். கே. பாட்டீல். 'தேச நலனுக்காகவே திட்டங்கள் அமைய வேண்டும். திட்டங்களுக்கு நாம் அடிமைப்படலாகாது. நாம் சரியான திசையில்தான் போகிறோமா என்பதை ஆராய்ந்து பார்ப்பது தேச விரோதமோ, அபசாரமோ ஆகாது' என்று அவர் பேசியிருக்கிறார். திட்டங்களுக்கு ஓராண்டு விடுமுறை அளிக்கவேண்டுமெனப் பிரதமர் கூறியதாகவும் அதைத் தாம் ஆதரிப்பதாயும் ஸ்ரீ பாட்டீல் கூறியுள்ளார். 'திட்டக் கொள்கை தாறுமாறாகச் சென்றிருக்கிறது. நாடு ஒரு சிக்கலான நிலையில் உள்ளது. மறுசிந்தனை இப்போது அவசியம். பாதையை மாற்றி அமைக்க வேண்டியது அவசியம்' என்றெல்லாம் ஸ்ரீ பாட்டீல் கூறியிருக்கிறார். இதே உண்மைகளை மற்றக் கட்சித் தலைவர்கள் பல முறை எடுத்துக் கூறியதுண்டு. ஆனால் மத்திய மந்திரிசபையின் அநுபவம் வாய்ந்த மந்திரி இவ்வாறு கூறியிருப்பது, சர்க்கார் எவ்வளவு பெருங் குழப்பம் விளைவித்துள்ளது என்பதைப் பளிச்சென்று விளக்குகிறது.

ORWO

ஆர்வோ

ரோல் ஃபிலிம்

விலைகள்

பிளாக்-அன்-ஒயிட் NP 22

120 — 620	ரூ.	2.33
127		2.21
135/36 காஸட்ஸ்		6.01
635/36 ரீபில்ஸ்		4.40
127 NP 27		2.56

ஆர்வோ கலர்

NT 18 நெகடிவ் பிலிம் 120	9.03
UT 16 ரிவர்ஸல் பிலிம் 135/20	8.49

விற்பனை வரியும்
உள்ளூர் வரிகளும் தனி

புரோஸஸ் செய்ய :
பாம்பே போட்டோ ஸ்டோர்ஸ் *33/34 பார்க் தெரு, கல்கத்தா-16.*
G. K. வேல் & கம்பெனி, (N T 18-நெகடிவ் மட்டும்), *மவுண்ட் ரோடு, சென்னை-2.*



VEB FILMFABRIK WOLFEN
German Democratic Republic
ஆர்வோ பிலிம்ஸ் ஈஸ்டர்ன் யூனிட்
சென்னை - 2 - கல்கத்தா - 13

வட்ட மேஜை



'ஆண்டு மலரின் சிறப்பு'

ஆரம்பத்திலிருந்து இறுதி வரையில் 'கல்கி' ஆண்டு மலரை (சிறு கதைச் சிறப்பு மலர்) ஒரு வார்த்தையும் விடாமல் படித்துச் சுவைத்தேன். மலரின் சிறப்பை விரிவாகச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடைக்காதபடியால், இம் மலரின் இதழ்களாக விளங்கும் கதைகள் ஒவ்வொன்றும் அழகாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளன என்று சுருக்கமாக—ஆனால் இதயத்தின் ஆழத்திலிருந்து — கூறுவதோடு திருத்திக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் வார்த்தைகளால் சொன்னால்தான் அதன் சிறப்பு விளங்கும் என்பதில்லை; மலர் முழுதும் படிக்கும் ஒவ்வொருவரும் அதைத் தாங்களாகவே உணருவார்கள். இத்தகைய, பெறுதற்கரியதோர் மலரைக் 'கல்கி' வாசகர்கள் அதிக பக்கங்களுடன் கூடிப் பெற்று மகிழ்ச்சியடையச் செய்த தங்களுக்கு அவர்கள் எல்லோரும் கடமைப்பட்டுள்ளனர்.

பெங்களூர் — த. கணேசன்
2-8-65



அரசாங்க உதவி திரும்ப வேண்டும்!

பணக்காரப் பெற்றோர்களாக இருந்தால் பொரிக செய்தோ அல்லது நன்கொடை கொடுத்தோ கல்லூரியில் இடம் பிடித்து விடுகிறார்கள். ஆனால் வருமானம் குறைந்த பெற்றோர்களோ தன் பிள்ளையின் 'நல்ல படிப்பி'னால் தான் கல்லூரியில் இடம் பிடிக்கிறார்கள்.

கல்லூரியில் இப்போது அரைக் கட்டணம் அனுமதிப்பது முதலில் ஜாதி அடிப்படையில்தான். இரண்டாவதாகத் தான் வருமானம் எவ்வளவு என்று பார்க்கிறார்கள். ஆனால் இப்போது 5000 ரூபாய்க்கு மேல் வருட வருமானம் உள்ளவர்கள் 900 ரூபாய்தான் வருமானம் என்று கிராம அதிகாரியிடமிருந்து அத்தாட்சி பெற்று விடுகிறார்கள். அரசாங்கம் இப்படி ஊழல் நடப்பதைக் கவனிப்பதில்லையே!

உயர்ந்த ஜாதியில் பிறந்ததற்காக அதிலுள்ள வருமானம் குறைந்த மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் அரசாங்கம் தாழ்ந்த ஜாதியினருக்கு உதவி செய்ய வேண்டாம் என்பதல்ல. வருமானம் குறைந்த உயர் ஜாதி மக்களுக்கும் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஜாதி அடிப்படையில் சலுகை காட்டுவதை விட வருமானத்தை யொட்டிச் சலுகை காட்டுவது துவேஷத்தை நீக்கி ஒற்றுமையை வளர்க்கும்.

திருக்கணங்கோடு,
6-7-65 கே. சிவதாணு பிள்ளை



தரம் உயருகிறது!

'கல்கி' 27-6-65 இதழில் வெளியாகியிருந்த திரைப்பட விமர்சனத்தின் கடைசியில் தமிழ்ப் படத்தின் தரத்தை இந்திப் படத்துடன் ஒப்பிட்டு நோக்கியுள்ளீர்கள். தமிழ்ப் பட உலகம் நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. இதைக் கலையார்வம் கொண்ட யாரும் மறுக்க மாட்டார்கள். நீங்கள் கூறியது போல் தமிழ்ப் படங்கள் முன்னேறவில்லையென்றால், பின்னுக்குப் போகிறது என்றால் இந்த வருடம் ஜெயகாந்தனின் "உன்னைப்போல் ஒருவன்" படத்துக்கு அனைத்திந்திய பாராட்டுப் பத்திரம் கிடைத்திருக்காது.

7-7-65
சீ. வீரராகவன்

மருந்தா, டானிக்கா?

நமது நாட்டில் தெய்வ நம்பிக்கையும், தேசபக்தியும் வெகுவாகக் குறைந்து வருகின்றன. மனச்சாட்சி, ஈவு இரக்கம், அன்பு, பெருந்தன்மை இந்தக் குணங்கள் எல்லாம் வறண்டுபோய் விட்டன.

எங்கு பார்த்தாலும் வெளி வேஷங்கள் தான். இந்த லட்சணத்தில் சர்க்கார் ஆயிரம் கோடி, இல்லை; பதினாயிரம் கோடி ரூபாய் திட்டம் போட்டுச் செலவு செய்தாலும் அது மேல்மட்டத்திலிருந்து அடி மட்டம் வரும்பொழுது (ஏழை மக்களுக்கு) ஒரு சிறு பகுதிதான் பயன்படுகிறது.


இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்தும், சுதந்திரம் அடைந்து பதினெட்டு வருஷங்கள் ஆகியும் சாதாரண ஜனங்கள் பாடு கஷ்டமாகத்தான் இருக்கிறது.

நோயை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். 105 டிகிரி காய்ச்சல் தேகத்தில் கொதித்துக்கொண் டிருக்கும்போது உடம்பு தேறுவதற்கு டானிக் வாங்கிக் கொடுத்தால் உபயோகம் உண்டா?

முதலாவது காய்ச்சல் குறைவதற்கு மருந்து சாப்பிட்டுக் காய்ச்சல் குறைந்த பிறகு நல்ல டானிக் வாங்கிக் கொடுத்தால் உடம்பு நன்றாகத் தேறும்.

கன்னியாகுமரி வி. ஆர். எஸ். அய்யர்
12-7-65

பல்சுவைப் பக்கங்கள்



வண்ணங்கள் கண்டேன்!


அன்று முதலாவது பீரியடு தமிழ் வகுப்பு. நானும் எனது நண்பன் கண்ணனும் ஐந்து நிமிஷங்கள் தாமதித்து வந்தோம். தேர்வு நெருங்கி வரும் நேரம். கம்பராமாயணம் பாடம் நடந்து கொண்டிருந்தது. எங்கள் இருவரையும் பார்த்த தமிழாசிரியர் சினங் கொண்டார். எனக்குப் பிரம்படி பத்து எனவும், அவன் பீரியடு முழுவதும் பெஞ்சின் மேல் நிற்கவேண்டும் என்றும் கூறினார். ஆசிரியரின் ஆணைக்கு அப்பீல் ஏது? எனக்கு அடி கிடைத்தது. கைசிவந்து விட்டது. அவன் பெஞ்சின் மேல் நின்றான். அவன் கால் வலிக்க ஆரம்பித்தது என்பதை அவன் முகமே சொல்லிற்று. எங்களைக் கவனித்தபின் ஆசிரியர் பாடத்தை மீண்டும் தொடர்ந்தார்.

''...விசுவாமித்திரர் ராம – லட்சுமணர் சகிதமாக மிதிலை வந்து சீதா தேவியின் சுயம் வரத்தில் பங்கேற்று ராமர் வில் தனுசை முறித்தார்... இதனையே கம்பர் கருத்தாழமிக்க கவிதைகளில் கூறுகிறார். வில் தனுசு ஒடிந்ததும் விசுவாமித்திரர் 'கைவண்ணமிங்கு கண்டேன்... கால் வண்ணமங்கு கண்டேன்' என்கிறார்'' என்று தமிழாசிரியர் கூறிவிட்டு, என்னிடம் ''கைவண்ணமிங்கு கண்டேன் – கால்வண்ணமங்கு கண்டேன்... விளக்கம் கூறு'' என்றார். எனக்கோ கைவலி தாங்க முடியவில்லை. இருக்கையை விட்டு எழுந்தேன். ''ஸார்! கைவண்ணமிங்கு கண்டேன் என்றால் என் கையைப் பாருங்கள். கால் வண்ணமங்கு கண்டேனென்றால் அதோ பெஞ்சின்மேல் நிற்கிறானே கண்ணன் அவனைக் கேளுங்கள்'' என்றேன்.

என்னுடைய விளக்கத்தைக் கேட்டு ஆசிரியர் உட்பட வகுப்பே 'கொல்'லென்று சிரிப்பொலியில் கலந்தது. தமிழாசிரியர் என்னருகே வந்து நகைச்சுவையான விளக்கத்துக்கு என்னைத் தட்டிக் கொடுத்ததோடு கண்ணனையும் இருக்கையில் உட்காரச் சொன்னார். வண்ணங்கள் கண்ட அந்த நினைவை என்றும் எங்கள் நெஞ்சம் மறப்பதில்லை!

— என். கண்ணபிரான்

ஒட்டகத்தின் முதுகெலும்பைக் கழற்றுவது எப்படி?



☐ ''ஒட்டகம் போலிருக்கானேன்று யோசிக்காதே! பெண்டாட்டிக்குப் பயந்தவனய்யா! வீட்டினுள்ளே நுழையும் பொழுதே முதுகெலும்பைக் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டுத்தான் 'மீசைஆஜ' என்று நீட்டி முழக்கிக் கூப்பிடுவான்'' என்று நண்பர் ஒருவர் மற்றொருவரைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். நிஜமாகவே இவன் முதுகு ஒட்டகத்தினுடையது போல் குண்டும் குழியுமாக இருந்தால் முதுகெலும்பைக் கழற்றுவது எவ்வளவு கஷ்டம் என்று கற்பனை செய்து பார்த்தேன். அடக்க மாட்டாமல் சிரித்தேன். அப்புறம்தான் தெரிந்தது, ஒட்டகத்தின் முதுகு பார்ப்பதற்குக் கோணல் மாணலாக இருந்தாலும், அதன் முதுகெலும்பு மட்டும் ஒரே நேர் கோடு போலத்தான் உள்ளதாம்! இதோ இன்னும் சில சுவையான தகவல்கள்:

☐ நம் கண் இமைகளைக் கூட கணக்கு எடுத்து வைத்திருக்கின்றனர். அதன் நேரம் ஒரு விநாடியில் 3/10 பாகமாகும்!

☐ 21978 என்னும் எண்ணை நான்கால் பெருக்கினால் விடை என்ன தெரியுமா? அதனைத் திருப்பி எழுதினால் என்னவோ, அதேதான்! அதாவது, 87912.....

☐ ஒரு டம்ளரில் தண்ணீர் ஓர் அளவு எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு கைப்பிடி உப்பைப் போட்டால் தண்ணீரின் அளவு என்ன ஆகும் தெரியுமா? டம்ளரில் தண்ணீரின் அளவு அதிகமாகாது.... குறைந்து போகும்!

☐ ஒரே ஒரு பறவையினால்தான் உடனே ஒரு பொருளை இரண்டு கண்களாலும் சேர்ந்து பார்க்க முடியும்!.... அந்தப் பறவை என்ன தெரியுமா?—ஆந்தை!

- சரஸ்வதி ராகவன்

நமக்கு இரண்டு கண்களை, இரண்டு கால்களை; இரண்டு கைகளைக் கொடுத்த கடவுள் வாய் மட்டும் ஒன்றே ஒன்றைக் கொடுத்திருப்பது அதிகம் பேசக்கூடாது என்பதற்காகத்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோமல்லவா?

அதுதானில்லை.

பின்னால் சாமான்களின் விலைவாசி ஏறிப் போய் அவனால் ஒரு வாய்கூடச் சாப்பிட முடியாமல் போகப் போகிறது என்பதை முன் யோசனையாக அறிந்துதான் கடவுள் நமக்கெல்லாம் ஒரே வாயைப் படைத்து விட்டார்!

— லக்ஷ்மி

முகத்தைக் கண்டிலேன் ஐயா!

பெரு நாட்டின் புரட்சிக்காரர்களின் தலைவராய் இருந்தவர் கார்வஜால். அரசின் படைத் தலைவர் சென்டெனோவைப் பலமுறை கலகத்தின்போது ஓட ஓட விரட்டியிருக்கிறார். கடைசியில் கார்வஜால் அரசின் படையால் சூழப்பட்டுக் கைது செய்யப்பட்டார். சென்டெனோவின் கண்காணிப்பில் கார்வஜால் விட்டு வைக்கப்பட்டார். சென்டெனோவும் அவரை மிக மரியாதையுடன் கவனித்துக்கொண்டார். ஒரு நாள் கார்வஜால் கேட்டார்: "ஐயா, என்னிடம் இவ்வளவு தயவுடன் நடந்துகொள்ளும் நீங்கள் யார் என்று சொல்வீர்களா?"

"சென்டெனோவைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?" என்று பதில் கொடுத்தார் அவர்.

"கேள்விப்படுவதாவது, நன்றாகத் தெரியுமே அவரை. அவர் நீங்கள்தானா? பல தடவை உங்கள் முதுகை மட்டும்தான் பார்த்திருக்கிறேன், முகத்தைப் பார்க்கவில்லை. அதனால்தான் கேட்க நேர்ந்தது" என்றார் பொல்லாத கார்வஜால்.

ப்பூ...இதற்காகவா!

பிர்ரஸ் என்ற அரசனின் அந்தரங்க ஆலோசகர் சினியாஸ். நாடுகளை மேலும் மேலும் கைப்பற்ற வேண்டுமென்ற அரசனின் பேராசையைத் தவிர்க்க விரும்பினார் சினியாஸ். இத்தாலியை முதலில் வென்று கைப்பற்ற விரும்பிய அரசனை, "அதன் பின் என்ன செய்யப் போகிறீர்கள் அரசே?" என்று கேட்டார்.

"பிறகு சிசிலி நாட்டின் மீது படை எடுத்து அதைக் கைப்பற்றுவோம்."

"பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கடவுள் நம் பக்கமாக இருந்தால், ஆப்பிரிக்காவையும், கார்த்தேஜையும் கைப்பற்றுவோம்!"


"அதன் பிறகு?"

"அதன் பிறகு நாம் ஓய்வு எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் விருந்து வைத்து நமது நண்பர்களை எல்லாம் சந்தோஷமடையச் செய்வோம்."

"அரசே, மற்ற நாடுகளின் மீது படையெடுக்காமல் இப்போதே தினமும் விருந்துகள் நடத்தி நண்பர்களை சந்தோஷமடையச் செய்யலாமே?" என்று அமைதியாகக் கூறினார் சினியாஸ்.

(பிரான்ஸிஸ் பேகன் கட்டுரையிலிருந்து)

- ஸ்ரீதேவி



நினைத்ததும் நடந்ததும்!

டில்லிக்குச் செல்பவர்கள் குதுப்மினாரைப் பார்த்திருப்பார்கள். ஆனால் குதுப்மினாருக்கு அருகே அலாய்மினார் என்று ஒன்று இருப்பது தெரியுமா?

டில்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜி குதுப்மினாரைப் போல் இரு மடங்கு பெரிதாக உள்ள அலாய்மினாரைக் கட்டத் திட்டமிட்டு அதற்கான வேலையை கி. பி. 1311ல் ஆரம்பித்தாராம். ஆனால் அவரது ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஏற்பட்ட தொந்தரவுகளின் காரணமாகக் கட்டட வேலை முதல் கட்டத்தைத் தாண்டாமலே நின்றுவிட்டது. அலாவுதீனின் நிறைவேறாத ஆசையின் சின்னமாக உள்ள அலாய் மினாரையும் அருகே கம்பீரமாக நிற்கும் குதுப்மினாரையும் புகைப்படங்களில் காணலாம்.



— முத்தரசபுரம் ரங்கநாதன்

உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு படி நெல்லில் 14,400 நெல்களும், ஒரு படி அரிசியில் 38,000 அரிசிகளும், ஒரு படி எள்ளில் 1,15,200 எள்களும் இருக்குமாம். வேணுமானால் எண்ணிப் பாருங்களேன்!
- புலியை ஆங்கிலத்தில் 'டைகர்' என்கிறோம். ஆனால் இது ஆங்கில சொல் அல்ல. பாரசீக மொழியில் அம்புக்கு 'டைகர்' என்று பெயர். அம்பு போல் பாய்வதால் புலிக்கு 'டைகர்' என்ற பெயர் உண்டாயிற்று.
- ஈரேழு பதினான்கு உலகங்கள் என்கிறோமே, அவை இவைகள்தாம்: பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோகம் என்னும் ஏழும் மேலுலகங்கள்; அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாலம்—கீழுலகங்கள்.- பி.வி. கிரி


பாவம் தசைகள்!

உங்கள் வாயையொட்டியுள்ள தசைகளுக்கு வாயிருந்தால் அவை அழும்! ஒரு வார்த்தை பேசுவதற்கு நாம் 72 தசைகளை இயக்க வேண்டும்! பாவம் தசைகள்! அவற்றிடம் கொஞ்சம் கருணை காட்டலாகாதா? இன்னும் கேளுங்கள்:



- நாம் சுவாசிக்கும் பொழுது ஒவ்வொரு தடவையும் முப்பது கன அங்குலக் காற்றை உள்ளே இழுக்கிறோம்.
- ஒரு நாளில் நாம் 25920 தடவை சுவாசிக்கிறோம்.
- நாம் சாப்பிடும் சாப்பாடு வாயில் ஒரு நிமிஷ நேரத்துக்குக் குறைவாகவும் இரைப்பையில் மூன்று மணி நேரமும் சிறு குடலில் பத்து மணி நேரமும் தங்குகிறது.
- நம் உடம்பில் 59 சதவிகிதம் தண்ணீர் இருக்கிறது.





"தென்னை மரத்துக்குத் தேள் கொட்டிற்றாம், பனை மரத்துக்கு நெறி கட்டிற்றாம்!"

இந்தப் பழமொழி உண்மையானதாக இருக்குமா என்ற சந்தேகம் எல்லாருக்கும் உண்டு. ஆனால் "நுநீடேன்" என்னும் இடத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று சான்று பகருகிறது.

மரிலின் மெக்கீடியா என்னும் இருபத்திரண்டு வயதுக் கன்னிப் பெண்ணுக்குத் திடீரென்று இடுப்பு வலி கண்டது. பிரசவ வேதனையினால் துடிதுடித்தாள். ஆனால் உண்மையில் அவள் கருவுற்றிருக்கவில்லை. திருமணமாகாத ஒழுக்கம் நிறைந்த கன்னிப் பெண் அவள்!

அவளுக்கு இந்த வேதனை ஏற்பட்டானேன்? அவளுடைய குடும்பத்தினர் பெருவியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் ஸ்ரீமதி எலின் பெல்லி என்பவள் தன் கணவனோடு வசித்து வந்தாள். அவளுக்கு ஏழரைப் பவுண்டு நிறையில் ஆண் மகவு ஒன்று பிறந்திருக்கிறது என்னும் செய்தி வந்த பின்னரே அவர்கள் சற்று ஆறுதல் பெற்றார்கள். அது மட்டுமா? வலியினால் துடித்த அந்தப் பெண்ணும் வலி நீங்கிச் சுகம் பெற்றாள்.

மரிலினும் எலினும் அதிசய இரட்டைப் பிறவிகள். இருவரும் ஒருவரையொருவர் உயிராக நேசித்தனர். கர்ப்பமாயிருந்த காலத்தில் எலினுக்கு எந்தவிதமான தொந்தரவும் உண்டாகவில்லை; கருவுற்றிருப்பதற்கான அறிகுறிகள் கூட எதுவும் தோன்றவில்லை. ஆனால் கருவுறாத மரிலினிடமோ......? கருவுற்றிருப்பதற்கான பல அறிகுறிகள் தென்பட்டன. மயக்கம், மசக்கை, வாந்தி, உடல்நிறை அதிகரிப்பு எல்லாமே அவளுக்கு ஏற்பட்டிருந்தன.

இரட்டைச் சகோதரிகளின் தாய் கூறுகிறாள்: "இவ்விரு பெண்களும் சிறு பிராயத்திலிருந்தே இப்படித்தான் இருக்கிறார்கள். யாருக்கும் காரணம் விளங்கவில்லை. இருவருக்கும் இடையே அப்படி என்ன தொடர்போ, அந்நியோந்நியமோ ஆண்டவனின் சிருஷ்டி விசித்திரத்தை என்னவென்பது?"

இரவில் மாலை!



திருமுருக கிருபானந்த வாரியார் 7-7-65 அன்று ஆழ்வார்க்குறிச்சியில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் சொற்பொழிவாற்றினார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போது அவருக்கு மாலை போட்டனர். அப்போது இரவு மணி 9. வாரியார் உடனே, "இரவிலும் மாலை வருகிறதே!" என்று கூறி எங்களைச் சிரிக்க வைத்தார்.

மறுமுறை, வனவேடன் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்ததை விளக்கினார். அவ்வேடனது மீசை தர்ப்பைப் புல்லாகவும் அவனது வாய் தங்கக் கலசமாகவும், அவனது பல் வைர மணிகளாகவும் நாக்கு மாவிலையாகவும் அவன் தன் வாயில் கொண்டு வந்து அபிஷேகம் செய்வித்த அந்நீர் திவ்விய நீராகவும் இருந்ததாம் என்றார். எங்கள் மேனி சிலிர்த்தது.

— வேங்கடேசுவரன்

கண்ணாடியும் ...... முட்டாளும்!



"ஒரு முறை ஒரு பெண் பெர்னார்ட்ஷாவைக் காண வந்தாள் கையில் டம்பப் பையோடு. எப்படியாவது ஷாவை மடக்கி விடவேண்டும் என்பது அவள் எண்ணம். ஷாவிடம், "இன்று எப்படியும் ஒரு முட்டாளைப் பார்த்து விடுவது என்ற நிர்மானத்துடன் புறப்பட்டேன்!" என்றாள் அவள்.

"வழியில் கைப்பையில் உள்ள கண்ணாடியை எடுத்து உங்களை ஒருமுறை பார்த்துக்கொண்டிருப்பீர்களே!" என்று திருப்பிக் கேட்டாராம் ஷா.



மொரார்ஜி ஹோட்டல், மொரார்ஜி சைக்கிள் கடை இவைகளாவது பரவாயில்லை. ஸ்வாமி! இதோ கோவையிலிருந்து வெளி வரும் தினசரி ஒன்றில் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய நகை வியாபாரியாக இருந்த ஒரு ஸ்தாபனத்தின் மூன்றுவித விளம்பரங்கள்:

1. சமையல் பாத்திரங்கள் வாடகைக்குக் கிடைக்கும்.
2. சீட்டுக் கட்டுக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.
3. திராவகங்கள் (Acids) விற்கப்படும்.

அண்ணே! ஒன்னேத்தான் மொரார்ஜி அண்ணே! நீ பதினாறும் பெத்துப் பெரு வாழ்வு வாழணும்னு இருபத்திரண்டு காரட் தெய்வத்தை நான் வேண்டிக் கொள்ளாத நாளே இல்லே!

— ஆர். எஸ். மணி



அமெரிக்க ஸ்பிரிங்பீல்டு கல்லூரி கூடைப் பந்தாட்டப் பந்தயத்தில் சில ரஸமான காட்சிகள்.

நடிக்காத படம்......



அன்றுமாலை மன்றத்தில் எம். ஜி. ஆர். மேடை மீது ஏறிச் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்தார். திடீரென ஒரு போலீஸ்காரர் வந்து அவரைக் கட்டிப் பிடித்தார். அதைக் கண்டு கூடியிருந்த ரசிகப் பெருமக்கள் சற்றும் பிரமிக்கவில்லை. ஏனென்றால் போலீஸ் உடைக்குள் புகுந்துகொண்டிருந்தவர் திரு சிவதாணு என்பது அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்ததுதானே! அப்பாவின் ஆசை நாடகத்துக்குத் தலைமை தாங்கிய திரு எம். ஜி. ஆர்., திரு டி. கே. சண்முகம் அவர்களது கோரிக்கைக்கு இணங்கித் தாம் மறுபடியும் நடிகர் சங்கத்தில் முக்கிய பொறுப்பேற்றுப் பணிபுரியப் போவதாகத் தெரிவித்ததும்தான் நடிகர் சிவதாணு ஆனந்தமிகுதியால் எம். ஜி. ஆரைக் கட்டிப்பிடித்து உலுக்கினார்!

அதே சொற்பொழிவின்போது இன்னுமொரு ரசமான தகவலையும் வெளியிட்டார் திரு எம். ஜி. ஆர். உத்தமபுத்திரன் கதையை சிவாஜியையும் எம். ஜி. ஆரையும் வைத்துத் தனித்தனியே இரு படங்கள் எடுக்க ஏற்பாடாகியிருந்தது. அப்போது பலர் எம். ஜி. ஆரிடம் வந்து போட்டி மனப்பான்மையைத்தான் தூண்டிவிடுகிறார்களாம். அந்தருணத்தில் திரு சண்முகம் எம். ஜி. ஆரை நேரில் சந்தித்து இம்மாதிரி போட்டா போட்டிகளில் இறங்கினால் நட்சத்திரங்களுக்கு மட்டுமல்ல; படவுலகுக்கே நஷ்டம். ஒரு படம் தோல்வி அடைந்தால் தொடர்ந்து அந்த நட்சத்திரம் நடிக்கும் வேறு பல படங்களும் தோல்வியுறும். அவரை நம்பிப் பணம் போட்டவர்களின் கதி என்ன ஆவது? ஆகவே நீங்கள்தான் ஒருதலைப் பட்சமாக விட்டுக் கொடுக்க வேண்டும் என்றாராம். சண்முகத்தின் யோசனையை அப்படியே ஏற்றுக் கொண்டார் எம். ஜி. ஆர். தாம் சிறுவனாக இருந்து நாடகங்களில் சில்லறை வேஷங்கள் தரித்து வந்த காலத்திலேயே பெரும்புகழ் ஈட்டி வந்த திரு சண்முகத்தினிடம் தமக்குள்ள மதிப்பை இவ்வாறு வெளிப்படுத்திய எம். ஜி. ஆர். அப்பாவின் ஆசை நாடகத்தில் நடித்த சிறுவர் சிறுமியருக்கு முத்து மாலைகள் பரிசளித்து உச்சி மோந்து ஆசீர்வதித்தார். ★

1891ம் வருஷம் டாக்டர் ஜேம்ஸ் நயிஸ்மித் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார். ஸ்பிரிங்பீல்ட் கல்லூரியிலுள்ள சில விஷமக் கோஷ்டி மாணவர்களின் கவனத்தைத் திருப்புவதற்குப் புதிய விளையாட்டொன்றைக் கண்டுபிடிப்பதில்தான் அவர் தவித்துக் கொண்டிருந்தார். கடைசியில் அவர் மனத்தில் புதிய விளையாட்டைக் கண்டுபிடித்த திருப்தி நிலவியது. ஒரு பழைய 'பீச்' பழக் கூடையொன்றை பால்கனிக் கைப்பிடியில் பொருத்தித் தாம் கண்டுபிடித்த புதிய விளையாட்டைப் பற்றிப் பதினெட்டு மாணவர்களுக்கு விளக்கினார். கூடைப் பந்தாட்டம் அமெரிக்காவில் ஸ்பிரிங்பீல்ட் கல்லூரியில் பிறந்து விட்டது. இன்று இந்தக் கூடைப் பந்தாட்ட விளையாட்டு அகில உலகமும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.


இந்தக் கூடைப் பந்து பிறந்த மண்ணிலிருந்து அந்தக் கல்லூரி மாணவர்களே சென்னைக்கு வந்து விளையாடப் போகிறார்கள் என்றால் சென்னை கூடைப் பந்து ரசிகர்களுக்குக் கொண்டாட்டந்தானே! ஜூலை 31ந் தேதி ஸ்பிரிங்பீல்டு கல்லூரி கோஷ்டியினரின் இருபிரிவுகளுக்குள்ளேயே நடக்கும் போட்டியைக் காண வேங்கடநாராயண ரோட் நகரசபை மைதானத்தில் திரளாக ரசிகர்கள் கூடியிருந்தனர். 'நீங்கள் மட்டும்தான் வரணுமா? எனக்கு அனுமதிச் சீட்டு இல்லையா?' என்று கேட்டுக் கொண்டே, ஸ்ரீமான் வருணபகவான் அழைப்பின்றியே வந்து சேர்ந்து விட்டார்! இந்த அழைப்பில்லாமல் வரும் 'பெரிய மனிதரை'த் தடுத்து நிறுத்திவிட முடியுமா? ஸ்பிரிங்பீல்ட் கல்லூரி கோஷ்டியினரின் ஆட்டத்தைப் பார்ப்பதற்குப் பதில் வருண பகவானின் திருவிளையாட்டைத்தான் அன்று காண முடிந்தது.

இரண்டாம் நாளாவது ஸ்பிரிங்பீல்ட் கோஷ்டியினருக்கும் சென்னை ராஜ்ய கூடைப் பந்தாட்டக் குழுவினருக்கும் நடக்கும் போட்டியைக் கண்டுவிட வேண்டும் என்ற ஆவலில் ரசிகர்கள் மழைக் கோட்டு, குடை சகிதம் ஆஜராகியிருந்தார்கள். நல்ல காலம்! வருணபகவான் ஆட்டம் முடிந்ததும் தலைகாட்டினார். ரசிகர்களுக்கு நல்லதோர் ஆட்டத்தைக் கண்ட திருப்தி ஏற்பட்டது.

பிறந்த மண் விளையாட்டென்றால் அது தனி விசேஷம்தான்! ஸ்பிரிங்பீல்ட் கல்லூரி ஆட்டக்காரர்கள் நுணுக்கத்துடன் ஒவ்வொரு பந்தையும் தட்டித் தட்டிக் கூடையில் போட்ட விதம் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. நம் சென்னை கோஷ்டியினரும் தங்களால் முடிந்தவரையில் கூடையில் பந்தைப் போட்டார்கள். சென்னை கோஷ்டியில் ரூபின் விளையாட்டு மெச்சும்படியாக இருந்தது. அமெரிக்க கோஷ்டியில் வாரென்ஸ் டியூஹரும், வியான் டேவிஸும், பால் வாக்கரும் கூடைக்குள் பந்தைப் போட்ட வண்ணம் எண்ணிக்கையைப் பெருக்கினார்கள். அமெரிக்க ஸ்பிரிங்பீல்ட் கோஷ்டியினர் 97 எண்ணிக்கை எடுத்து வெற்றிக்கொடி நாட்டினார்கள். சென்னை கோஷ்டியினர் 58 எண்ணிக்கை எடுத்து அமெரிக்கக் கோஷ்டியினரைச் சதத்துக்கு மேல் போகாமல் தடுத்தார்களே, அது பாராட்டும்படியான செயல்தான்!

ஸ்பிரிங்பீல்ட் கல்லூரியிலிருந்து பத்து மாணவர்களும் கோஷ்டியின் தலைவர் டாக்டர் எட்வர்ட் ஸ்டீவன்ஸ், கோச் டோனி ஸ்காலினிக்கும், பீபீ வாக்கரும் வந்திருந்தார்கள். அவர்கள் சென்னையில் எக்ஸிபிஷன் விளையாட்டு ஆடியதோடு, கூடைப் பந்தாட்ட நுணுக்கங்களை நம் ஆட்டக்காரர்களுக்கு விளக்கும் பல 'கோச்சிங் வகுப்பு'க்களையும் நடத்தினர்.

அமெரிக்காவில் மஸ்ஸாசூஸெட்ஸிலுள்ள ஸ்பிரிங்பீல்ட் கல்லூரி உடல் பலம், உடற்பயிற்சி, பொழுதுபோக்கு ஆகிய துறைகளில் பயிற்சியளிப்பதில் பிரசித்தி பெற்றது. கூடைப் பந்தாட்டத்தைக் கண்டு பிடித்த பெருமை இந்தக் கல்லூரிக்குக் கிடைப்பதோடு, வாலிபால் ஆட்டத்துக்கு அந்தப் பெயரைச் சூட்டிய பெருமையும் அதற்குச் சாரும்.



சிறுமையான சிந்தனைகள்

திரு ஆர். ராஜகோபால் :

பொதுஜனங்களுடைய கலை ரசனைக்கும் பொழுது போக்குக்கும் ஒரே நேரத்தில் இன்று உதவுவது நாடகத் துறைதான். இசை நாட்டியம் முதலிய பொழுதுபோக்குகளைத் தேடிப் போவோர்களைவிட இப்போதெல்லாம் நாடகம் பார்க்க வருபவர்கள் பல மடங்கு அதிகம். பெரிய சபாக்கள் தங்கள் அங்கத்தினர்களுக்காக ஒரே நாடகத்தை இரண்டு நாட்கள் தொடர்ந்து ஏற்பாடு செய்வதே இதற்குச் சான்று.

ஆனால் இந்தத் துறையிலேயும் ஜாதி பேதம், வகுப்பு வாதம் எல்லாம் நுழைந்து கொண்டு சங்கடப்படுத்துகின்றன. அமெச்சூர், ப்ரொபஷனல்ஸ் என்ற பிரிவுகளைத் தான் குறிப்பிடுகிறேன். பொதுஜனங்களிலே பலபேருக்கு இன்னும் அமெச்சூர்கள் என்றால் ஒருவகை அலட்சிய மனப்பான்மை! 'இவர்களாலே என்ன செய்ய முடிகிறது?' என்று நல்ல அமெச்சூர் தயாரிப்புகளைப் பார்க்காமலே தூக்கியெறிந்து பேசிவிடுகிறார்கள் சிலர்!

பதினாறு வருஷங்களுக்கு முன்னே எங்க மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து நான் காரியதரிசியாகப் பணி செய்து வருகிறேன். எங்கள் குழு அங்கத்தினர்களும் பல நாடகங்களை நடித்திருக்கிறார்கள்; நடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி நானும் பல அமெச்சூர் குழுக்களுடைய நாடகங்களைப் பார்க்கிறேன். நன்றாகவே உழைத்து முயற்சி செய்து நல்ல பெயர் வாங்கவேண்டும் என்றுதான் அவர்கள் பல சிரமங்களைப் பாராட்டாமல் நாடகங்கள் போடுகிறார்கள். ஆனாலும் இந்த ரசிகர்கள் என்னவோ, ப்ரொபஷனல் நாடகங்களுக்கு டிக்கட்கள் வாங்கிப் போய் உட்கார்ந்து ரசிக்கக் காண்பிக்கும் ஆவலில் ஒரு பகுதியைத்தான் அமெச்சூர் விஷயங்களில் காண்பிக்கிறார்கள். இந்தப் பட்சபாதத் தன்மை மறையணும், என்றால் இந்த வர்க்க பேதமும் மறையணும்! அமெச்சூர், ப்ரொபஷனல்ஸ் என்ற வித்தியாசம் போகணும்! இரண்டு சாராரும் பொழுது போக்கு லட்சியத்தை ஒட்டித் தானே கலையை உபாசிக்கிறார்கள்! தரத்தை மட்டும் அளவுகோலாகக் கொண்டு பார்த்து ரசிக்கும் காலம் வர வேண்டும்.

அமெச்சூர் குழுக்களில் திறமைசாலிகளுக்குப் பஞ்சம் என்று சொல்ல முடியாது. இன்று நல்ல நடிகர்கள் பல குழுக்களில் பங்கு பெற்று நடிக்கிறார்கள். நல்ல நாடகங்களைத் தேர்ந்தெடுத்தோ எழுதச் சொல்லியோ மேடை ஏற்றுகிறார்கள். புதிய புதிய உத்திகளையும் கையாளுகிறார்கள். தொழில் நாடகத் துறையினர் பார்த்து வியக்கும் அளவுக்குக் கூடப் புது நுணுக்கங்களை, அதாவது டெக்னிக்குகளைப் புகுத்துகிறார்கள். நாடகங்களுக்குத் தலைமைதாங்கும் பிரமுகர்களும் கலைஞர்களும் அந்த வேளையில் பாராட்டுதலாக 'ஆஹா ஓஹோ' என்று நாலு வார்த்தைகள் சொல்லிவிட்டு, மேடையை விட்டு இறங்கி உடனே வீட்டுக்குத் திரும்பும்போதோ அல்லது முன் வரிசை ஆசனத்தில் போய் அமர்ந்தவுடனே தங்கள் வார்த்தைகளை மறந்து விடுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து நினைவில் வைத்துக் கொண்டாலோ அல்லது கலை வளர்ச்சிகளுக்கு உதவி செய்யும் ஸ்தாபனங்களிடம் இரண்டு வார்த்தை சொல்லிவைத்தாலோ தானே அமெச்சூர்களுக்குப் பொருளாதார உதவியும் உற்சாகமும் கிடைக்கும். அவர்கள் ஏனோ அப்படிச் செய்வதில்லை. திட்டப் பிரசாரம், மற்றும் பல பொதுப் பணிப் பிரசாரம் இவைகளை நாடக உருவில் அமைத்து அமெச்சூர்கள் மூலம் பொதுஜனங்களை உணரச் செய்யலாம். ஆனால் இந்த மாதிரி விஷயங்களில் கூட ப்ரொபஷனல்ஸ்களைத்தான் நாடுகிறது. ஏன்? ரயில்வே பிரயாண கன்செஷனை எடுத்துக் கொள்ளலாமே! அதற்குக் கூடவா அமெச்சூர்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது?

ஒரு சபாவில் ப்ரொபஷனல்ஸ் நாடகம் நடிக்க ஏற்பாடு செய்தால் அவர்கள் எத்தனை, 'கண்டிஷன்ஸ்' போடுகிறார்கள் தெரியுமா? அது வேண்டும், இது வேண்டும் என்றெல்லாம் ஆர்ப்பாட்டம். ஆனால் எத்தனை புகழ் பெற்ற அமெச்சூர் குழுவாக இருந்தாலும் அவர்கள் சபாக்காரர்கள் போடும் 'கண்டிஷன்'களுக்கு இணங்கத்தான் வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் அவர்கள் வாங்கும் பணத்தில் ஆறில் ஒரு மடங்கு கூட அமெச்சூர்கள் வாங்குவதில்லை!



இந்த மாதிரி விஷயங்கள் அமெச்சூர் குழுவினருக்கு மிகவும் பாதகமாகத்தான் இருக்கின்றன. பத்திரிகைக்காரர்களும் பல சந்தர்ப்பங்களில் இந்த விருப்பு வெறுப்புக்குப் பாத்திரமாகி விடுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்னைகள் மறைய வேண்டும். அல்லது இந்தப் பிரச்னைகளுக்கு மூலகாரணமாக உள்ள பிரிவினை மறைய வேண்டும்!

நாடகத்துறையில் பயில்முறை, தொழில்முறை என்ற பாகுபாடு அவசியமா ?

வேண்டாம் என்பவர்: திரு ஆர். ராஜகோபால் காரியதரிசி, மயிலாப்பூர் ஆர்ட்ஸ் நாடகக் குழு.

வேண்டும் என்பவர்: திரு எஸ். வி. சகஸ்ரநாமம், சேவா ஸ்டேஜ்.

திரு எஸ். வி. சகஸ்ரநாமம் :

நண்பர் ராஜகோபால் எனக்கு நீண்ட நாட்களாக அறிமுகமுள்ளவர். தங்கமான மனிதர். ஆனால் அதற்காக அவர் சொல்வதற்கெல்லாம் 'ஆகா! பேஷ்' என்று என்னைப் போல் நாடகத்தைத் தொழிலாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் சொல்லிவிட முடியுமா?

அமெச்சூர்களுக்கு நாடகக் கலை முழுக்க முழுக்கப் பொழுது போக்கு அம்சம். வாதி படைத்தவர்கள், ஓய்வு நேரங்களில் ஒன்று கூடி இந்தக் கலையைக் கையாளுகிறார்கள்! ஆனால் எங்களைப் போன்றவர்களுக்கு உணவுப் பிரச்னையே நூற்றுக்கு நூறு இதிலேதானே இருக்கு! நாங்கள் அசிரத்தையாக இருக்கக் கட்டுப்படியாகாது! ஆகவே நான் முழுவதும் இதற்காக உழைக்கிறோம். அதனால் நாங்கள் திட்டமிட்ட அளவுக்கு எங்கள் திறமையை வெளிக் காட்ட முடிகிறது. ரசிகர்கள் நம்பிக்கையுடன் வருகிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண் போவதில்லை. அமெச்சூர் நடிகர்களைப் பொறுத்தவரை, மயிலாப்பூரில் போடும் நாடகத்துக்கும், மாம்பலத்தில் போடும் நாடகத்துக்கும் ஒரே நாடகமாக இருந்தாலும் நிறைய வித்தியாசங்கள் தோன்றி விடுகின்றன. காரணம், அந்த நடிகர்கள், அன்றன்றைய மனோ நிலைப்படி உற்சாக மிகுதியாகவோ உற்சாகக் குறைவாகவோ நடிப்பில் ஈடுபடுகிறார்கள். ஏன்? ஒரே நாடகத்திலகூட பாத்திரத்தின் தன்மையே ஆரம்பத்துக்கும் முடிவுக்கும் இடையில் முரண்பாடு அடைந்து விடுகிறது சில சமயங்களில். நாங்கள் இத்தகைய முரண்பாடுகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம்.

இதோட அல்லவோரம், நாங்க கடைப் பிடிக்கிற முறையிலே இருக்கு. அனேகமாக எல்லா காரெக்டர்களுக்கும் இரண்டு பேர்களைத் தயாரித்து விடுவோம். எந்த நெருக்கடியிலும் ஒரு ஆள் இல்லை என்றால் மற்றொரு ஆள் அந்த வேடத்தைத் தாங்கி வெற்றியடைந்துவிடுவான். அமெச்சூர்களில் அந்த மாதிரி இல்லை. ஒரு முக்கிய ஆள், உடம்பு சௌகரிய மில்லாமல் படுத்தாலோ, கோபித்துக் கொண்டு போனாலோ நாடகம் நடத்த முடியாது. எங்களில் ஒருவன் கலபமாகக் கோபித்துக் கொண்டு போக முடியாது. காரணம் அவன் இதனால் சம்பாதித்துப் பிழைக்க வேண்டும்!



அமெச்சூர்க் குழுக்களில் திறமைசாலிகள் இருக்கிறார்கள். உண்மை! ஆனால் அதில் பெரும்பான்மையினர் தங்கள் தங்கள் உள்ளங்களில் ஓர் ஆதரிச சினிமா புருஷனை ஆவாஹனம் செய்து கொண்டு அவனைப் போல் நடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஒருவிதத் தனித்துவம் இல்லாமல் போய் விடுகிறது. பார்ப்பவர்கள் நினைவு அந்த அசல் சினிமா புருஷன் பின்னால் போய்விடுகிறதே தவிர அவனுக்குப் புகழ் அஞ்சலி செய்ய நினைத்து நடிக்கும் நடிபரிடம் நிற்பதில்லை. நாங்கள் இந்த வகையில் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறோம்.

நண்பர் ராஜகோபால் அமெச்சூர் நகைச்சுவை நடிப்பைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நான் சொல்கிறேன். அன்றாடப் பத்திரிகை நியூஸ்களை மேடையில் அவர்கள் கொட்ட ஆர்வம் காண்பிக்கிறார்கள். எடுத்துக் கொண்ட நாடகத்தில் நிரந்தரமான ஒரு நகைச்சுவை ஓட்டம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டுமே தவிர அன்றாட விஷயங்களை நம்புவது அவ்வளவு நன்றாகவா இருக்கிறது? மேலும் அவர்கள் கதைப் போக்கு நகரத்தையே சுற்றிச் சுற்றி வருகிறது. நகரத்தைப் பார்க்காத வெளியூர் வாசிகள் இந்த நாடகங்களைப் பார்க்கும் போது புரியாமல் விழிக்கிறார்கள்.

எங்கள். தில்லை நாயகம், வடிவேல் வாத்தியார் போன்ற நாடகங்களை எடுத்துக்கொள்ளுங்களேன். எந்த ஊரிலும் அந்த நாடகங்களில் வரும் பாத்திரங்களைத் தங்கள் ஊர்க்காரர்களுடன் இணைத்துக் கொண்டு விடுகிறார்கள்! அதனால் சுவை ஏற்படுகிறது.

அமெச்சூர்களுக்குத் தாராளமாகவே ரயில்வே கன்செஷன் கிடைக்கட்டும். நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அத்தகைய சலுகை எங்களுக்கு அதி முக்கியம். காரணம், எங்களுக்குச் செலவு அதிகம். இன்றைய புதுமைகளையும் நுணுக்கங்களையும் தொழில் முறைத் துறைதான் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

எங்களுக்கு இல்லாத ஒரே அட்வாண்டேஜ் — நன்மை, அவர்களுக்கு உண்டு! அவர்கள் தவறு செய்தால் பொதுஜனங்கள் மன்னித்து விடுவார்கள். ஆனால் எங்களை மன்னிக்க மாட்டார்கள்! அமெச்சூர் அமெச்சூர்தான்! ப்ரொபஷனல் ப்ரொபஷனல்தான்! நாடகக் கலை வளர வேண்டுமானால் இந்தப் பிரிவு மறையக்கூடாது.



லக்ஷ்மி சிரிக்கவில்லை

ரா. கணபதி

மோனா லிஸாவின் மோகனச் சிரிப்பைப் பற்றி மேல் நாட்டு ரஸிகர்கள் எவ்வளவோ சொல்லியும் அதை அவர்களால் மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியவில்லை. ஏனென்றால் அவர்களாலேயே அந்தப் புதிர்ச் சிரிப்பை இன்னதென்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஸௌபாக்கியவதி லக்ஷ்மி கடந்த சில வாரங்களாக ஒரு சிரிப்புச் சிரித்து வருகிறாள். இந்தச் சிரிப்பின் அர்த்தமும் புரிந்துகொள்ள இயலாததாகவே இருக்கிறது.

ஆனால் மோனா லிஸாவின் சிரிப்புக்கும் ஸௌ. லக்ஷ்மியின் சிரிப்புக்கும் ஒரு பெரிய வித்தியாசம். முன்னவளின் சிரிப்பை, 'மோகன'ச் சிரிப்பு என்று சொல்லி விட்டு அது எதனால் மோஹிக்கச் செய்கிறது என்று சொல்லத் தெரியாமல் திண்டாடுகிறார்கள். ஸௌ. லக்ஷ்மியின் சிரிப்பை 'மோகனம்' என்று சொல்வது தகாது. அவள் சிரிக்கும் அந்த அதிசயச் சிரிப்பில் மோஹிப்பதற்கு எதுவும் இல்லை. அதில் ஒரு கௌரவமே கமழுகிறது. அந்தச் சிரிப்பைப் பார்ப்பவர்களுக்கு அவளிடம் மதிப்பும் மரியாதையும் செலுத்த வேண்டும் என்றே தோன்றும்.

கண்ணீர்த் துளிக்குத்தான் இத்தகைய கம்பீரமுண்டு; சிரிப்புக்குக் கிடையாது என்பார்கள். ஆனாலும் இதோ பிரத்தியட்சமாக, ஸௌ. லக்ஷ்மியின் சொந்தத் தகப்பனாராகிய ஸ்ரீமான் சபேசன் அவர்களே அவள் சிரிக்கும் போது பெண்ணிடம் ஒரு மரியாதை உணர்ச்சி பெறுகிறார். பெற்ற மகளுக்கே தாம் மரியாதை செலுத்த வேண்டிய நிலையைத் தீர்ப்பதற்காக இன்று வரை பல நடவடிக்கைகள் எடுத்து விட்டார்!

ஆனால் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் அவள் அதே மர்மச் சிரிப்பைச் சிரித்துச் சபேசனைக் குழப்பி வருகிறாள்!

முதன் முதலில் அவள் அந்தச் சிரிப்பைத் தவழ விட்ட கதையைப் பார்ப்போம்:

அன்று தொழிலதிபர் ஸ்ரீமான் சபேசன் தமது காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்தவுடனேயே தமது மனைவியாள் சிவகாமியிடம் உற்சாகமாக விஷயத்தைக் கூறலானார். அப்போது அவரது அருமை மகள் லக்ஷ்மியும் உடன் இருந்தாள்.

"இன்றைக்கு ரொம்பவும் சுபச் சேதி. பண்டிட் காசிராஜ் என்று டில்லிக்காரன் ஒருவன். ஆருடம் சொல்வதிலும் கைரேகை பார்ப்பதிலும் சக்கரவர்த்தி என்றே பட்டம் பெற்றவன். வேறு ஏதோ காரியமாக ஆபீசுக்கு வந்திருந்தான். அப்படியே என் கையை இழுத்து வைத்துப் பார்த்தான். 'அடாடா, ரொம்ப நல்ல சமாசாரம். உங்களுடைய மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் நெருங்கிக் கொண்டே யிருக்கிறது. அவள் கல்யாணத்துக்கு அப்புறம் உங்கள் தொழிலே பெரு மலையாக வளரப் போகிறது' என்றான். 'மாப்பிள்ளை எப்படி இருப்பான், எங்கேயிருந்து வருவான்?' என்று நான் கேட்டுக் கொண்டிருக்கும் போதே நம் ராமு அறைக்குள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்தவுடன் காசிராஜ் க்ஷணகாலம் கண்ணை மூடிக் கொண்டான். கண்ணைத் திறந்தவுடன் என்னைப் பார்த்து, 'இந்தப் பிள்ளையாண்டானின் கையில் சக்கிரமேட்டில் அழுத்தமாக ஒரு சக்கரம் இருக்கிறதா பாருங்கள்' என்றான். சக்கிரமேடு என்றால் என்ன என்று புரிந்து கொண்டு ராமுவின் கையைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! காசிராஜ் சொன்னாற் போலவே சக்கரம் இருந்தது. 'இந்தப் பிள்ளைதான் உங்கள் மாப்பிள்ளை. உங்கள் பெண்ணைக் கைப்பிடித்த வேளை இவர் மகாராஜனாக உயரப் போகிறார்' என்றான் காசிராஜ். உடனேயே கிளம்பியும் விட்டான். வீட்டுக்கு வந்து எல்லோர் கையையும் பார்க்க வேண்டுமென்று எவ்வளவோ சொன்னேன். அவனோ டில்லி 'காரவெல்'லுக்கு நாழிகையாகிவிட்டது என்று ஒரே அவசரமாகக் கிளம்பி விட்டான். குறைந்த பட்சம் நாலு மந்திரிகளாவது தங்கள் எதிர்காலத்துக்காக என்ன சாந்தி செய்ய வேண்டும், என்ன விரதமிருக்க வேண்டும் என்றெல்லாம் தெரிந்து கொள்ள இவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். ஆயிரம் ரூபாய் 'கன்ஸல்டேஷன்' வாங்கிக் கொண்டு பறந்து விட்டான்.



"ஆயிரம், ரூபாய் டெக்கட்டும். எவ்வளவு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டான்! பாதிக் கலியாணமே ஆனாற்போல நிம்மதியா யிருக்கிறது. ராமுவுக்குத்தான் என்ன குறைச்சல்? ஒன்றுதான் கொஞ்சம் இடறிற்று. சம்பந்தியகம் என்று சொல்லிக் கொள்ள அப்படியொன்றும் அவர்கள் அந்தஸ்துக்காரர்கள் இல்லை. ராமுவுக்கு நான் என்னதான் சம்பளம் போட்டுத் தந்தாலும், அவனுக்குப் பிக்கல் பிடுங்கல் அதிகம்தான். வீட்டுக்குத் தலைப் பிள்ளை. நாலைந்து தம்பி, தங்கைகள். படிக்க வைத்து, கலியாணம் செய்து எல்லாம் ஆக வேண்டும். அதெல்லாம்கூட நாம் செய்து விடலாம். ஆனால் சம்பந்தி என்று நாம் சொல்லிக் கொள்ள அவனுக்கு ஒரு 'ஸ்டேடஸ்' இல்லை. அதனாலென்ன? ராமுவை

லக்ஷ்மி சிரித்தாள். தனக்குக் கலியாணமாகப் போகிறது என்றும், கலியாணத்துக்கும் பின் கணவன் தன்னுடன் தன் பிறந்த வீட்டிலேயே இருக்கப் போகிறான் என்றும் அறிந்தால் எந்தப் பெண்தான் மகிழ்ச்சியுற்றுச் சிரிக்கமாட்டாள்? ஆனால் லக்ஷ்மி சிரித்ததற்கு இந்த மகிழ்ச்சிதான் காரணமா? மாறாக, அவள் மகிழ்ச்சியடைந்தபோது சிரித்தாளோ?

ரா. கணபதி எழுதிய இவ்வாரத்திய சிறப்புச் சிறுகதையைப் படித்தால் லக்ஷ்மி சிரித்ததற்கும், சிரிக்காததற்கும் காரணம் தெரியும்.

இனி நம் வீட்டிலேயே ஒரு பிள்ளையாக வைத்துக் கொண்டால் போயிற்று'' என்று முடித்தார் சபேசன்.

ராமு உபகாரச் சம்பளம் பெற்றே பொறி இயற்பட்டத்துக்குப் படித்து அதில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றவன். 'சபேசன் இண்டஸ்ட்ரீஸி'ல் அப்ரெண்டிஸ்ஸாக எடுத்துக் கொள்ளப்பட்டான். மூன்று வருஷங்களுக்குள்ளேயே தன்னுடைய அபாரத் திறமையினால் மளமளவென்று உத்தியோக உயர்வு பெற்றான். சபேசனுடைய வீட்டுக்கும் அவன் அடிக்கடி வந்திருக்கிறான். அழகும், அறிவும், குணமும் பொருந்திய அவனை மருமகனாக்கிக் கொள்வதில் சிவகாமிக்குக் கொள்ளை சந்தோஷம். அவர் யோசனையை மிகவும் வரவேற்றுப் பேசினாள். ''என்ன பெரிய இடம் வேண்டிக் கிடக்கிறது? நம் கைக்கு அடக்கமாக இருக்கிற சரக்கே சிலாக்கியம்'' என்றாள்.

''லக்ஷ்மி, உன் அபிப்பிராயத்தைச் சொல்லம்மா. உன் பூரண திருப்தியோடு தான் இதில் நான் பிரவேசிக்க வேண்டும்'' என்றார் சபேசன்.

அந்தச் சுப முகூர்த்தத்தில்தான் லக்ஷ்மி தனது புதிர்ச் சிரிப்பை முதன் முறையாகச் சிரித்து வைத்தாள்.

'சம்மதம்' என்கிற சந்தோஷச் சிரிப்பாகவோ, சந்தோஷத்துடன் நாணமும் சேர்ந்த பவ்வியச் சிரிப்பாகவோ அது சபேசனுக்குப் படவில்லை. சம்மதமில்லை என்று மறுக்கிற சிரிப்புமல்ல அது. அப்படியானால் அதற்கு அர்த்தம்தான் என்னவாம்?

''உன் மனசில் என்ன இருக்கிறது, குழந்தே? தயங்காமல் சொல்லு. ராமுவை விடப் படிப்பும், பதவியும், அழகும் அதிகமானவன்தான் வேண்டுமென்றால் இப்போதே இவனை மறந்து விடுகிறேன். ஆனால் ஒன்று. ராமுவானால் நம் அகத்தோடு வைத்துக் கொள்ளலாம். நீ இங்கு எங்களோடேயே எப்போதும் சுதந்திரமாயிருக்கலாம். பிள்ளையகம் கைதாழ்ந்தது என்பதற்குப் பிரதியாக இந்த அநுகூலங்கள் இருக்கின்றன'' என்றார் சபேசன். அவர் சொன்னதையே சங்கதிகளும், கல்பனா ஸ்வரமும் போட்டுப் பாடுகிறாள் சிவகாமி.

இதற்கெல்லாம் பதிலாக....

லக்ஷ்மி அந்தச் சிரிப்பையே மீண்டும் ஒரு முறை சிரித்தாள்.

''வாயைத் திறந்து சொல்லம்மா. உனக்குச் சம்மதம்தானே?'' என்று பெற்றோர் வினவினர்.

''சம்மதம் இல்லாமல் இல்லை'' என்று அவள் சுற்றி வளைத்துச் சொல்லிவிட்டு ஓடி மறைந்தாள்.

ராமுவைக் குறித்து லக்ஷ்மிக்கு எவ்விதத் திலும் அதிருப்தி இருக்க முடியாது என்று சபேசன் கருதினார். ராமுவையும், லக்ஷ்மியையும் அறிந்த எவரும் இப்படித்தான் கருதுவர்.

'ஆனாலும் அவள் ஏன் அப்படிச் சிரிக்க வேண்டும்? அந்தச் சிரிப்பின் அடியில் சொல்லக்கூடாத ஏதோ ஒன்று இருந்ததே. அது வெறும் வெட்கமா? இல்லை...வேதனையா? வேதனை என்றால் எதற்கு?' யோசித்தார் சபேசன். பிள்ளை வீடு என்பது லக்ஷ்மி பெருமைப்படும்படியாகவோ, தன் சகிகளிடம் பெருமை யடித்துக் கொள்ளும்படியாகவோ இல்லை என்பதை அவர் உணர்ந்தார். இந்த வேதனையைத் தீர்ப்பதற்காகவே அவர் தம் அருமந்தக் குமரியிடம் பிள்ளையகத்து அந்தஸ்துக் குறைவாயிருப்பதன் 'அநுகூலங்களை' மீண்டும் மீண்டும் கூறினார்.

மீண்டும் மீண்டும் அவள் அந்தச் சிரிப்பையே சிரித்து வந்தாள்.

'இனி அவளை அப்படிச் சிரிக்க வைக்கக் கூடாது' என்ற முடிவுக்கு வந்தார் சபேசன். ஏனென்றால் அவள் அப்படிச் சிரிக்கும்போதெல்லாம் அவளுக்கு மரியாதை செலுத்த வேண்டும் போல அவருக்குத் தோன்றும். தாம் 'சிறிய' இடத்தில் அவளைக் கலியாணம் செய்து கொடுத்து அவளுக்கு அவமரியாதை செய்வது போலவும், அதைக் குத்திக் காட்டவே அவள் இப்படி மரியாதையை ஈர்க்கும் மர்மச் சிரிப்புச் சிரிப்பதாகவும் அவருக்குத் தெரிந்தது.

''சரி, உனக்கு இஷ்டமில்லாவிடில் இந்த இடம் வேண்டாம்'' என்றே முடிவாகச் சொன்னார்.

''எனக்கு இஷ்டமில்லாமலில்லை'' என்றே அவளும் அதைவிட முடிவாகச் சொன்னாள்.

திருமணம் முடிந்த கையோடு பிள்ளை வீட்டுக்குப் பெண்ணை அழைப்பார்களே!

அதற்கு மகளைத் தயார் செய்யும் பாணியில் சபேசன் லக்ஷ்மியிடம் சொன்னார்: ''அவர்கள் அகம் உனக்கு ரொம்பவும் முன் பின்னாகத்தான் இருக்கும். 'ஸ்டேடஸ்' ஒரு பக்கம் என்றால் சம்பந்தியம்மாளின் குணமும் 'ஒரு மாதிரி'தானாம். காளி என்கிறார்கள். சம்பிரதாயம் என்பதால் இரண்டு நாள் பல்லைக் கடித்துக் கொண்டிரு'' என்றார்.


அவ்வளவு தூரம் அவர் சொன்ன பிறகாவது அவளுக்குக் கொஞ்சம் பயம் ஏற்படு

வேண்டுமே! ஊஹூம்! அதே புதிர்ச் சிரிப்பைச் சிரிக்கிறான்.

தம்மைப் போலவே தமது மகனும் 'அரிஸ்டோக்ராடிக்'காக இருப்பதில் இவ்வளவு காலம் பெருமைப்பட்டு வந்த சபேசனுக்கு, இப்போது அவன் தம்மை விட 'அரிஸ்டோக்ராடிக்'காக இருப்பதைக் காண எரிச்சலே உண்டாயிற்று. ஆனாலும் செல்வக் குமாரியாயிற்றே, எரிந்து விழ முடியுமா?

ஏதோயோசனை செய்தவராக, "வேண்டாம்மா, நீ அவர்களகத்துக்குப் போகாமலே பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

சகவாரா! இப்போதும் அந்தப் பாழாய்ப் போன சிரிப்பேதானா?



"விலாசத்தில் போய் இட்லி, அசோகாவில் வடை, நாசப் பிரகாஷாவில் தோசை, உட்லண்ட்ஸில் காப்பி சாப்பிடுவதற்காகத்தானா நான் உனக்கு ஸ்கூட்டர் வாங்கித் தந்தேன்?"

காலம் சபேசனுக்கு பேருதவி செய்தது. 'காலம்' என்றால் காலம் காட்டுகிற கடிகாரம்.

அப்போது உதகமண்டலத்தில் உலகத்தின் பிரசித்தி பெற்ற கடிகார நிபுணர்கள் ஒரு முக்கியமான ஆராய்ச்சி செய்து முடித்திருந்தனர். ஸ்விட்ஜர்லாந்தில் போலவே உதகமண்டலத்திலும் கடிகாரம் செய்வதற்கேற்ற விசேஷமான சீதோஷ்ணம் இருப்பதாக இவர்கள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்தனர். இந்தச் சமாசாரம் அன்று காலைப் பத்திரிகையில்தான் வெளியாகியிருந்தது. உடனே சபேசனின் அறிவு, 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்று குதூகலித்தது.

மேற்படி நிபுணர்களிடம் கலந்தாலோசித்துவிட்டுத் தாமே உதகையில் கடிகாரத் தொழிலைத் தொடங்கினால் என்ன என்று சபேசனின் தொழிலறிவு பரபரத்தது. இதற்காக ராமுவை உடனடியாக உதகைக்கு அனுப்பி வைப்பதன் மூலம்....

இரண்டாவது மாங்காயையும் வீழ்த்த எண்ணினார் அவர்.

'உதகையில் ராமு பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிக்க ஒரு மாதமாவது ஆகும். அதற்கிடையிலேயே விவாகத்தை வைத்துக் கொள்ள வேண்டும். விவாகமான கையோடு அவசரமாக அவனை மீண்டும் உதகைக்கு அனுப்பிவிட வேண்டும். அப்போது லக்ஷ்மியையும் சேர்த்து அனுப்பி வைத்துவிட வேண்டும். இதனால் இப்போது அவன் புக்ககம் போகிற அவமானத்தைத் தவிர்ப்பது மட்டுமின்றி, உதகையிலிருந்து இளம் தம்பதி திரும்பும்போது நேரே அவர்களைத் தம் வீட்டுக்கே வரவழைத்து விட்டால்...அப்படியே ராமுவைத் தம் வீட்டிலேயே 'ஜோதியில் கலக்க'ச் செய்து விடலாம். இல்லாவிடில் உள்ளூரிலிருந்த பெற்றோரிடமிருந்து அவனைக் 'கட்' செய்வது அவ்வளவு எளிதல்ல' - இப்படியெல்லாம் திட்டமிட்டார் சபேசன்.

ராமுவின் தந்தையை அணுகி 'நைச்சியமாக'ப் பேசினார்: "குழந்தையை உங்கள் கையில் ஒப்படைக்க எனக்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? இன்றைக்குப் பாருங்கள், பேப்பரில் நியூஸ் வந்திருக்கிறது. ஊட்டிக்கு வந்திருக்கும் ஸ்விட் வாட்ச் எக்ஸ்பர்ட்டுகளோடு ரொம்ப முக்கியமான கன்ஸல்டேஷன் செய்ய வேண்டியிருக்கிறது.

இந்தக் கலியாணக் காரியமெல்லாம் இடைப்பதால் நான் கிளம்புவதற்கில்லை. நான் போகவில்லையென்றால் அடுத்த பட்சம் நம் ராமுதான். அவனை இன்றைக்கே ஊட்டிக்கு அனுப்பினால்தான் தேவலை. அவன் கலியாணத்துக்கு மட்டும் தலையைக் காட்டி விட்டு, உடனே மறுபடியும் புறப்பட வேண்டியிருக்கும். அவனோடு குழந்தையையும் அனுப்பலாமென்று நினைக்கிறேன். 'நம்' அகத்தில் அழைக்காமல் இப்படி அனுப்புவது சரியில்லை என்றாலும்..." என்று இழுத்தார்.

சம்பந்தி பிராமணரோ தமக்குப் பட்டாபிஷேகமே செய்தாற்போல் மகிழ்ந்துவிட்டார். ஆணைப்பட்ட சபேசன் தம்மிடம் வந்து வேண்டுகோள் விடுப்பதா? முகமெல்லாம் பல்லாகப் பேசினார்: "அடாடாடா, இதில் சரியில்லாமல் என்ன? நீங்கள் எது செய்தாலும் சரிதான். இதற்காக என்னை வந்து நீங்கள் கேட்பதா? ராமு உங்கள் பொருள். நீங்கள் அவனுக்கு எது செய்தாலும் அது தான் சிரேயஸ்" என்றார் அந்த 'ஸ்டேடஸ்' அற்ற மனிதர்.

விவாக சுப முகூர்த்தமும் அல்லோலகல்லோலமாக நடந்து முடிந்தது.

"நீ உன் மாமனாருக்கு ராணியாகவும், மாமியாருக்கு ராணியாகவும், மைத்துனர்களுக்கு ராணியாகவும், நாத்திமார்களுக்கு ராணியாகவும் விளங்குவாய்!" என்கிற மகத்தான வேத மந்திரங்கள் தம் அருமைப் பெண்ணை நோக்கி மொழியப்பட்டபோது சபேசன் பூரித்துப் போனார்.

தொழிலதிபரான அவருக்கு அதிகாரத்தால் ஆளுவது பற்றித்தான் தெரியும்; அன்பினால் ஆளுவது பற்றித் தெரியாது.

ராமுவும் லக்ஷ்மியும் உதகைக்குக் கிளம்பும்போது சபேசன் குடும்பத்தினர் வழியனுப்புவதற்காக ரயில் நிலையம் சென்றிருந்தனர். லக்ஷ்மியின் கடைசித் தம்பி லக்ஷ்மணன், "நானும் வருவேன்" என்று முரண்டு செய்தான். லக்ஷ்மி தனது மலர்ந்த கண்களால் குழந்தையைப் பார்த்தாள். "உன் மாமனார்

உன்னை அனுப்பி வைப்பாரடா" என்றாள் சிரித்துக்கொண்டே.

சிரிப்பு என்றால்-தெய்வமே, அந்தப் புதிர்ச் சிரிப்புத்தான்! 'இவளை எப்படித்தான் திருப்தி செய்வதோ, தெரியவில்லையே!' சபேசனுக்குத் தெரியத்தான் இல்லை.

ராமுவை லக்ஷ்மி சகிதமாக உதகையிலிருந்து நேரே தம் வீட்டுக்கு வரவழைத்தார் சபேசன். அதிலிருந்து வெகு நாசூக்காக அவனைத் தம் வீட்டு அங்கத்தினனாகவே செய்து கொண்டு விட்டார். ஊரிலிருந்து அவன் கொண்டு வந்திருந்த அவனுடைய பெட்டி, படுக்கை, மற்ற உடைமைகள் அவர் வீட்டிலேயே ஐக்கியமாகி விட்டன. இன்னும் அவன் வீட்டிலிருந்த பீரோ, உடுப்புக்கள் போன்றவற்றைக் கொண்டு வர வேண்டியது தான் பாக்கி. அதை நாசூக்காகச் செய்வது எப்படியென்றே அவரது சாதுரிய அறிவு யோசித்துக் கொண்டிருந்தது.

உதகமண்டலத்திலிருந்து கொண்டு வந்திருந்த காலி ஃப்ளவர், வெள்ளை ரோஜா, இவற்றையெல்லாம் வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்து பார்த்திருந்தாள் லக்ஷ்மி. காலி ஃப்ளவர் மறுநாளே செத்துவிட்டது. வெள்ளை ரோஜா பிழைத்துக் கொள்ளும் என்ற அறிகுறி தெரிந்தது. தோட்டத்தில் தந்தையுடனும் கணவனுடனும் உலாவி வரும்போது லக்ஷ்மி சொன்னாள்: 'பிறந்த மண்ணை விட்டு வேறிடத்தில் சில செடிகள்தான் வளரும் போலிருக்கிறது. அந்த நாள் பெண்களைப் போல்; அல்லது...' என்று பேச்சை நிறுத்தினாள். பேச்சைவிடச் சுரீலென்கிற அந்தச் சிரிப்பைச் சிரித்து அப்பாவைக் கதிகலங்கச் செய்தாள். அப்பா மட்டுமின்றி, இம்முறை அவளது அகமுடையானும் அசடு வழிந்தான்!

சபேசன் ஊகித்ததிலிருந்து லக்ஷ்மி ராமுவிடம் நெருக்கமாக இல்லை என்றே தோன்றியது. அவனது பிறந்த வீட்டு ஸ்டேட்டஸை அவள் மன்னிக்கவே மாட்டாள் போலிருக்கிறது என்று கருதினார். 'மாமனார் வீட்டில் அவன் தங்கினாலும் அவனுடைய இயற்கையான ஸ்டேடஸ் உயர்ந்துவிடாது என்று தான் இப்போது அவள் கட்டிக் காட்டுகிறாளா? எப்படியானாலும் வேறு வழியில்லை. அவனை இங்கேயே வைத்துக் கொண்டால் தான் காலக்கிரமத்தில் மெள்ள அவளுக்கு அவனிடம் பரிவு ஏற்படும்' - இப்படி யெல்லாம் எண்ணினார் சபேசன்.

அவளோ தந்தை கணவன் இருவரும் தவிப்பதைக் கவனியாதவளாகவே சர்வ சகஜமாக, "இன்றைக்குப் பாகவதப் பிரவசனம் பூர்த்தியாகிறதாம். கலிகாலத்தின் போக்கை யெல்லாம் பற்றிச் சாஸ்திரிகள் சிரிக்கச் சிரிக்கப் பேசுவாராம். போகலாமா?" என்று கேட்டாள்.

அவள் விருப்பப்படியே அவர்கள் அன்று உபந்நியாசத்துக்குப் போனார்கள். ஆனால் சாஸ்திரிகள் கலியின் கோலத்தைப் பற்றிச் சிரிக்கச் சிரிக்கப் பேசவில்லை. கோபாவேசமாகத்தான் பேசினார். கலியில் பிள்ளைகள் பெற்றோரைப் புறக்கணிப்பார்கள் என்பதைச் சொல்லி, 'தேகத்துக்காகப் பாரியாளுடன் இருப்பது எவ்வளவு அவசியமோ, அதுமாதிரி தருமத்துக்காக மாதா - பிதாவுடன் இருக்கத்தான் வேண்டும்' என்றார். 'உன் பிதாவுக்குப் பணிவு இல்லை, மாதா காளியாக இருக்கிறாள் என்றால் கலியாணமே செய்து கொள்ளாதே. கலியாணம் செய்துகொண்டு அவர்களை விலக்கினால் அம்பாள் பொறுக்க மாட்டாள்' என்று பயமுறுத்தினார்.

சபேசன் தம்பதிக்கும் ராமுவுக்கும் அவர் பேசியதுதான் பொறுக்கவில்லை. ஆனால் லக்ஷ்மியோ, 'உபந்நியாசகர் சிரிக்கப் பேசுவார்' என்று தான் சொன்னதை நிலைநாட்ட வேண்டுமென்றோ என்னவோ, இப்போது சிரித்துக் கொண்டிருந்தாள் — தன்னுடைய அந்த விசேஷச் சிரிப்பைத்தான்.

சபேசனுடைய மனத்தைப் போலவே வானமும் குழம்பிக் கிடந்தது.

நீண்ட நேரம் யோசித்து விட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக ராமுவைத் தேடி வந்தார். அப்போது ராமுவுடன் லக்ஷ்மியும் இருந்தாள். "ராமு, இதில் நான் பேதகமாக எதுவுமே நினைக்கவில்லை. உன் சௌகரியத்தை முன்னிட்டுத்தான் சொல்கிறேன்" என்ற பீடிகையுடன் தொடங்கினார் சபேசன்.

"சீக்கிரமே உன்னை ஆபீஸில் மானேஜராக்க நினைத்திருக்கிறேன். அதற்கப்புறம் உனக்குப் பொறுப்பும் அதிகம். இதுவரை இருந்தது போல் நேரம் பார்த்து ஆபீஸ் வந்து போவது முடியாது. ஆபீஸுக்குப் பக்கத்திலேயே நீ இருந்தால்தான் சௌகரியம். அதனால் நம் அகத்துடனேயே நிரந்தரமாக இருந்துவிடுவது என்று முடிவு செய்து கொள். ஆபீசுக்குப் பக்கத்திலேயே உன்னை உன் மனுஷாளுடன் குடித்தனம் வைப்பதற்குத்தான் நினைத்தேன்..."

இந்தப் பொய்க்குப் பலமளிப்பதற்காகத் தொண்டையைக் கனைத்து விட்டுக்கொண்டு சபேசன் தொடர்ந்தார்: "ஆனால் உன் தங்கை தம்பியை யெல்லாம் நீ அங்கேயே பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறாய். அதனால் இந்த 'ஸ்கூல் - இயர்' முடிகிறவரையும் அவர்களை 'டிஸ்லொகேட்' செய்வது சரியில்லை, நீ மட்டும்....நான் சொல்வது சரிதானே?"

அவர் சொல்வது சரியில்லாவிட்டாலும் அதற்குத் தலையாட்டி ஒப்புதலளிக்க ராமு தயார்தான்!

"நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன், மாமா!" என்று அவரிடம் ராமு மரியாதையுடன் கூற,


லக்ஷ்மியோ அவரை மரியாதை செலுத்தத் தூண்டுகிற புன்னகையை அநாயாசமாக மலர்த்தினாள்.

அந்தச் சிரிப்பைக் கவனிக்காதவர் போல் சபேசன் தம்முடைய சமர்த்து மாப்பிள்ளையிடம் பேசினார்:

"இன்றைக்கு நல்ல நாள். நீ இப்போது என்ன செய்கிறாய் என்றால் நம் காரை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போகிறாய். உன்னோடு லக்ஷ்மியும் வருகிறாள். பின்னாலேயே நம் லாரியும் வருகிறது. நான் இப்


தோல்வி அவனை எதிர்நோக்கி நின்றது!
அவன் என்னவோ நன்றாகப் படித்துக் கொண்டுதான் வந்தான். ஆனால் பரீட்சைக்கு சில வாரங்களே இருந்தபோது அவனுக்குப் படிப்பில் அக்கறையே இல்லாமல் போய்விட்டது...
அவனை டாக்டரிடம் அழைத்துச் சென்றோம். படிப்பில் அதிக நேரம் செலவழித்ததால் ஏற்பட்ட ஓய்ச்சல் மட்டும் அல்ல அது என்றும், செலவழியும் சக்தியை ஈடு செய்யும் போதுமான போஷாக்குக் கிடைக்காமையும் காரணம் என்று டாக்டர் சொன்னார்.
Horlicks
டாக்டர் சிபாரிசு செய்தபடியே அவனுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தோம். விரைவிலேயே மீண்டும் உற்சாகத்துடன் படிக்க ஆரம்பித்ததோடு பரீட்சையிலும் முதன்மையாகத் தேறினான். எல்லாம் ஹார்லிக்ஸ் செய்த நன்மைதான்!
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
யளிக்கிறது!
Horlicks

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1965 ஆகஸ்டு 29 — 1965 செப்டம்பர் 22

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்:

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி
புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்வீஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1965 ஆகஸ்டு 30 — 1965 செப்டம்பர் 23

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஸிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்;

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை -1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

பேசாது சொன்னதை யெல்லாம் உன் அப்பாவுக்குக் கடிதமாக எழுதியிருக்கிறேன். அதை அவரிடம் கொடுத்து நீயும் பக்குவமாக விஷயத்தை விளக்கிச் சொல்லு. அம்மாவும் இதில் வித்தியாசமாக நினைக்க இடமில்லை. அவரிடமும் 'ஸர்க்கம்ஸ்டான்ஸை'ப் புரியுமாறு எடுத்துச் சொல்லு. அப்பா—அம்மா ஆசீர்வாதம்தான் முக்கியம். இரண்டுபேரும் அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணி விட்டுக் கிளம்புங்கள். லாரியில் உன் பொருள்களை யெல்லாம் எடுத்து வந்துவிடு.

''ராகுகாலம் வருவதற்குள் கிளம்புங்கள். மழை வேறு இருட்டிக் கொண்டு வருகிறது'' என்று அவர் அவசரப்படுத்தும்போதே பயங்கரமாக ஒரு கோடையிடி இடித்தது. காலை வேளையிலேயே கண்ணைப் பறிக்கிற மின்னலும் மின்னிற்று.

லக்ஷ்மியின் சிரிப்புப் போதாதென்று சபேசனைக் கலக்க இவையெல்லாம் வேறு?

ராகுகாலம் நெருங்கிக் கொண்டே யிருந்தது. பிசுபிசுவென்று மழையும் தொடங்கி விட்டது.

ராமு வாசலில் குறுக்கும் நெடுக்குமாகக் குட்டி போட்ட பூனைபோல் உலவிக் கொண்டிருந்தான். 'அப்பா அம்மாவை விட்டு வருவதென்றால் சஞ்சலம் இருக்காதா?' என்று அவனைப் போனால் போகிறதென்று மனத்துக்குள் மன்னித்த சபேசன், ''ஏனப்பா, லக்ஷ்மி இன்னும் கிளம்பவில்லையா?'' என்று கேட்டார்.

''லக்ஷ்மி...அவள்...வந்து.... நீங்கள்தான் போய்ப் பாருங்களேன்'' என்று குழறினான் ராமு.

என்னமோ, ஏதோ என்று எண்ணியவராக லக்ஷ்மியின் அறைக்கு விரைந்தார் சபேசன். ராமு அவரைப் பின் தொடர்ந்தான்.

அந்த அறையில் வேலையாட்கள் ராமுவின் பெட்டி படுக்கை இவற்றோடு லக்ஷ்மியின் பெட்டி, படுக்கை இத்தியாதிகளையும் வெளியே எடுத்துச் செல்லச் சித்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

சபேசனுக்குப் பரம வியக்தமாக விஷயம் புரிந்துவிட்டது. ராமுவுடன் புக்ககம் போகும் லக்ஷ்மி அங்கேயே தங்கிவிட முடிவு செய்திருக்கிறாள்! ஏன் அப்படி?

லக்ஷ்மி மெல்ல வந்து அவருக்கு நமஸ்கரித்தாள். அவள் உடலோடு உள்ளமும் துவண்டது அவருக்குப் புரிந்தது. அவருக்கும் உள்ளம் துவளத்தான் செய்தது. கரகரத்த குரலில், ''தீர்க்க சுமங்கலியாகப் பிள்ளைக் குழந்தையைப் பெற்றுக் கொண்டு'' என்று ஆசீர்வதித்த போதே,—

அவள் சிரித்தாள்.

அந்தப் புதிர்ச் சிரிப்புக்குள்ளே இருந்த நோவு இப்போது ஓரளவுக்கு வெளிப்படவே தெரிந்தது.

'ஆமாம், பிள்ளையைப் பெறுவதால் தாய்க்கு என்ன பிரயோஜனம்?' என்ற கேள்வியே அந்தச் சிரிப்பில் அடங்கியிருக்கிறதோ என்று கூடச் சபேசன் நினைத்தார்.

இருந்தாலும் அவருக்கு முழு விவரமும் புரியவில்லை. புரிந்ததையும் ஏற்றுக் கொள்வதற்கு மனத்தில் திராணி இருக்கவில்லை. எனவே மூட்டை முடிச்சுக்களை நோக்கிக் கண்ணை ஒரு சுற்று விட்டவர், மனைவியைப் பார்த்து, ''இதெல்லாம் என்ன?'' என்று கேட்டார்.

அந்த அம்மாள் ஏதும் பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் ஈயாடாமலே நின்றனர் அந்த சதிபதி. ராமுவும் பேசவில்லை.

அந்தக் கம்பீரமான மழை இருட்டில், யாரும் பேசவொண்ணாத கம்பீரமான மௌனச் சூழலில் தன்னொருத்தியால்தான் பேச முடியும் என்பது போல் லக்ஷ்மியே ஆரம்பித்தாள்.

அவள் இத்தனை காலமாக அவ்விஷயத்தைப் பேசித் தீர்க்க விரும்பத்தானில்லை. ஆனால் அவளது மௌனத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அவளைச் சுற்றி இருந்தவர்களுக்கு இல்லாததால் இன்று பேசித் தொலைக்க நேர்ந்தது. அதனாலென்ன? அப்போது வெளியே பெய்துகொண்டிருந்த மழை கூட மௌனமாகத்தான் காரியம் செய்ய விரும்பியது. மேகங்கள் மௌனமாகவேதான் இளகிக் கொண்டிருந்தன. ஆனாலும் இடி இடிப்பதை அதனால் தடுக்க முடியவில்லையே! மேகம் இடித்துத்தான் தீரவேண்டுமெனில், லக்ஷ்மியும் பேசித்தான் தீர வேண்டும். காற்றிலே உப்பிக்கொண்டிருக்கும் ஜன்னல் திரைகளின் இடுக்கு வழியாகத் தெரிந்த மழை வானத்தைப் பார்த்தே அவள் பேசினாள்:

''இந்த மழை ஜலம் எங்கிருந்து வருகிறது என்று யார் கண்டார்கள்? அட்லான்டிக் சமுத்திரத்திலோ, பசிபிக் சமுத்திரத்திலோ எங்கேயோ பிறந்த மேகம் இத்தனை ஆயிரம் மைல்கள் தாண்டி வந்து இங்கே நம் மண்ணில் பெய்து, நம் மண்ணோடு ஒன்றுகிறது. எங்கிருந்தோ வந்த மேகங்களோடு, எத்தனையோ கோடி மைல்களுக்கு அப்பாலுள்ள சூரியனோடு, இதோ இந்தக் காம்பவுண்டி

லிருக்கிற சின்னஞ் சிறிய புல் பூண்டுகள் கூட உறவு கொண்டாடி வளருகின்றன. எப்படி தேசத்துப் பருத்தி இங்கே நம் வீட்டுக்கு ஜன்னல் திரையாக வந்து வெயிலும் புழுதியும் சாரலும் உள்ளே வராமல் நம்மை ரட்சிக்கிறது.

''உலகமெல்லாம் ஒரு குடும்பமாகத்தான் இருக்கிறது. மனிதர்களுக்குத்தான் அது மறந்து போய்விட்டது. முன் பின் தெரியாத இடத்துக்கு வந்து இதம் தரும் காற்றையும் மேகத்தையும் போல் பெண்களால் வாழ முடியாதா? பழைய பாசங்களை வளர்ப்பதற்குத்தானே பெண்? அழிப்பதற்கு இல்லையே! பந்துக்களை ஒட்டுவதற்குத்தானே பெண்? வெட்டுவதற்கு இல்லையே! இதையெல்லாம் ஒரு பெண்ணின் தாய் தந்தையரும் கணவனும் ஏன் மறந்தார்கள்? பனாரஸ் பட்டும், வைர நெக்லேஸும், ஹனிமூனும், சினிமாவுமா ஒரு பெண்ணுக்கு அவளுடைய பெற்றோரோ கணவனோ தருகிற கலியாணப் பரிசு? பரிசு பெறுபவளுக்கு ஒரு கௌரவம் தரவேண்டாமா? 'இந்தப் பரிசுப் பொருளை உன்னிடம் நம்பிக்கை வைத்துத் தருகிறேன்' என்று சொல்லி அவளிடம் தரக்கூடிய ஒரு பண்டம் இல்லாமல் போய்விட்டதா? ஒரு பெண்ணுக்கு அளிக்கக்கூடிய மிக உயர்ந்த கலியாணப் பரிசு அவளுக்கு ஒரு புக்ககம் உண்டு என்ற உணர்ச்சியை உண்டாக்குவதுதானே?

''புக்ககம் தாழ்ந்த நிலையில் இருந்தால் அந்த நிலைக்கு ஒரு பெண்ணால் பணிந்து போக முடியாதா? பர்வத ராஜனின் அருமைக் குமாரியான அம்பாள் சுவாமியோடு சுடுகாட்டுக்குப் போய்ப் பூதங்களிடையே வாசம் செய்தாள் என்று கதை கேட்டு என்ன புண்ணியம்? மாமியார் சரியாக இருக்க மாட்டார் என்றால் மாட்டுப் பெண்ணால் அவரைச் சரி செய்ய முடியாதா? இருவருக்கும் ஒத்துப் போகாது என்றே வைத்துக் கொண்டாலும் சண்டை போட்டுக் கொண்டே சேர்ந்திருக்கிற ஸ்வாதீனமும் உரிமையும் மாமியார்–மருமகளுக்கு இடையே இல்லையா?...''

இப்படிப் பேசி வந்த லக்ஷ்மி பெற்றோரைத் திரும்பிப் பார்த்தாள். மானபங்கமுற்ற குரலில் ''நீங்கள் என்னை ரொம்பவும் அகௌரவப்படுத்திவிட்டீர்கள். பெண்ணாகப் பிறந்த அம்மாவே என்னை இப்படிச் செய்திருக்க வேண்டாம்! அதோடு அப்பா, நீங்கள் அவரையும் அகௌரவப்படுத்தி விட்டீர்கள்'' என்று சொல்லி வரும்போதே அந்தப் பத்தினிப் பெண் பேச முடியாமல் திணறினாள். அவளது கண்கள் நீரில் பளபளத்தன.



கணக்கு வாத்தியார்:- என்ன இந்தக் கணக்குக்கு விடை சரியா வர மாட்டேங்குது?

மாணவன்:- என்ன அப்பா இன்னிக்குக் காலையிலே தானே அம்மா உனக்குச் சொல்லிக் கொடுத்தாங்க. அதுக்குள்ளே மறந்துட்டியே?

வானத்தில் சிரித்து உலாவிக் கொண்டிருந்த மேகங்கள் தங்கள் உள்ளத்தைப் பொழியும்போது உருகி வழிந்தது போலவே, லக்ஷ்மியிடம் தவழ்ந்த சிரிப்பு இன்று தன் உள்ளத்தை உருக்கிக் கொண்டு கண்ணீராக வழிந்தது.

சிரிப்புக்குத் தன்பால் மரியாதையை ஈர்த்துக்கொள்ளும் கௌரவம் கிடையாது என்பது வாஸ்தவம்தான். இத்தனைக் காலம் லக்ஷ்மி சிரித்து வந்த அந்த மரியாதைக்குரிய சிரிப்பின் அடியில் — மரியாதைக்குப் பாத்திரமான — இந்தக் கண்ணீர்த் துளி மறைந்து வாழ்ந்திருக்கிறது!

லக்ஷ்மியைத் தாம் எவ்விதத்தில் அவமரியாதை செய்தோமென்பதையும், அவள் எந்த மரியாதையை எதிர்பார்த்தாள் என்பதையும் சபேசன் இன்றுதான் புரிந்து கொண்டார்.

இப்போது அவளுடைய மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்றே அந்தக் கண்ணீர்த் துளி சமயம் பார்த்து உருண்டு வந்து அவளைப் பேசவொட்டாமல் தடுத்தது. ஆம், அவள் தொடர்ந்து பேசியிருந்தால் தன் கணவனின் குற்றத்தையும் சொல்லியிருப்பாள். அவன் தன் பெற்றோருக்கும் கௌரவம் செலுத்தவில்லை, தான் தாலிகட்டிய மனைவிக்கும் கௌரவம் செலுத்தவில்லை, தான் யாருக்குக் கௌரவமளிப்பதாக எண்ணினானோ அந்த மாமனார்–மாமியாருக்கும் கௌரவம் செலுத்தவில்லை, முடிவில் தனக்கே கௌரவம் தேடிக் கொள்ளவில்லை என்ற உண்மையை அந்தப் பத்தினிப் பெண் சொல்லி விடாமல் கண்ணீர்த் துளிகள் சமய சஞ்சீவியாக அவளை ரட்சித்தன.

லக்ஷ்மி கண்ணீரை வழித்து விட்டுக் கொண்ட போது, மஞ்சளும், குங்குமமும், புஷ்பமும், தேங்காயும், தாம்பூலமும் அடங்கிய சுமங்கலத் தட்டுடன் தன்னை நோக்கி அம்மா வருவதையும், அங்கிருந்த மூட்டை முடிச்சுக்களில் இரண்டை அப்பாவே காருக்கு எடுத்துச் செல்வதையும், மனைவியினால் தன் கௌரவத்தையும் உணர்ந்த கணவன் மாமனாரிடம் கம்பீரமாக விடை பெறுவதையும் கண்டாள். 'உங்கள் பெண்ணைக் கைப்பிடித்த வேளை இவர் மகாராஜனாக உயர்வார்' என்று முன்பு காசிராஜ் அப்பாவிடம் கூறிய ஆருடம் இன்றுதான் பலித்தது என்று எண்ணி உவகை பூத்தாள்.

ஆனாலும் இப்போது லக்ஷ்மி சிரிக்கவில்லை– அவளது பிரசித்தி பெற்ற புதிர்ச் சிரிப்பை நிச்சயமாகச் சிரிக்கவில்லை.

வானமும் இடி இடிக்காமலே 'சோ' வென்று பொழிந்தது.

அத்தியாயம் 23

உஷாவின் விஜயம்

ஆரம்ப விழாவின்போது பேசிய ஒன்றிரண்டு பிரசங்கிகள் கூறியது போல் வெள்ளிக் குத்துவிளக்கை மந்திரி தீனதயாளு தமது பொற்கரத்தால் ஏற்றி வைத்துத் தாமரைத் தொழிலகத்தை அங்குரார்ப்பணம் செய்து பல நாட்கள் ஓடி மறைந்து விட்டன. திறப்பு விழாவின்போது அந்தப் பக்கமே எட்டிப் பாராத உஷா பின்னால் ஒரு சமயம் திடுமென முன்னறிவிப்பில்லாமல் தன் தோழிகள் சிலருடன் வந்து சேர்ந்தாள்.

இயந்திரங்கள் ஓடும்போது எழும் ஓசையிலிருந்து தப்புவதற்காகக் கண்ணாடிச் சுவர்களுடன் கூடிய ஒரு தனி அறையை உருவாக்கிக் கொண்டிருந்தான் தங்கப்பன். பைல்களைப் புரட்டவும், கடிதங்கள் எழுதவும், வரவு செலவுக் கணக்குகளைக் கவனிக்கவும், மாருதியுடனும் என்ஜினியர் குமாரனுடனும் ஆலோசனைகள் நடத்தவும் அந்தக் காரியாலய அறை பயன்பட்டது. கண்ணாடிச் சுவர்கள் மூலம் சுற்றுப்புறத்தை — தொழிலகத்தில் பணியாற்றுவோரைச் சதா கண்காணித்துக் கொண்டுமிருக்க முடியும்.

கையில் எத்தனை 'ஆர்டர்கள்' உள்ளன, மேலும் எவ்வளவு எதிர்பார்க்கலாம், அவற்றைத் தயாரிக்க அடுத்த ஆறு மாதங்களுக்கு எத்தனை இரும்புத் தகடுகளுக்குப் 'பெர்மிட்' தேவைப்படும் என்றெல்லாம் மூவருமாகத் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கையில், வாயில் காப்போன் அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்து தங்கப்பனைக் கும்பிட்டான். இந்த இடையூறை விரும்பாதவனுகக் கோப பாவத்துடன் நிமிர்ந்து பார்த்த தங்கப்பனிடம் ''ஏழெட்டுப் பள்ளிக்கூடப் பொண்ணுங்க ஒரே கும்பலாக வந்திருக்காங்க; ஃபாக்டரியைச் சுத்திப் பார்க்கணுமாம்'' என்று கூறினான்.

''இப்போ சௌகரியமில்லே, அனுமதி கேட்டுக் கடிதாக எழுதட்டும்; அப்புறமா ஒரு நாள் குறிப்பிட்டுப் பதில் போடலாம். அன்னைக்கு வரட்டும்'' என்றார் மாருதி.

''சொன்னேனுங்க; அந்த அம்மாவுக்குக் கோபம் வந்துடுச்சு. 'நான்சென்ஸ்! 'மினிஸ்டர்' வீட்டிலேயிருந்து வந்திருக்காங்கன்னு போய்ச் சொல்லு!' அப்படீன்னு அதட்டிச்சு. அதுதான் ஐயாவைக் கண்டு கேட்டுக்கிட்டுப் போயிடலாம்னு வந்தேன்!''

அவன் கூறி முடிப்பதற்குள் கண்ணாடிக் கதவைத் திறந்து, '' ஹலோ தங்கப்பன்! 'மே ஐ கம் இன்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் உஷா தன் சிநேகிதிகளுடன்.


''அதுதான் உள்ளே வந்து விட்டாயே! அப்புறமா அனுமதி எதற்கு?'' என்றான் தங்கப்பன். ''இந்தா கருப்பையா நாலு நாற்காலிக்க கொண்டு வா'' என்றான் காவலாளியிடம். ''உட்காருங்கள்'' என்று அனைவருக்கும் பொதுவாக உபசாரமாகச் சொன்னான். பிறகு குறிப்பாக உஷாவை நோக்கி, ''இங்கே நாற்காலிகளுக்குப் பஞ்சமில்லே, மரியாதைக்கும் குறைவில்லே'' என்றான் முந்தைய முறை அவளைச் சந்தித்த தினத்தை நினைவுபடுத்திக் கொள்பவனாக. தொடர்ந்து, ''இவர் மாருதி. உனக்குத் தெரிந்திருக்கும். இவர் எங்கள் இன்ஜினியர் குமாரன்'' என்று அறிமுகப் படுத்தி வைத்தான். அவ்விருவருமே கரம் குவித்தார்கள்.

உஷா தலையை மட்டும் இலேசாக அசைத்தாள், அந்த வணக்கங்களை ஏற்றுக்கொள்ளும் பாவனையில். பிறகு, '''நாங்கள் இருவரும் பள்ளிச் சிநேகிதர்கள். சின்ன வயசிலிருந்தே பழக்கம்' என்று அடிக்கடி பலர் கூற நீங்கள் கேட்டிருப்பீங்க, இல்லையா மிஸ்டர் குமாரன்? ஆனால் நானும் இதோ இருக்கும் இந்தத் தங்கப்பனும் பள்ளிக்கூட விரோதிகள்! சின்ன வயசிலிருந்தே எங்கள் இருவருக்கும் ஓயாத சண்டை!'' என்றாள்.

அவள் தோழிகள் 'கொல்'லென்று சிரித்தார்கள். இன்ஜினியர் குமாரன் அசடுவழியப் புன்னகை புரிந்தார். மாருதியும் தங்கப்பனும் ஒருவரையொருவர், 'இது என்ன வேண்டாத வம்பு நம்மைத் தேடி வருகிறதே' என்பது போல் பார்த்துக் கொண்டார்கள்.

''திறப்பு விழாவுக்கு அப்பாவுடன் வருவாய் என்று எதிர்பார்த்தோம்'' என்றார் மாருதி. ''முதல் வரிசையில் உன் பெயர் எழுதி ஒட்டப் பட்டிருந்த நாற்காலி கடைசி வரை காலியாகவே இருந்து வந்தது.''

''ஆரம்ப விழாவுக்கெல்லாம் வந்து பிரயோஜனமில்லே சார்! அப்போது தொழிற்சாலையின் உண்மையான நிலையைப் புரிந்து கொள்ள முடியாது. ஏதோ மந்திரி வருகிறார். அவர் பார்வையில் படவேண்டும் என்று பிரபலஸ்தர்களும் கடனே என்று சில பத்திரிகை நிருபர்களும், காமிராவும் கையுமாகப் புகைப் படக்காரர்களும் மொய்த்துக் கொண்டிருப்பார்கள். பொழுது போகாமல் காக செலவின்றி வேடிக்கை பார்க்க வந்து கூடுகிற பொது



மக்கள் வேறே. மந்திரி மேலெழுந்த வாரியாக எல்லாவற்றையும் ஒருதரம் நோட்டம் விடுவார். பட்டதும் படாததுமாகப் பத்து நிமிஷம் பேசி 'போர்' அடிப்பார். ஓர் இயந்திரத்தின் அருகில் நின்று விசையை முடுக்குவது போல் 'பிரெஸ் போட்டோகிராபர்'களுக்குப் 'போஸ்' கொடுப்பார்; போய் விடுவார்! அப்புறம் அந்த ஃபாக்டரி நிஜமாகவே நடக்கிறதா, அல்லது அதன் தலையில் இடி விழுந்ததா என்றுகூட யாரும் கவனிக்க மாட்டார்கள்! இந்த மாதிரி 'திடீ'ருன்னு விஜயம் பண்ணினாத்தான் நல்லது கெட்டது தெளிவாகப் புரியும். என் அப்பா இதுவரை ஓர் ஆயிரம் அஸ்திவாரக் கல் நாட்டியிருப்பார்; குறைந்தது ஐந்நூறு இடத்தில் ரிப்பன் கத்திரிச்சு இருப்பார். அடிக் கல்லுக்கு மேலே எத்தனை கட்டடங்கள் வளர்ந்தன; தொடக்க விழாவுக்குப் பிறகு எத்தனை தொழிற்சாலைகள் மூடின என்பதைக் கணக்கெடுத்தால் சுவாரஸ்யமாக இருக்கும். எட்டுப் பேர் கொண்ட 'ஸ்டாடிஸ்டிக்ஸ் எக்ஸ்பர்ட் கமிட்டி'யை அதற்காக நியமிக்கலாம். இதோ நாங்கள் எட்டுப் பேர் இருக்கிறோம் தயாராக. தலைக்கு ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் கொடுத்தால் போதும்; 'அப்கோர்ஸ்' பிரயாணச் செலவு தனிதான். ஐந்து வருஷ சர்வேக்குப் பிறகு மேலும் இரண்டு வருடங்கள் டயம் கேட்போம்! என்ன பிரமீளா! 'யேம் ஐ ரைட்?' "

தங்கப்பனால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து கருமாரனும் மாருதியும் கூட இலேசான மனத்துடன் நிம்மதியாகச் சிரித்தனர்.

''நீ இப்போது வந்தது குறித்து ரொம்ப சந்தோஷம். தாமரைத் தொழிலகம் ஸ்திரமாகச் செயல்படுவதை நேரில் பார்க்கலாம். ஆனால் அதற்காக அன்று நீ வராமலிருந்திருக்க வேண்டுமென்பதில்லையே?'' என்றான் தங்கப்பன்.

''கரெக்ட்! என்னைக் 'கார்னர்' பண்ணிட்டே நீ! உண்மையைச் சொல்லணும்னு இந்தத் தொழிலகத்தை அப்பா ஆரம்பிச்சு வைச்சது எனக்குக் கட்டோடு பிடிக்கலே. 'நீங்க இதுக்கு ஒத்துக்கொள்ளக் கூடாது'ன்னு சொல்லி அவர்கிட்டே வாதாடினேன். 'தங்கப்பனைத் தலைக்கு மேலே தூக்கி வைச்சுக்கிட்டுக் கூத்தாடாதீங்க. அவனுக்குக் கர்வத்தில் மண்டை கனத்துப் போகும்.



அப்புறம் உங்க தலைமேல் இருந்தபடி, அவன் உங்களையே ஆட்டிப் படைப்பான்' அப்படீன்னேன். அவர் என்னை லட்சியம் பண்ணவே இல்லே. 'பப்ளிஸிட்டி'ன்னு ஒரு 'ஆபர்சூனிட்டி' கிடைச்சால் விடமாட்டார். 'ஆ! உனக்கு விஷயம் தெரியாது; அவன் பெரிய ஆளாகிக்கிட்டு வரான்'னு உன்னைப் புகழ்ந்தார். நுணங்கிட்டே விடுவீடுன்னு நல்ல பேர் சம்பாதிக்கச் சீக்கிரம் முன்னுக்கு வந்துடுவியாம் நீ! அதனாலே உன்னை அணைச்சுக்கிட்டுப் போகிறதுதான் சாமர்த்தியம் என்றார். நான் ஒரு திருத்த மசோதா கொண்டாந்தேன். 'சாமர்த்தியம்னு சொல்லாதீங்க, சாணக்கியம்னு அதுக்குப் பேரு'ன்னேன். 'அப்படித்தான் வைச்சுக்கியேன். விழாவிலே கலந்துக்கிட்டா பெருமையிலே பெரும் பங்கு எனக்குச் சேரும்; ஒதுங்கிட்டா நம்ம ஊரிலே முதன் முதலா ஒரு தொழிற்சாலை தொடங்குது. அதுக்கு நம்ப மந்திரியாக எனக்கு லெக்சர் அடிச்சார். 'மாஸ் ஸைக்காலஜின்னு சொல்லாதீங்க, வோட் ஸைக்காலஜின்னு திருத்திக்கிடுங்க'ன்னேன்.''

இன்ஜினியர் கருமாரன் திறந்த வாயும் பிதுங்கிய விழிகளுமாய் உஷாவைப் பிரமிப்புடன் நோக்கியபடி யிருந்தார். தங்கப்பனும் மாருதியும்கூட மௌனம் சாதித்தார்கள்.

''ஏன் ஸார்! பயந்துட்டீங்களா எல்லாரும்? என் அப்பா நான் என்ன பேசினாலும் லட்சியம் பண்ணுகிறவர் இல்லே. அவர் யதார்த்தவாதி. காரியம் ஆகணும் அவருக்கு. அவ்வளவுதான்.''

அவள் சந்தேகித்தது போல் தங்கப்பன் பயந்து வாயடைத்துப் போய் விடவில்லை. திறப்பு விழாவுக்கு மறு தினம் அந்நிகழ்ச்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது மாருதி கூறிய சில விஷயங்கள் தங்கப்பனுக்கு அப்போது நினைவுக்கு வந்தன. அந்தச்





வராமல் போயிட்டார் பார்த்தியான்னு பேச்சுக் கிளம்பும். சொந்த முறையில் தங்கப்பன் நமக்கு விரோதியா யிருக்கலாம். ஆனால் மக்கள் முன்னிலையில் நாம் வேறு விதமாக நடந்துக்கணும். அதுதான் 'மாஸ் ஸைக்காலஜிங்கிறது'— இப்படி சிந்தனையில்தான் அவன் ஆழ்ந்து போனான். 'பார்த்தாயா தம்பி, ஒருவன் பெரிய மனுஷனாகிவிட்டால், அவன் சின்ன வயதில் செய்த சிறு செயல்களுக்கெல்லாம்கூடப் புது அர்த்தம் கற்பித்து மகத்தான காரியங்களாக்கிவிடுகிறார்கள். உலகில் எத்தனையோ குழந்தைகள் தெரு நாயிடம் தங்களுக்குள்ள அன்பினால் சாப்பாடு போடுவார்கள். ஆனால் அத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாமே பிரபலமாகி விடுமா? அவர்களில் ஒருவர்தான் பின்னால் பெரிய மனிதர்களாவார்கள். அப்போது, சிறு வயதிலேயே அவர் கருணாமூர்த்தியாக விளங்கினார் என்று கூறி அதற்கு உதாரணமாக நாயி

விருந்து மாமா வாங்கி வந்த பிஸ்கோத்துகளைத் தெரு நாய்களுக்கு அவர் போட்டுவிட்ட கதையை ஆராய்ச்சிகள் பல செய்து தேடிக் கண்டுபிடித்துச் சொல்வார்கள்...

'நினைதயாளு இரவோடு இரவாகக் கிளம்பி வந்து நேற்று முற்பகல் சற்றுக் கண்ணயர்ந்து உன்னைப் பார்க்கவும் மறுத்துப் பிறகு விழா முடிந்த கையோடு காரிலேறிச் சென்னைக்குப் பறந்ததால்தான் மதிப்பு. அப்போதுதான் பல வேலைகளுக்கிடையிலும் சத்தியபுரித் தொகுதி மக்களிடம் உள்ள பேரன்பால் உந்தப்பட்டு அவர் இங்கு வந்ததாகும். மற்ற நாட்களில் அவர் சேர்ந்தாற்போல் ஒரு வாரம் கூட ஒரு ஜோலியும் இல்லாமல் இங்கேயே தங்கலாம், பரவாயில்லை!....'

சேர்ந்தாற்போல் பல விளுடிகளுக்கு அங்கு நிலவிய நிசப்தத்தைக் கண்ட உஷா, ''காரிலே நான் வந்து இறங்கினது கூட உங்க காவற்காரன் கண்ணில் ஒரு பொருட்டாகப்படவில்லை, உள்ளே விடவே தயங்கினான். அதிலேயிருந்தே ரொம்ப 'பிஸி'யாக நீங்களெல்லாம் 'கான்ஃபரன்ஸி'ல் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. நான் கிளம்பறேன். எதுக்குத் தொந்தரவு உங்களுக்கு?'' என்றாள்.

''நோ, நோ! இன்னும் இரண்டு வருஷத்துக்கு வேலை வெட்டி ஒன்றும் கிடையாது எனக்கு. நீ தாராளமாக எத்தனை நேரம் வேணுமானாலும் 'போர்' அடி, பரவாயில்லை!''

நிலைமை கவலைக்கிடமானதாக மாறுவதைத் தடுக்க முற்பட்ட மாருதி, ''ஃபாக்டரியைச் சுற்றிப் பார்க்கலாமே, வா'' என்று அழைத்தார் உஷாவை.

''ஆமாம், பெரிய ஃபாக்டரி. இதில் பார்ப்பதற்கு என்ன இருக்கிறதாம்? அது தான் இந்தக் கண்ணாடிச் சுவர் வழியாக எல்லாம் தெரிகிறதே! நாலு லேத் — அதில் இரண்டு எச். எம். டி. இரண்டு வெஸ்ட் ஜெர்மன். இரண்டு டிரெட்டர்—அதில் ஒன்று உள்ளூர், ஒன்று பிரிட்டிஷ். மூனு பெண்டலா—மூனும் லோக்கல்தான்!''

''பரவாயில்லையே! திறப்பு விழாவின் போது நான் அச்சிட்டுப் படித்த வரவேற்புரையை நன்றாகக் கடம் போட்டு வைத்திருக்கிறாயே!'' என்றான் தங்கப்பன்.

உஷா ஒரு பெருமூச்செறிந்து சிரித்தாள். ''பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இந்த அறையே தொழிற்சாலையின் லட்சணத்தை எடுத்துக் காட்டுவதாய்த்தானிருக்கிறது. வெந்து புழுங்குகிறதே'' என்ற உஷா அண்ணாந்து நோக்கினாள். ''இந்த செகண்ட் ஹாண்ட் ஃபானைக் கழற்றிக் குப்பையிலே போட்டுவிட்டு இந்த அறையை ஏர்—கண்டிஷன் செய்துகொள்ளக் கூடாதோ?'' என்று கேட்டவள் புடவைத் தலைப்பை எடுத்து விசிறிக் கொண்டாள். அப்போது தன் மேலாடை எந்த நிலையிலிருந்ததென்ற லட்சியமின்றிக் கால் மேல் கால் போட்டு எடுப்பாக நிமிர்ந்து அமர்ந்து ஒரு கோணத்தில் திரும்பி அவனை நோக்கிய விதம் தங்கப்பனின் கவனத்தைத் தன் எழிலுருவத்தில் ஈடுபடுத்த அவள் பிரயத்தனப்பட்டது போலிருந்தது.

தங்கப்பன் பற்களை நறநறவென்று கடித்தபடி, ''என்னைவிட மாருதி அதைப் பற்றி உனக்கு விவரமாகக் கூற முடியும்'' என்றான்.

மாருதி கூறினார்: ''பிரிட்டனில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைத்தான் தம்பியிடம் இந்தத் தொழிற்சாலையை அமைக்கும் போது சொல்லிக்கிட்டிருந்தேன். பல மிலியன் பவுன்களைக் கொட்டி ஆரம்பிக்கப்பட்ட இரும்பு ஆலை. எல்லாம் மனித யத்தனமின்றியே கம்ப்யூட்டர்களும் எலெக்டிரானிக் சாதனங்களும் நடத்துகின்றன. எந்தெந்தக் கம்பெனிக்கு என்னென்ன விதமான தன்மைகள் கொண்ட இரும்புத் தகடுகள் தேவை என்பதைக் குறித்து வைத்துக்கொள்கிறதிலேயிருந்து, ஆர்டர்கள் கொடுத்த அந்தந்தக் கம்பெனிகளுக்கு ஏற்றவாறு இறுதியாக இரும்புத் தகடுகள் சுருள் சுருளாகக் காட்டு யானை யத்தனை பெரிதாக உருவாகி வெளியே வந்து விழுவதுவரை எல்லாவற்றையும் தன்னால் இயங்கும் இயந்திரங்களே கவனித்துக்கொள்கின்றன. அப்படிப்பட்ட இடத்திலே காரியாலயத்தில் இருந்தவங்க மொத்தம் முப்பது நாற்பது பேர்தான் தேறும். அவங்க உட்கார்ந்திருந்த இடத்துக்கு மேலே தகரக் கூரை. தடுப்புச் சுவர்கள் எழுப்பி அறைகளை உருவாக்கியது பிளைவுட்டினாலேதான். 'என்னய்யா, எக்கச்சக்கமாகப் பணத்தைக் கொட்டியிருக்கீங்க இந்த இரும்பு ஆலையிலே. நல்ல கட்டிடமாக ஒண்ணு காரியாலயத்துக்கு இருக்கக் கூடாதா?' என்று கேட்டேன்.

'' 'அது என்ன கட்டிட மோகமோ?' என்றான் அவன். 'இருக்கிற பணத்தையெல்லாம் தொழிலகத்தில் முதலீடு செய்ய வேணும். இயந்திரங்கள் வீணாகாமலிருக்க அவற்றுக்கு மேலே கூரை வேண்டும். உற்பத்தி தொடங்கி லாபம் என்று பார்த்த பிறகு பக்கா காரியாலயக் கட்டிடங்கள் பற்றி யோசித்துக் கொண்டால் போகிறது' என்று ஒரு போடு போட்டான். நான் அசந்துட்டேன். ஒவ்வொரு பைசாவும் வருமானம் கொடுக்கத் தக்க வகையிலே செலவாகணும்னு நினைக்கிறாங்க. இங்கே நாம என்னடான்னா வெய்யிலையே கண்டறியாதவங்க மாதிரி இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்கிறதுக்கு முன்னாடி ஏர்—கண்டிஷனர்களை வரவழைச்சுக் குளு குளு அறைகளுக்குள்ளே அடைஞ்சு கிடக்க ஆரம்பிச்சுடறோம்.''

உஷா பெரிதாகச் சிரித்தாள். ''ஏன் ஸார், நாலாயிரம் மைல்களுக்கப்பால் போய்க் கருமியாக இருப்பது எப்படிங்கிறதைத்தான் கத்துக்கிட்டு வந்தீங்களா? தரித்திர புத்தி இல்லாம இருக்கிறதை வைச்சுக்கிட்டுச் சௌகரியமாக வாழ ஒருத்தனுக்குத் தெரியவேணுமா? அழகாக அலங்கரிக்கப்பட்ட பெரிய ஆபீஸாக இருந்தால்தான் நாலு பேர் பிஸினஸ் பண்ண வரச்சே நம்மை மதிப்பாங்க. ஆர்டர்களும் தாராளமாக வந்து குவியும். இது சின்ன விஷயம், உங்களுக்குத் தெரியலையே?'' என்று கூறிய உஷா, தங்கப்பனை நோக்கி ஓர் அலட்சியப் புன்னகையை வீசினாள். ''போகட்டும்.

இந்த அழுக்குக் காக்கிச் சட்டை இல்லாமே ஒரு நல்ல டெரினின் சட்டையாக வாங்கிப் போட்டுக் கொள்ளவாவது செய்யலாம்!'' என்று மொழிந்துவிட்டுத் தன் தோழிகள் புடைசூழ வெளியேறினள்.

அன்று மாலை தங்கப்பன் வீடு திரும்பியதும் வழக்கம் போல் கிணற்றடிக்குப் போனான், குளிப்பதற்காக. உழைப்பின் பலனாய் உடலில் சேர்ந்த அழுக்கை நீக்கி ஸ்நானம் செய்யும் போதெல்லாம் தங்கப்பனுக்குப் பெருமிதம் உண்டாகும். இன்று காக்கி உடையைக் களைந்து கொடியில் போட்டவனுக்கு, தொழிலகம் இயங்க ஆரம்பித்த அன்று, தான் புத்தம் புதிய டெரினின் உடை அணிந்தே போனதையும் அதை மாருதி பார்த்துவிட்டு, ''என்ன தம்பி இது? பட்டணத்திலே காத்து வாங்க பீச்சுக்குப் போகிற ஞாபகமா?'' என்று கேட்டதும் நினைவு வந்தன. ''ஃபாக்டரிக்கு நீ இப்படி வந்தால் பிறகு இன்ஜினியர் குமாரனும் டிப்டாப்பாகத்தான் காட்சியளிப் பார். எல்லாருமே சட்டை அழுக்காகிவிடுமோ என்று இயந் திரங்கள் கிட்டவே நெருங்கப் பயந்துக்கிட்டிருப்போம். வேலை எப்படி நடக்கும்? காக்கி உடையில் தொழிலாளிங்க மத்தி யிலே தினம் கொஞ்ச நேரமாவது போய் நின்னாத்தான் அவங் களுக்கும் வேலை மேலே கருத்து உண்டாகும்!''

'மாருதி இப்படிச் சொன்னதும் அன்று நான் எவ்வளவு வெட்கப்பட்டேன்? மாருதி - உஷா இருவரது மனப் போக் கிலும் எவ்வளவு வித்தியாசம்? அவள் எதற்காக இன்று தொழி லகத்துக்கு வந்தாள்? அன்று நான் நேரில் வருந்தி அழைத்த போது அவமானப்படுத்தி அனுப்பியவள் இன்று யாரும் அழைக்காமலே எந்த ஒரு வியாஜ்யமுமின்றி வந்தது ஏன்? அப்படி வந்த பிறகு தொழிலகத்தையும் அதை நான் நடத் தும் விதத்தையும் அவள் கேலி செய்வானேன்? அப்போது கூடவே அவள் தன் எழிலால் என்னைக் கவர முயன்றாள் என்ப திலும் சந்தேகமில்லை. ஆனால் அதன் பிறகு அவள் வெறுப்பை யும் என்மீது உமிழ்வானேன்? புரியாத புதிர்தான் அவள்!

'இத்தனை வருஷங்களான பிறகும் அவளுக்குச் சிறு வய தில் என் குடும்பத்தின் மீதும் என்மீதும் ஏற்பட்ட வெறுப்பு லவலேசமும் குறையாததால் அப்படி நடந்து கொண்டாளா? அந்த வெறுப்பில் அர்த்தமில்லை, பொருளில்லை என்று வளர்ந்து விட்ட வயதும் அறிவும்கூட அவளுக்கு உணர்த்தவில்லையா? பசுமரத்தாணி போல் பதிந்துவிடும் என்பார்களே அப்படி இளம் மனத்தில் ஆழப் பதிந்து போன துவேஷமா அது?'

அன்று இரவு தங்கப்பனின் சொப்பனத்திலே தோன்றி னாள் உஷா. பருமனான பிளாஸ்டிக் மணிகளாலான நீண்ட மாலை ஒன்று அவளது எடுப்பான கண்டத்திலிருந்து தொங்கி நெஞ்சில் தவழ்ந்தது. தலை குனிந்து அந்த மாலையைத் தடவிக் கொடுப்பதும், விரல்களில் சுற்றிக் கொள்வதும் பிரிப்பதுமாக விளையாடிக் கொண்டிருந்தவள் இலேசாகத் தலையைச் சாய்த்து ஓரக் கண்களால் அவனை நோக்கிப் பரிகாசமாகச் சிரித்தபடியே சரம் படிந்து இனிமை ததும்பும் செவ்வாயில் முல்லை அரும்புப் பற்களுக்கிடையில் அந்த மணிமாலையை வைத்து மெல்லக் கடித்தாள். காற்றில் படபடத்துப் பறக்கும் கொடிபோல் அவள் தேகம் அலை அலையாக நெளிந்து குலுங்கக் கேலிச் சிரிப்பை உகுத்தாள். தங்கப்பனால் அவளது அலங்காரத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் பெண்களுக்கான 'பேஷன்' பத்திரிகை யொன்றில் பார்ப்பதுபோல் காண முடிந்தது.

அந்த எழிலை யெல்லாம் அவன் வியந்து நோக்கி அனுப வித்துக் கொண்டே யிருக்கையில் அவள் விரல்களுடன் விளை யாடிக் கொண்டிருந்த மணிமாலை சிறிது சிறிதாக ஒரு நாகப் பாம்பாக மாறித் தனது வழவழுப்பான தன்மையுடன் இலகுவாக நெளிந்தது. பிளவுபட்ட தன் நாக்கை மின்னலைப் போல் நீட்டி மறைத்தது. அடுத்தாற்போல் சீற்றத்துடன் ஒலி எழுப்பி விஷத்தைக் கக்கியது. தொடர்ந்து மேனி அசைந் தாடச் சிரித்துக் கொண்டே யிருந்தாள் உஷா. விஷமத்தன மான சிரிப்பு அல்ல அது. விஷச் சிரிப்பு எனக் கண் டான் தங்கப்பன். (தொடரும்)

இரவினில்......



நீ இங்கு உள்ளே வந்ததை யாரும் பார்க்க வில்லையே ?

ஊஹூம்!

நிச்சயமாய்த் தெரியு மல்லவா?

கண்டிப்பாய்.....

இந்த அறையில் நம் இருவரைத் தவிர வேறு யாரும் கிடை யாது.....இரவு நேரம்.

அதனால் என்ன?

என்னைப் பற்றித் தெரிந்தும் என் குணம் புரிந்தும் தெரி யாது போல் பேசகி றாயே. அந்தக் கதை யைத் தூரயிட்டு விட்டு இப்படி வா.

ஐயோ, நான் மாட் டேன். அப்பாவுக்குத் தெரிந்தால் கொன்று விடுவார்.....

ஸ்.... கலாட்டா செய்யாதே... உன்னை யும் என்னையும் யார் தேடப் போகிறார்கள் ? நாளைக்கு நான் ஊருக் குப் போய் விடுவேன். இன்று மட்டும்தானே?

யாராவது நடுவில் வந்து விட்டால்....?

நான் இப்படிக் கட்டி லுக்கடியில் ஒளிந்து கொள்கிறேன். நீ தனி யாகக் கதைப் புத்தகம் ககனைச் சாத்திப் படித் துக் கொண்டிருப்பதா கச் சொல்லி விடு. ஒரு புத்தகத்தையும் தயா ராய் எடுத்து வைத்துக் கொள். நேரமாகிறது. வா இப்படி...உம்...

எனக்கு என்னவோ பயமாக இருக்கு....

(எப்படி முடியும்? சிந்திக்க. பிறகு 85-ம் பக்கம் பார்க்க.)

காலத்தால் பிந்திய கலைஞன்

1933ம் ஆண்டு மார்ச் முப்பதாம் தேதி நியூயார்க் நகர 'பிளாசா' ஹோட்டல் நடன அறையில் தேசிய கலைப் பொருள் கழகம் முப்பத்தி ஒன்பது சிற்பங்களை ஏலத்தின் மூலம் விற்க முன்வந்தது. எத்தனையோ லட்சம் டாலர்கள் கொடுத்து வாங்கப்பட்ட அந்தச் சிற்பங்கள் அனைத்தும் ஒன்பதினாயிரத்து நூற்றி இருபத்தி ஐந்து டாலர்களுக்கே ஏலத்தில் போயின. அந்தச் சிற்பங்களைத் தனித்தனியாகவோ கூட்டாகவோ வாங்கிய கலையன்பர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தாலிய நாட்டுச் சர்க்காரால் அனுப்பப்பட்டிருந்த அழகான அத்தாட்சி இதழ்களும் கூடவே கொடுக்கப்பட்டன. 'இப்போது விற்கப்பட்ட சிற்பம் ஒவ்வொன்றும் அசல் போலி என்று உறுதி கூறப்படுகிறது' என்ற வாசகம் அந்த அத்தாட்சி இதழ்களில் பொறிக்கப்பட்டிருந்தது!

ஆல்ஸியோ டோஸெனா என்ற இத்தாலிய கல்தச்சன் கலை ஆர்வத்தின் காரணமாகப் பொழுது போக்காகச் சில சிற்பங்களைச் செதுக்கப் போக, அவை உலகின் பல பாகங்களிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சில சிற்ப மேதைகளின் அசல் சிருஷ்டிகள் என்று வாங்கப்பட்டு மியூஸியங்களில் இடம் பெற்று விட்டன! அதற்கு ஆல்ஸியோ டோஸெனா கொஞ்சம்கூடப் பொறுப்பு இல்லை!

ரோம் நகரத்தின் ஒரு மூலையில் வீடுகள் கட்டுவதற்கான கற்களைச் செதுக்கிக் கொண்டிருந்த ஆல்ஸியோவுக்கு 1920ம் ஆண்டில் ஒரு புதிய ஆசை தோன்றியது. கல்லில் சுத்தியால் ஒவ்வொரு தட்டுத் தட்டும்போதும் தான் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து சலவைக் கற்களிலும், கருங்கற்களிலும் சிற்பம் வடித்த மேதைகளில் ஒருவராக ஆகிவிடக்கூடாதா என்பதுதான் அந்த ஆசை. தன்னை ஒரு லியனார்டோ - டா - வின்ஸியாகவும், மைக்கேலாஞ்சலோவாகவும் கற்பனை செய்துகொள்ள ஆரம்பித்தான். ஆனால் அவன் கைகள் என்னவோ வீடு கட்டுவதற்கான கற்களைத்தான் செதுக்கிக் கொண்டிருந்தன.

தன்னுடைய கலைவெறியை இனிக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது ஆல்ஸியோ ஒரு நாள், தனக்குப் பழக்கமான கற்களை ஒதுக்கி அப்புறப்படுத்தி விட்டு, ஒரு சலவைக் கல்லை எடுத்து வைத்துக் கொண்டு தன்னுடைய நீண்ட நாள் கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விட்டான்.

புகழ்பெற்ற போலிகள்



அவன் விரல்கள் அவன் உள்ளத்தின் கருவியில் இயங் கத் தொடங்கின. அற்புதமான சிற்பம் ஒன்று உரு வாகத் தொடங்கியது. அந்த கணத்தில், உலகத் தையே ஏமாற்ற, தான் காரணமாக இருக்கப் போகிறோம் என்ற எண்ணமில்லாமல் அவன் ஒரு மேதையாகவும் மாறினான்.

தன் ஆசைக் கனவுகளில் சஞ்சரிக்கத் தொடங்கு வதற்கு முன்பே ஆல்ஸியோ பல பழங்காலச் சிற்பி களின் அசல் சிருஷ்டிகளைக் கலைக் கூடங்களில் சுற்றுக் கவனித்திருக்கிறான். பல புகழ்பெற்ற ஓவிய மேதை களின் ஓவியங்களையும் கூர்ந்து பார்த்திருக்கிறான். எங்கெல்லாமோ பாழடைந்த காவலில்லாத மாளி கைகள், இடுகாடுகள் எல்லாம் சுற்றிக் கிடைத்த பழங்காலச் சலவைக் கற்களையெல்லாம் சேகரித் துக் கொண்டு வந்து குவித்தான் ஆல்ஸியோ. கிரேக்கப் பாழ் மண்டபங்களடியில் கிடந்த, பல நூற்றாண்டுகள் பழைமை பெற்று மக்கிப் போயி ருந்த பளிங்குக் கற்கள்மீது அவன் விரல்கள் கலைச் சுவையுடன் விளையாடிப் பண்டைய நாளையக் கிரேக்க நிபுணர்களின் கற்பனைகளை மீண்டும் உருவாக்கின. நாளடைவில் அவனுடைய இருப்பிடம் ஒரு 'மியூஸிய'மாக மாறி விட்டது. ஆனால் அவன் தன் சிருஷ்டிகளில் ஒன்றையாவது விற்றுப் பய னடைய நினைக்கவில்லை. ஆத்ம திருப்திக்காகவே அவன் செதுக்கிக் குவித்தான்.

இந்த வேளையில்தான் விதி ஆல்பிரடோ ஃப்பசோலி என்னும் பழம் பொருள் வியாபாரத் தரகனை ஆல்ஸியோவின் இருப்பிடத் துக்கு இழுத்து வந்தது. எதிர்பாராத விதமாக ஆல்ஸியோவின் தொழிற் பட்டறைக்கு வந்த ஃப்பசோலி அங்கு செதுக்கிக் குவிக்கப்பட்டிருந்த சிற்பங்களைப் பார்த்துப் பிரமிப்படைந் தான். ஒவ்வொன்றும் ஒரு கலைப் பொக் கிஷமாக அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவன் காரியவாதி. வியாபார ரீதியில் ஒரு மனத் தத்துவ நிபுணன். தன் வியப்பையும் பிரமிப்பையும் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு அலட்சியமாக ஆல்ஸியோவைப் பார்த்து ''இந்த மாதிரி இமிடேஷன் சிற்பங் களுக்கெல்லாம் இந்தக் காலத்தில் ஏது மதிப்பு? விரும்பி வாங்குபவர்கள் குறைவாயிற்றே! அவசியமானால் சொல்! யாரிடமாவது தள்ளி விடு கிறேன். சொற்ப விலைக்குத்தான் போகும்!'' என்றான்.

அசட்டு ஆல்ஸியோ அப்பாவித்தன மாகத் தலையை அசைக்கவே ஃப்பசோலி, கைக்கு அகப்பட்ட ஒரு சிற்பத்தைத் தூக்கிக் கொண்டு நடந்தான். நேராகத் தன்னைப் போல் தொழில் நடத்தும் மற்றொரு தரகனான பலேலியிடம் போனான். பலேலிக்கு உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள கலைப் பொருள் சேகரிப்பாளர்களுடன் வியாபாரத் தொடர்பு இருந்தது. இருவரும் ஆல்ஸியோவின் சிற்பத்தைப் பார்த்து ஆசைக் கனவுகள் காண ஆரம்பித் தார்கள். பல நூற்றாண்டுக் காலம் பழைமையானது போலக் காட்சி யளித்த அந்தச் சிற்பம், அசலாகவே உலகச் சந்தையில் உயர் விலைக்குப் போகும் என்று கண்டு கொண்டனர். பரீட்சார்த்தமாக ஆல்ஸியோவிட மிருந்து கொண்டு வரப்பட்ட முதல் உருப்படியை ரோம் நகர மியூஸியத் துக்கு அனுப்பி வைத்தார்கள். சாமர்த் தியமாக ஒரு குறிப்பையும் சேர்த்து அனுப்பினார்கள். ''இந்தச் சிற்பத்தின் அசல் தன்மை பற்றி எங்களுக்குச் சரியான தகவல் இல்லை'' என்பதுதான் அந்தக் குறிப்பு.

அவர்கள் எந்த நோக்கத்தில் அந்தக் குறிப்பை அனுப்பினார்களோ, அதற் கான பலனும் கிடைத்தது. ரோமா புரி மியூஸிய நிபுணர்கள் அந்தச் சிற் பத்தைப் பார்த்து விட்டுப் 'பழங் காலத்திய அசல்' என்று தீர்ப்பளித்து அதற்குக் கணிசமான விலையையும் கொடுத்து விட்டார்கள். ஃப்பசோலி இந்தப் பொறுப்பை நிபுணர்கள் தலை யில் சுமத்த விரும்பி வெற்றி பெற் றான். கிடைத்த விலையை அவன் தன் நண்பனுடன் பகிர்ந்து கொண்டு ஆல்ஸி யோவிடம் 'எப்படியோ அந்த இமி டேஷனை மலிவாகத் தள்ளி விட்டேன்' என்று சொல்லிக் கொஞ்சம் பணத் தைக் கொடுத்தான். வருங்காலத்தில்



இப்படி மலிவு விலைக்கு ஆல்சியோவின் இமிடேஷன் தயாரிப்புகளை விற்றுக் கொடுக்க ஃபசோலி ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டான், மிக மலிந்த விதத்தில்!

ரோம் நகர மியூஸிய நிபுணர்கள் முதன் முதலில் அளித்த நற்சாட்சியின் அடிப்படையில் ஃபசோலியும் பலேசியும் ஆல்சியோவின் சிருஷ்டிகளை அள்ளிக்கொண்டு போய் உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள கலை நிலையங்களுக்கு அந்த விலைக்கு அசல் என்று சொல்லி விற்றார்கள்.

பல இடங்களில் எத்தனையோ நிபுணர்கள் இந்தச் சிற்பங்களைப் பரிசோதித்திருக்கின்றனர். ஒவ்வொருவரும் தாங்கள் சோதித்தது பழங்கால அபூர்வ அசல்கள் என்றுதான் கூறினார்கள். ஆல்சியோ, தான் ஒரு நகலை சிருஷ்டிக்க வேண்டும் என்ற மேலெழுந்த ஆசையோடு செதுக்காமல் ஆத்மார்த்தமான கலை வெறியுடன் கையில் உளியை எடுத்ததினால்தானோ என்னவோ, அவன் சிருஷ்டிகள் இப்படி ஓர் அபூர்வத் தன்மையைப் பெற்றிருந்தன. மேலும் அவன் கால ஓட்டத்தைக் கண்ட பழங் கற்களை அல்லவா தேடிக் குவித்து வைத்திருந்தான்!

ஃபசோலியும் பலேசியும் லட்சாதிபதிகளாகிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது கொடுத்து வந்த அற்பத் தொகையை வாங்கிக் கொண்டு ஆல்சியோ மேலும் மேலும் தன் சிருஷ்டிகளை வடித்து அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தான். தன்னுடைய தயாரிப்புகள் ஃபசோலியின் வாசாலகத்தால் உலகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன என்று அவனுக்குத் தெரியாது!

நியூயார்க் நகரத்திலுள்ள ஃப்ரிக் கலைப் பொருள் சேமிப்பு ஸ்தாபனத்தார் மூலம் தான் இந்தப் போலி நாடகம் வெளியாக நேர்ந்தது. ஃபசோலி அந்த ஸ்தாபனத்துக்குச் சில அற்புதமான புராதனமான சிற்பங்கள் கொடுப்பதாக முன்வந்தான். அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகிகள் முன்ஜாக்கிரதையுள்ளவர்கள். விலை பேசி வாங்குமுன்பு அவைகளின் அருமை பெருமையை நன்கு தெரிந்து கொள்ளத் தங்கள் ஸ்தாபனத்தின் பிரத்தியேக நிபுணர்களை இத்தாலி நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் இத்தாலிக்கு வந்து சேர்ந்த நேரம் ஃபசோலிக்குப் போதாத வேளை! காரணம், எப்படியோ தன் ஆத்மார்த்த தயாரிப்புகளின் உதவியால் ஃபசோலி பணத்தைக் கொள்ளை கொள்ளையாகக் குவித்துத் தன்னை ஏமாற்றியிருக்கிறான் என்று தெரிந்து கொண்ட ஆல்சியோ, நம்பிக்கைத் துரோகக் குற்றத்துக்காக ஃபசோலி மீது வழக்குத் தொடுத்துவிட்டான். ஃபசோலியும் அவன் கூட்டாளியும் இந்த மோசடி வியாபாரத்தின் மூலம் இருபது லட்சம் டாலர்களுக்கு மேலாகச் சம்பாதித்து விட்டதும் அவன் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருந்தது.

ஃபசோலி இந்த விஷயம் ஃப்ரிக் ஸ்தாபனப் பிரதிநிதிகளுக்குத் தெரியக் கூடாது என்று ஆன மட்டும் முயற்சி செய்தான். முடியவில்லை. இத்தாலிய சர்க்காரே, தங்கள் நாட்டுக் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில், இந்த வழக்கு விசாரணையில் தீவிர அக்கறை எடுத்துக்கொண்டார்கள். ஃப்ரிக் ஸ்தாபனப் பிரதிநிதிகள் வெறுங் கையாகத் திரும்பினாலும், விஷயம் தெரிந்து திரும்பினார்கள். கலை உலகம் முழுவதும் அதைத் தெரியவும்படுத்தினார்கள்.

ஃபசோலி கோஷ்டியினர், தங்களால் ஏமாற்றப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு செய்ய வேண்டியதாயிற்று. அவர்கள் மோசடி நடவடிக்கைக்கு ஆல்சியோ கொஞ்சமும் பொறுப்பாளியல்ல என்ற முடிவுக்கும் கோர்ட் வந்தது.

இந்த ஆரவாரங்களினால் கொஞ்சம்கூடப் பாதிக்கப்படாமல் ஆல்சியோ மேலும் தன் சிற்ப சிருஷ்டியில் ஈடுபட்டான். ஆனால் இந்த ஃபசோலி விவகாரத்துக்குப் பிறகு ஆல்சியோ யார் கவனத்தையும் கவரவில்லை. அவன் பெயர் பத்திரிகைகளில் அடிபடவில்லை: அதற்குமேல் ஏழு ஆண்டு காலம் ஒதுங்கி வாழ்ந்த ஆல்சியோ அறுபதாவது வயதில் காலமானான். அதே ஆண்டில்தான் இத்தாலிய சர்க்காரின் அத்தாட்சிப் பத்திரங்களுடன் ஆல்சியோவின் சிருஷ்டிகள் நியூயார்க் நகரில் ஏலம் விடப்பட்டன: 'போலி' என்று அதிகாரபூர்வமாக!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிறந்திருக்க வேண்டிய கலைஞன் ஆல்சியோ காலம் தவறிப் பிறந்து விட்டான்!

—திருவேரகத்தான்

பதினெட்டாவது ஆண்டு

சுதந்திர தினம்

உன்னதமான இலட்சியங்கள் வெற்றிபெற பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பது பாரத மக்களின் கடமையாகும். சுதந்திர ஜோதியை அயராத நம்பிக்கையுடன், தளராத ஊக்கத்துடன் காப்பது நம் கடமையாகும். சுதந்திரம் நம்மால் பெரிதும் மதிக்கப்பட வேண்டியதொரு இலட்சியமாகும்.

125 ஆண்டுகளாகப் பாரம்பரியப் பெருமையுள்ள சிம்சன் கம்பெனி, பொருளாதாரச் சுதந்திரத்தைப் பூரணமாகப்பெற நாடு ஏற்றுள்ள சபதம் வெற்றிபெறத் தன்னுலியன்றதனைத்தையும் செய்ய மீண்டும் உறுதி கொள்ளுகிறது.

சிம்சன் & கம்பெனி லிட்.

(ஸ்தாபிதம் : 1840)

202/203, மவுண்ட் ரோடு, சென்னை - 2

கிளைகள் :

பெங்களூர்-உதகமண்டலம்-திருச்சிராப்பள்ளி-செகந்திராபாத்

S. 353

சகோதரி சுப்புலட்சுமி பற்றி...



என்னைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதிய அம்மை டாக்டர் மானிகா பெல்ட்டன் அவர்கள் என்னைக் காட்டிலும் மதிப்புக்குரிய சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையாரின் வாழ்க்கையை ஆங்கிலத்தில் எழுத முயன்று முடித்துவிட்டார்கள். அதை லண்டனில் புகழ் பெற்ற விக்டர் கொலான்ஸ் என்ற நூல் பதிப்பகத்தார் வெளியிட ஒப்புக் கொண்டு, அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்குள் அந்த நூலை ஸ்ரீமதி ராஜேசுவரி பத்மநாபன் (அநுத்தமா) தமிழாக்கித் தந்திருக்கிறார். அது வாரா வாரம் தொடர்ச்சியாகக் கல்கியில் வெளியிடப் படுவது தமிழ் மக்கள், முக்கியமாகத் தாய்மார்கள், மகிழ்ச்சியடைய வேண்டிய விஷயம். வாசகர்கள் படித்துப் பயனடைய வேண்டுமென்று ஆசி கூறுகிறேன். அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய ''ஸிஸ்டர்'' சுப்புலக்ஷ்மி அம்மையாரின் சரித்திரம் வாழ்க்கையில் துயரமும் கஷ்டமும் அடைந்து தவிக்க நேரிட்ட மக்களுக்குத் தைரியமும் தெய்வ பக்தியும் வெற்றியும் தரும்.

சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாளைப் பற்றி வெகு நாட்களுக்கு முன் மதுரை வைத்தியநாதய்யர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். ''இத்தனை ஆண்டுகள் நான் அரசியலில் ஏதோ பணி செய்து வருகிறதாக எண்ணி வந்தேன். சகோதரி சுப்புலக்ஷ்மி அநாதைகளுக்கும் சமூகத்துக்கும் செய்திருக்கும் உண்மைச் சேவையில் நான்கில் ஒரு பங்குகூட செய்யும் பாக்கியம் நான் பெறவில்லை'' என்று எழுதினார். வைத்தியநாதய்யர் தன்னைப் பற்றித் துயரப்பட்டு எழுதினார். ஆனால் அரசியலில் கலந்து வாழ்க்கையை அதற்கு அர்ப்பணம் செய்த எல்லாருக்கும் அவர் எழுதியது பொருந்தும். அரசியல் பணியில் என்ன நன்மை கண்டோம்? கஷ்டப்பட்டு வாழைத் தோட்டம் சம்பாதித்தோம். சம்பாதித்து அறிவற்ற குரங்குகளைப்போல் வாழையை அழித்தோம். நந்தவனத்தில் ஓராண்டி என்கிற பழைய பாட்டு நினைவுக்கு வருகிறது.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன் – அநுத்தமா

முதல் பாகம்

பின் நோக்கு

நான் சென்னையில் வசிக்க வந்து நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அப்போது சகோதரி சுப்புலக்ஷ்மியின் உறவினர் ஒருவர் அந்த அம்மாளின் கதையைத் தெரிந்து கொள்ளும்படி எனக்கு அபிப்பிராயம் கூறினார். அது வரை அந்த அம்மையாரை நான் சந்தித்தது இல்லை. ஏன், பார்த்தது கூடக் கிடையாது. ஆயினும் அவருடைய உறவினர்கள் பலர் எனக்கு நண்பர்களாக ஆகி விட்டிருந்தனர். அவ்வம்மையாரின் கதை மிகவும் அபூர்வமானது என்பதை நான் அறிவேன். ஆயின் அவர் தம் கதையை என்னிடம் கூற இசைவாரா என்பது சந்தேகமாக இருந்தது. அவரோ வயது முதிர்ந்தவர், ஏறக்குறைய எழுபத்தாறு வயது. அதிலும் ஆரோக்கியம் குன்றிய நிலை. அவர் கண் பார்வையும் மங்க ஆரம்பித்து விட்டது. மிகவும் செவிடுகூடவுமாம்.

இத்தனைக்கும் மேல் அவர் அலுவல்களில் மூழ்கி யிருப்பவர் என்றும் நான்

எச்சரிக்கப்பட்டிருந்தேன். நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவாப்படுவதை யெல்லாம் எடுத்துச் சொல்ல அவருக்கு அவகாசம் இருக்குமா என்ற ஐயம் எழுந்தது.

இருந்தாலும், கேட்பதில் ஒன்றும் ஹானியில்லை என்று அவரிடம் முன்கூட்டி ஏற்பாடு செய்து கொண்டு, அவரைப் பேட்டி காண நான் சென்றேன்.



அவர் தனியாகத்தான் வசித்து வந்தார்: ஆனால் தனிமையில் அல்ல. அவர் வீடு ஒரே வளைவில் ஒரு திறந்த வெளியைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஐந்து வீடுகளில் ஒன்றாகும். இந்த இடம் நவநாகரிகமான எட்வர்ட் எலியட்ஸ் ரோடிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு சந்துப் பாதையின் முடிவில் கண் மறைவாக இடுக்கப்பட்டது போல இருந்தது. மற்ற நான்கு வீடுகளில் சகோதரியின் குடும்பத்தினர் இருந்தனர்.

நான் அவரை முதன் முதலில் காணச் சென்றது நல்ல வெய்யிலில். 1961ம் ஆண்டு மே மாதம் ஒரு பிற்பகல். அச் சமயம் அவ்வீட்டின் முன்புறம் போகன்வில்லா மலர்கள் பூத்துக் குலுங்கி, கொத்துக் கொத்தாக ரோஜா நிறமும், சிவப்பும், ஊதாவுமாகக் கூரையிலிருந்து வழிந்து கொண்டிருந்தன. வராந்தா நிழலாகச் சற்றே இருண்டு கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. நான் அருகே நெருங்க நெருங்க, அநேகமாக எல்லாப் பழைய காலத்துத் தென்னிந்திய வீடுகளிலும் காணப்படும் ஊஞ்சலின் சங்கிலி தென்படலாயிற்று. வராந்தாவின் வளைந்த சுவரை அணுகினேன். 'ஸிஸ்டர்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் அம்மையார் ஊஞ்சலின் மத்தியில் அமர்ந்து தரையில் கால் பாவாமல் நான்கைந்து அங்குல உயர்வில் தம் கால்கள் இருக்க, மெதுவாக முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்தார்.

அவரைப் பற்றி என்னிடம் பேசிய யாவரும் அவருடைய நல்ல குணத்தைப் பற்றிக் கூறியிருந்தனர். பலர் அவரை ஒரு யோகி என்றனர். அதை யெல்லாம் கேட்ட எனக்கு ஒருவித அச்சம் தோன்றியது. இவ்வளவு சொன்னவர்களில் யாருக்காவது, சகோதரி எழில் உருவம் படைத்தவர், கவர்ச்சியுள்ளவர், வேடிக்கையாக இருக்கக் கூடியவர் என்று கூறத் தோன்றியிருப்பின், இதற்கு முன்பே அவரைச் சந்திக்க நான் முயன்றிருக்கலாம்.

அவர் இப்பொழுது எழுந்து தம் சிறிய அழகான கைகளைக் கச்சிதமாகக் குவித்து வணங்கி என்னை எதிர்கொண்டபோது நான் மேலே கூறிய மூன்றுமே அவரிடம் குடிகொண்டிருந்தன என்பது எனக்குத் தெளிவாகி விட்டது. அவர் எப்பொழுதுமே எழிலுடன்தான் இருந்தார் என்று நான் ஊகித்தேன். அவரைச் சிறிய வயதில் அறிந்தவர்களும் என் ஊகம் சரியே என்று கூறினர். ஆனால் அவர் எப்போதுமே சந்தோஷமும் வேடிக்கையுமாக இருந்தார் என்று சொல்ல முடியாதாம்.

அவர் என் முகத்தை நேராகப் பார்த்துப் புன்னகை பூத்தார். அழகுக்கு ஓர் இலக்கணம் வகுத்தால் அதை அவரிடம் காண முடிவது மட்டுமல்ல, பாரசீக நீலப் பூனைக் குட்டியைப் போல அள்ளிக் கொள்ள வேண்டும் என்று தோன்றும் ஒருவித மிருதுவான கவர்ச்சியுடன் கூடிய அழகு வாய்ந்தவர்.

நான் இன்னும் வியப்புடனும், மகிழ்ச்சியுடனும் அவரைப் பார்த்துக் கொண்டேயிருக்க, அவர் என் கையைப் பற்றி வீட்டின் உட்புறம் என்னை அழைத்துச் சென்றார். அவருடைய அலை அலையான அடர்ந்த நரை கேசத்தையே ஒத்த நிறத்தில் பட்டுப் புடவை உடுத்தியிருந்த அவரது உருவம் சிறியது, உருண்டு திரண்டு பளபளப்பாக விளங்குவது. சதுரமான முன்நுழை கூடத்தைத் தாண்டி நிறைய குடும்பப் புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்த ஓர் அறையின் வழியாக, மற்றோர் அறைக்குள் அவரைப் பின்பற்றி நான் சென்றேன். அந்த அறை படுப்பதற்கும் படிப்பதற்குமாக உபயோகப்பட்டது போலும். சுவரின் ஓரமாக 'டிவான்' எனப்படும் நீண்ட தாழ்வான கட்டில் ஆசனம் ஒன்று இருந்தது. அதற்கு எதிரே அலுவல் பார்க்க ஒரு மேஜை. கதவின் இரு மருங்கிலும் கண்ணாடி பீரோக்கள். அவற்றில் நிறைய புத்தகங்களும் பைல்களும் துண்டுப் பிரசுரங்களும் அடைக்கப்பட்டிருந்தன.



என்னை 'டிவான்' மீது அமரும்படி சைகை செய்தார். பிறகு தாமும் வந்து கால்மேல் கால் போட்டு, தம் சிறு பாதங்கள் கொசுவங்களில் மறைய, என் அருகில் அமர்ந்து கொண்டார்.

வஸந்த காலத்தில் சிந்து பாடும் சிட்டுக் குருவியினுடையது போன்றதோர் இனிமையான குரலில் (சற்றே கண்டிப்பாகவும் தொனித்தது) என்னை "உங்களுக்குக் கார வகை பிடிக்குமா, இனிப்பு வகையா?" என்று கேட்டார்.

அவர்கள் பார்வை என் இதயத்தை ஊடுருவியது. என் பதிலிலிருந்து என்னைப் பற்றிச் சகலத்தையும் கண்டு கொண்டு விடக் கூடிய கேள்வி போலும் இது.

"இரண்டும் பிடிக்கும்" என்று நான் மறுமொழி தந்தேன்.

"ஓ!" தம் வலது கையைத் தூக்கிப் புடவையின் மேலாடைக்குள் ரவிக்கையின் முன்புறமாக வைக்கப்பட்டிருந்த சிறு வெள்ளிப் பெட்டி ஒன்றை எடுத்தார். ஒரு சிகரெட் பெட்டி அளவிலும் உருவத்திலும் அமைந்த சிறு பேழை. பொறுமையற்று அருவருப்புடன் அந்தப் பெட்டியை முன்னும் பின்னுமாகக் குலுக்கி விட்டு, "இதுதான் எனக்குக் காது கேட்க உதவும் யந்திரத்தின் பாட்டரிப்பெட்டி. நீங்கள் 'இரண்டும்' என்று சொன்னீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"சரி, இரண்டுமே சாப்பிடுங்கள்."

கையைத் தட்டினார். ஓரிரண்டு வினாடிக்குப் பிறகு பதினெட்டு வயது மதிப்பிடக் கூடிய அழகு மங்கை ஒருத்தி வாயிற்படியில் தோன்றினாள்.

ஸிஸ்டர் அப்பெண்ணுக்குக் கட்டளையிட்டு முடித்தார். அப்போது நான், "இங்கு நான் சாப்பிட வரவில்லை" என்று மறுத்தேன்.

"அது சரி, சாப்பிடவா வருவீர்கள்? ஆனால் என்னை வந்து பார்த்து விட்டுக் கொஞ்சம் டிபனும் காப்பியும் கூடச் சாப்பிடாமல் போவார்களா? அதிதி உபசாரம் என்பதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமல்லவா?"

தலையை ஒரு குலுக்குக் குலுக்கினார் அவர். காதுக் கருவியை இன்னமோர் உலுக்கல். "இப்பொழுது நான் என்ன சொல்ல வேண்டும்?"

"எல்லாமுமேதான்."

"எல்லாமுமா?"

நான் எதற்கு வந்திருக்கிறேன் என்பது அவர் அறிந்ததுதான். தம்மால் இயன்றவரையில் நான் கோரியதைச் சொல்ல முயல்வதாக உடனே கூறி விட்டார்.

தம் சுயகதையும், தம்மிடம் படித்த—ஜீவநரகத்திலிருந்து தாம் காப்பாற்றிய—நூற்றுக்கணக்கான பல பெண்களின் கதைகளையும் கூறுவதென்றால் மணிக்கணக்காக ஆகுமே. அவ்வளவு அவகாசம் தமக்குக் கிடைக்குமா என்றெல்லாம் அவர் யோசித்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, தாம் சொல்லி வருவதைக் கேட்டுக் கொண்டிருப்பதில் என்னுடைய நேரம் வீணாகி விடுமே என்று கவலைப்பட்டார்!

அவர் ஆரம்பித்தார்: "இங்கே—தெற்கே — குழந்தைப் பிராய விவாகங்கள் பழங் கதையாகி விட்டன. எங்கோ, எப்போதோ ஒன்று நடக்கலாம். தற்சமயம் கல்யாணம் செய்யப்படும் வயதும் மிகவும் இளமையான வயதுதான். இருந்தாலும், பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டது. இப்பொழுதெல்லாம் ஆயிரம் ஆயிரம் குழந்தை விதவைகள் இல்லை, முன்பு போல....."

சமையற்காரப் பெண் பட்சணங்களைச் சிறு 'எவர்சில்வர்' தட்டுகளில் எடுத்து வரவும் பேச்சு தடைப்பட்டது.

"நீங்கள் எதியாமல் சாப்பிட வேண்டும்" என்று கூறிக் கொண்டு தம் தட்டில் இருந்ததை ஒரு விரலால் இலேசாகக் கிளறினார். "என்னுடைய மாணவிகளில் சிலர் சாப்பிடப் படுத்திய பாடு! சிங்கநாதம் செய்வார்கள். அவர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாகவும், திடகாத்திரமுள்ளவர்களாகவும் வளருவதற்கும், உலகத்தில் பயனுள்ளவர்களாகத் திகழுவதற்கும் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று அவர்களுக்குப் புரிய வைப்பது எளிதே அல்ல. என் சித்தியும் நானும் அவர்களைத் தினமும் இரை சாப்பிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினோம் என்பதாகச் சிலர் செய்த ஆர்ப்பாட்டம்!" பழுத்த மூங்கில் போன்ற பொன்னிற வதனம் ஏளனமான ஒருவித நகைப்பில் சுருங்கி மடங்கியது. "என்ன பைத்தியக்காரத்தனம் இது? பயனற்ற அற்ப விஷயங்களைப் பற்றி உங்களிடம் பேசுகிறேனே!" என்றார்.

"அப்படியில்லை. நான் எல்லாமுமே தான் கேட்க விரும்புகிறேன்."

"எல்லாமுமா? உண்மையாகவா?"

"ஆமாம். உண்மையாக."

"சரி, நான் சொல்ல முயன்று பார்க்கிறேன். எங்கே ஆரம்பிக்கட்டும்?"

"முதலிலிருந்து."

"அதாவது எனக்கு நேர்ந்த துக்கச் சம்பவத்திலிருந்தா?"

"இல்லை, நீங்கள் பிறந்ததிலிருந்து."

அவர் மீண்டும் நகைத்தார் — இந்த முறை கலகல வென்று. "என்ன, என்



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்



''கவுனிலிருந்து பாவாடை, பாவாடையி லிருந்து தாவணி, தாவணியிலிருந்து புடவையையும் கட்டியாச்சு...''

''இன்னுமா, பஸ் வரல்லே?''

வாழ்க்கையையே நான் மறுபடியும் ஒரு முறை வாழ வேண்டும் என்கிறீர்களா? சரி, பார்ப்போம். ஆனால் அது பெருங் கதையாக இருக்கப் போகிறது. பல வாரங்கள் பிடிக்கும் சொல்லிமுடிக்க.''

உண்மையில் பல மாதங்கள் பிடித்தன. நான் ஸிஸ்டரை வாரந்தோறும் பல முறை சந்தித்தேன். அவர்களுக்கு அவகாசம் கிட்டியபோது இன்னும் அடிக்கடி கூடக் கண்டு வந்தேன். அநேக சமயங்களில் நான் சென்றபோது பலர் ஏற்கனவே காத்திருப்பதைக் கண்டேன். அவர்களில் பலர் என்னிடம் பேச மிக ஆவலாக இருந்தனர். நானும் அவர்கள் கூறுவதைக் கேட்க அதே துடிப்புடன் இருந்தேன். நான் அவர்களிடமிருந்தும் மற்றும் தேசத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த ஸிஸ்டரின் பழைய மாணவிகளைச் சந்தித்து, அவர்களிடமிருந்தும் வெகு விஷயங்கள் அறிந்தேன். நெடுந்தூரத்திலுள்ள கவன்ட்ரி (Coventry)யில் இருந்த மிஸ் பிரேகருக்கு (Miss Prager) நான் எழுதிக் கேட்டேன். அவர் என் வினாக்களுக்கு விடை அளித்தும் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பழைய பத்திரிகைகளின் நறுக்குகள் தந்தும் உதவினார்.

ஸிஸ்டர் சுப்புலக்ஷ்மி அவர்களுக்குத் தம் முன் நாட்களைப் பற்றிப் பேசப் பேச, நினைவுகள் மேலும் மேலும் பளிச்சென விவரம் பெற்று வந்தன. முதுமையின் அகங்காரம் சிறிதும் அற்றவர் ஆன படியால், அவர் தம் வாலிபப் பருவத்தில் வைத்திருந்த நாட் குறிப்புப் புத்தகங்கள் அனைத்தையும் பயனற்றவை என்று அழித்து விட்டிருந்தார். ஆயினும் தம் குடும்பத்தின் வரலாற்றிலும் தம் வாழ்க்கையிலும் முக்கியமான தேதிகளைக் குறித்து வைத்திருந்த ஒரு புத்தகத்தை மட்டும் ஜாக்கிரதையாக வைத்திருந்தார். அதைப் படிக்க எனக்கு அனுமதி தந்தார். தவிர, நான் கேட்ட எந்தக் கேள்விக்கும் அவர் பதிலளிக்க மறுத்ததில்லை.

கூடுமானவரை எனக்குச் சொல்லப் பட்டபடியே சகோதரி அவர்களின் சரித்திரத்தையும், அவர் மாணவிகளின் வரலாற்றையும் கூற முயன்றிருக்கிறேன். நான் முதன் முதல் அவரைப் பார்க்கப் போனபோது இருந்ததைவிட இப்போது சிறிதே திடம் குறைந்து, கண்கூடாக மெலிந்திருக்கிறார். இருந்தாலும், நான் எப்போது காணச் சென்றாலும், ஏதோ ஒன்று புதிதாகச் சொல்லத் தவறியதில்லை. அவரைப் பற்றி நான் எழுதுவதன்மூலம் என் நேரத்தை நான் வீணாக்குவதாகவே இன்னமும் அவர் நினைப்பதாகத் தெரிகிறது. அவர் அன்றொரு நாள் என்னைக் கேட்டார். ''நீங்கள் என்னைப்பற்றி எழுதுவதைவிட நீங்கள் திட்டமிட்டுள்ளபடி ராஜாஜி அவர்களின் முழு வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய இன்னொரு நூலை எழுதி முடித்து விடுவதுதானே? அவர் ஒரு மகாபுருஷர். அவர் எவ்வாறு இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக ஆனார் என்பதைப் பற்றிப் படிக்க எல்லோரும் விரும்புவார்கள். தவிர நான் யார்?.....'' அவர் கொஞ்சம் நிதானித்தார். தம் செவிக் கருவி பாட்டரிப் பெட்டியை எடுத்து, முதலில் இலேசாக அதிருப்தியோடும், பிறகு வேகமாகவும் ஓர் உலுக்கு உலுக்கினார். ''நான் யாரோ? யார்தான் என்னைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறார்கள்!''

''அப்படியாயின், அவர்கள் கேள்விப் பட வேண்டிய நேரம் வந்து விட்டது!''


''இல்லை. நீங்கள் சொல்வது தவறு. எனக்குக் கிடைத்த வாய்ப்புக் கிடைத்திருந்தால், யாருமே நான் செய்த அளவு செய்திருக்க முடியும்.''

''இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையோர் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லையே? தாங்கள் செய்தீர்கள். அதுதான் உங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.....''

''முக்கியத்துவம்!'' அவர் ஓர் ஏளனச் சிரிப்புச் சிரித்தார். ''முக்கியத்துவம் யாருக்கு வேண்டும்? உபயோகமாக இருக்கிறோமா என்றல்லவா பார்க்க வேண்டும்?''

(தொடரும்)

ஆகஸ்டு பதினெட்டாம் தேதி. சேவைக்கு ஒரு சகோதரியான சுப்புலக்ஷ்மி அம்மாளின் எண்பதாவது பிறந்த நாள். அவரது படத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.



காபுருஷோ மகாபுருஷ் (வங்காளி)

காபுருஷோ மகாபுருஷ் என்னும் தலைப்பில் வந்துள்ள வங்காளிப் படத்தில் இரண்டு கதைகள். இயக்கியவர் புகழ்பெற்ற சத்யஜித் ரே. முதற்கதையை எழுதியவர் பிரேமேந்திர மித்ர என்னும் புகழ்பெற்ற ஆசிரியர் என்றால், இரண்டாம் கதைக்கு உரியவர் கேலியும் கிண்டலும் கலந்த நடைக்குப் பெயர் போன பரசுராம்.

ஆனால் கதை......?

முதலாவது அரசமரம் பிரதட்சிணக் கதை. நூற்றெட்டென்ன, ஆயிரத்தெட்டு முறை படித்தும் படமாகப் பார்த்தும் பழகிப் போன கதை. ஒரு காதலனுக்கு ஒரு காதலி. சந்தர்ப்பச் சௌகரியங்கள் காதலியை வேறு ஒருவருக்கு மனைவியாக்கி விடுகின்றன. வேறு ஒரு சந்தர்ப்பச் சூழ்நிலை காதலனையும் காதலியையும் சந்திக்கவைத்து, என்னோடு வந்து விடுகிறாயா என்று கேட்குமளவுக்குத் தூண்டுகிறது.

இரண்டாவது கதை போலிச் சாமியாரை பற்றியது. இதுவும் நம் தமிழ்நாட்டுக்குப் புதிய சரக்கு அல்ல. எழுதியவர் திறனும், எடுத்தவர் திறனும் பார்ப்பவர்களைச் சிரிக்க வைக்கின்றன. அது மட்டுமா? சிந்திக்கவும் வைக்கின்றன, இந்த மூட நம்பிக்கைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கிடையாதா என்று!

நடிகர்களும் தங்கள் பாத்திரங்களை நன்கு உணர்ந்து நடித்திருக்கிறார்கள். இசையமைப்பும் செவிகள் ஏற்கும் வண்ணம் அமைந்திருக்கிறது.

இத்தனை இருந்தும் ஒன்று மட்டும் கூறாமல் இருக்க முடியவில்லை. முதல்தரச் சமையற்காரர், இரண்டாந்தர டிகாக்ஷனில் கலந்து கொடுத்த காப்பியின் ருசியைத்தான் காண முடிகிறது.



இமயத்தின் மடியில் (ஹிந்தி)

ஹிமாலய் கீ கோத் மேன் என்னும் இந்த ஹிந்திப் படத்தில், உயர்ந்த இமயச் சிகரங்களையும் சினார் மரங்களையும் இயற்கை வளம் கொழிக்கும் இன்னும் பல காட்சிகளையும் வண்ணக் கலவையாகக் கண்டு களிப்புற முடிகிறது. ஒளிப்பதிவு உள்ளத்துக்கு நிறைவு தருகிறது.


நாட்டுப்புறங்களுக்கு டாக்டர்கள் போக யோசிக்கிறார்கள். எனவே, பல மருத்துவ மனைகள் மூடிக் கிடக்கின்றன என்று கேள்விப்படுகிறோமே, அந்தக் கருத்தை நினைவில் கொண்டு, இமயத்தின் மடியில் என்னும் இந்தக் கதை புனையப்பட்டிருக்கிறது.

டாக்டர் சுனில் தன்னை நாட்டுப்புறப் பணிக்கு அர்ப்பணிக்கிறான். அவன் பணிக்குத்தான் எத்தனை இடையூறுகள்! எத்தனை சிக்கல்கள்!

இப்படி இடையூறுகளையும் சிக்கல்களையும் ஏற்படுத்திக் கதையைப் பின்னிக் கொண்டு போயிருப்பவர்கள், திரும்பப் பிரிக்கும்பொழுது நல்லவேளையாகத் திணறவில்லை. சிறிதும் சிக்கு ஏற்படாமல் சுலபமாகப் பிரித்திருக்கிறார்கள்; சுபமாகவும் முடித்திருக்கிறார்கள்.

இமயத்தின் மடியில் வாழும் மலைப்புற மங்கையாக வரும் மாலா சின்ஹா பாத்திரமறிந்து நன்றாக நடித்திருக்கிறார், நடனமாடும் இரண்டொரு இடங்களைத் தவிர. மனோஜ் குமாரும் டாக்டராக ஈடு கொடுத்து நடித்திருக்கிறார். தயாளாக வரும் டேவிட், கொள்ளைக்கார லாகன் சிங்காக வரும் ஜயந்த் முதலியவர்களும் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பாத்திரத்துக்கேற்ப நடித்திருக்கிறார்கள்.

நிறப் படமாகப் பார்க்கும்போது விஜயபட் இயக்கியுள்ள இந்தப் படம் மனத்துக்கு நிறைவு தருகிறது என்றாலும் கதையின் மூலக் கருத்துக்கேற்ப இளம் டாக்டர்கள் கிராமப்புறம் செல்ல தென்றல் புலவனைப் போல் எங்களுக்கும் ஒரு பெண்ணைக் கொண்டு வா என்று கேட்கத் தொடங்கலாம். 'இமயத்தின் மடியில்' படத்தைப் பார்த்து ஆறுதல் பெறுமாறு சிபாரிசு செய்வோம்!



வழிகாட்டி

படித்த பெண் கழுத்தில் படிக்காத மேதை-- வேலைக்காரன் ஒருவன் தாலி கட்டும் சூழ்நிலை ஏற்படுகிறது -- பணம் படுத்தும் பாட்டினால்! படித்த பெண் படிக்காத மேதையை அலட்சியப்படுத்துவதும் துன்புறுத்துவதும் அவன் தவிப்பதும் இயல்புதானே? அந்தப் படிக்காத மேதை -- வேலைக்காரனைப் படித்த மேதையாக்கி விடுகிறாள் ஒரு நர்ஸ். பிறகுதான் படித்த பெண்ணுக்குப் பொறாமைக் கனல் கொழுந்துவிட்டு எரிகிறது; நர்ஸும் அந்தப் புதிய படித்த மேதையும் அடிக்கும் காதல் கூத்தையெல்லாம் அந்தத் தாலி கட்டிய படித்த பெண் பார்த்துப் பொருமு, இதெல்லாம் அந்தப் படித்த பெண்ணைப் புதிய படித்த மேதைக்குச் சேர்த்து வைக்கும் நாடகம் என்று வெட்ட வெளிச்சமாக்கப்படுகிறது. நர்ஸ் தியாகியாகிப் போர்முனைக்குப் போகக் கதை வழக்கம்போல் சுபமாக முடிகிறது.

வழிகாட்டியின் மூலக் கதை பி. எஸ். பாரதியினுடையதாம்! இதற்கு வசனம் நாகர்கோயில் பத்மநாபன் எழுதியிருக்கிறார்.

படித்த பெண்ணாக ராஜஸ்ரீ வந்து நறுக்கே குறுக்கே ஆடவர் கண்ணையும் நாண வைக்கிறாள். படிக்காத மேதையாக எஸ். எஸ். ராஜேந்திரனும், நர்ஸாக விஜயகுமாரியும் வருகின்றனர். படிக்காத மேதையாகப் பல படங்களில் நடித்த ராஜேந்திரனுக்கு அந்த வேஷம் தண்ணீர் பட்ட பாடுதான்!

நாய் வளர்க்கும் சேமாக எம். ஆர். ராதா வந்து மனிதனின் பெருமையைக் குறைக்கிறார்; நாயின் பெருமையை உரைக்கிறார்! சேமாவின் பிள்ளை, பணக்கார வீட்டுப் பெண்ணை மணப்பதாகப் பொய் கூறி ஏழைப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டு கொட்டமடிப்பது ரொம்பப் பழசாயிற்றே! 'சமீபத்தில் வெண்ணிற ஆடையிலும் நாங்கள் இந்தக் காட்சியைப் பார்த்தாகிவிட்டதே' என்று படம் பார்க்கையில் ஒருவர் முணுமுணுத்தது காதில் விழாமல் இல்லை

வழிகாட்டியில் ஒளிப்பதிவு சில இடங்களில் படத்தை இருட்டடிப்புச் செய்துவிடுகிறது; எடிட்டிங் குறை; ஒளிப்பதிவாளர் அதற்கு என்ன செய்வார்?

வழிகாட்டியில் பல பழைய படங்களைப் பார்த்த திருப்தி! எதிர் பார்த்த முடிவு; இருந்தாலும் ராஜேந்திரனின் வேலைக்காரன் நடிப்புக்காக ஒரு தடவை பார்த்து வைக்கலாம்!

சாதல் இல்லையேல் காதல்

சோ





காட்சி 1

ஒரு கல்லூரியில் மாணவர் விடுதி:

[எந்தக் கல்லூரி என்ற அநாவசியமான ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை.... ஆக மொத்தம் ஒரு கல்லூரி.... மாணவர்கள் குஷியாக அங்குமிங்கும் கூட்டமாக நின்று கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறார்கள்..... இது ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு முன்பு நடைபெறும் காட்சியாகத்தான் இருக்கவேண்டும். அதற்குப் பிறகு மாணவர்களைத் தேடிக் கல்லூரிக்கு வந்து என்ன பயன்..... சிறைகளை அல்லவா தேடிப் போக வேண்டும்?

நாம் பார்க்கும் அறையில் நாலைந்து மாணவர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அறையின் அழகே அழகு! ஹாலிவுட் நட்சத்திரங்கள் சுவர்களிலே ஜொலிக்க, சிகரெட்டு பாக்கெட்டுகள் மேஜைகளை அலங்கரிக்க, வெண்பட்டு விரித்தாற்போல் தரையில் சிகரெட்டுத் துண்டுகள் சிதறிக் கிடக்க, புகை மண்டலத்தின் நடுவே நாலைந்து மாணவர்களைக் காண்கிறோம். நால்வரையும் வர்ணிக்கத் தேவையில்லை. நடை, உடை பாவனையில் இக்காலத்து மாணவர்கள் ஒன்றி நிற்கிறார்கள். கஷ்டப்பட்டுக் கலைத்து விடப்பட்ட கிராப், தூக்கிவிடப்பட்ட காலர், இடுப்பிலே பெல்ட், பெல்ட் எதற்கு என்று கேட்கிறாற்போல் உடலை இறுக்கிப் பிடித்திருக்கும் கால்சராய், பட்டினிச் சாவு படங்களுக்கு போஸ் கொடுக்கத் தகுதியான உடற்கட்டு......

அவர்களில் ஒரு மாணவன் முக க்ஷவரம் செய்து கொண்டிருக்கிறான். ஒருவன் பூட்ஸுக்கு பாலிஷ் போட்டுக்கொண்டிருக்கிறான். கிரிக்கெட் மட்டையைச் சரிபார்த்துக் கொண்டு ஒருவன்... ஒன்றுமே செய்யாமல் நாற்காலியில் காலைத் தூக்கி வைத்துக் கொண்டு முகத்துக்கு இரு கைகளையும் முட்டுக்கொடுத்துச் சோகமே உருவான ஒரு மாணவன்.... மற்றவர்கள் அவனைப் பார்த்தே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

கிரிக்கெட் மட்டை: டேய், நாகு! உன்னாலே இந்த ரூமுக்கே அவமானண்டா!

பூட் பாலிஷ்: நன்னாச் சொன்னே! இவனே நாம இந்த ரூமிலே நுழையவே விட்டிருக்கக் கூடாது!

முகக்ஷவரம்: இந்தமாதிரி க்ஷவரம் பண்ணு வான்னு தெரியுமா?

கி.ம.: பேசாம பாரேன்...டேய் நாகு... மிஸ்டர் நாகராஜன்!

நாக: என்னே என்னடா பண்ணச் சொல் றீங்க? எனக்கு ஒண்ணும் பிரைஸ் வரலேன்னு, அதுக்கு நான் என்னடா பண்ணுவேன்?

கி. ம.: இருக்கிறவங்க எல்லாரும் பிரைஸ் வாங்கின ஒரே ரூம்னு பேர் வாங்கலாம்னு பார்த்தோமேடா... எல்லாம் போச்சு!

நாக: சும்மா மிரட்டாதீங்கடா... ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்திலே ஸ்போர்ட்ஸ்லே, மூணு பிரைஸ் வாங்கிட்டாங்களாம்...

மு. க்ஷ: குருட்டு அதிர்ஷ்டம், இருட்டு அதிர்ஷ்டம்னு பேசாதே. இந்தப் பிளேடா லேயே கீறிடுவேன்!

நாக: சரிதாண்டா! ஆப்டர் ஆல் அது நம்ம ஊர் பிளேடு... கீறினு ரத்தம்கூட வராது... பாவம்... நீயும்தான் இன்னிக்குக் காலமேலேந்து ஷேவ் பண்ணிக்கிட்டிருக்கே.. இன்னும் முடிஞ்ச பாடில்லே.

பூட் பா: பேச்சு மட்டும் வாய் கிழியறது... டேய் நாகு, எதுலேயாவது பிரைஸ் வாங்கித் தொலைக்கக் கூடாதா?... ஒரு ரன்னிங் ரேஸ்.. ஒரு சைக்கிள் ரேஸ்... ஒரு வாக்கிங் ரேஸ்...

நாக: ரேஸ்லேயே இர்ரா!...போன ஜன்மத்துலே குதிரையாப் பிறந்திருப்பியோ?

பூட் பா: அட்லீஸ்ட் இந்த ஜன்மத்திலே மனுஷனா இருக்கேன்.. உன்னே மாதிரி மரக் கட்டையா இல்லாம...

கி. ம: அட விளையாட்டுலேதான் வக் கில்லே... பிரைஸ் வாங்கலே! படிப்பிலே யாவது வாங்கக் கூடாதா... இங்கிலீஷ்...

நாக: சே... அதுலே போய் பிரைஸ் வாங் கிறதா... அயல் நாட்டு பாஷை!

கி. ம: சரி, தமிழ்?

நாக: நம்ம தாய் மொழி... அதுலே பிரைஸ் வாங்கறது ஒரு பெருமையா?

மு. க்ஷ: பெரிய இவரு, இவரு! இந்தி வ ந் தா த் தா ன் பிரைஸ் வாங்குவார் போலிருக்கு!

நாக: இந்தி வந்தா எனக்கு மட்டுமா பிரைஸ்... எல்லாருக்கும் பிரைஸ்தான். எழுதறவங்களுக்கும் ஒண்ணும் தெரியாது, திருத்தறவங்களுக்கும் ஒண்ணும் தெரியாது. எல்லாரும் ஒரே மார்க் — ஒரே பிரைஸ்!

பூட் பா: கொஞ்சமாவது வருத்தம் இருக்கா பாரேன் அவனுக்கு. அடுத்த வாரம் ஆண்டு விழாவிலே இந்த ரூம்லேயுள்ள நாலு பேரும் வரிசையா, பிரைஸ் வாங்க முடிந் தால் எவ்வளவு பெருமையா இருக்கும்?

நாக: நான் என்னடா செய்யறது...நீங்க மூணு பேரும் வாங்கிப்பிட்டீங்க... பேச றீங்க.... எனக்கு ஏத்த மாதிரி ஒரு போட்டி யும் இல்லேயேடா?... உம், இனிமே பேசி என்ன பிரயோசனம்?... எல்லாப் போட்டி யும்தான் முடிஞ்சாயிடுத்தே.

மு. க்ஷ: (திடீரென்று உரக்க) ஆ!

எல்லோரும் (திடுக்கிட்டு): என்னடா? பிளேட் அறுத்திடுச்சா?

மு. க்ஷ: ஐடியா!... எனக்கொரு ஐடியா!

கி. ம: வேணுமா?

நாக: பக்கத்து ரூம்லே போய்க் கேளு!

மு. க்ஷ: உஸ்!... எனக்கொரு பஸ்ட் கிளாஸ் ஐடியாதோணிடுத்து (கையில் பிளேட் பிரஷ் சகிதம் உற்சாகமே உருவாக நிற்கிறான்) பிரமாதமான ஐடியா!

நாக: என்னடா அது.. படிப்பை நிறுத் திட்டு ஸலூன் வைக்கிறதாகத் தீர்மானம் பண்ணிட்டியா?

மு. க்ஷ: ஏன் உனக்கு வேலே வேணுமா?... முட்டாள்.. டேய், உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். கவனமாகக் கேளு.. நம்ம காலேஜ் நோட்டீஸ் போர்டிலே பார்த்தேன். இன்னும் ஒரே ஒரு போட்டி முடியலே... இன்னிக்குத்தான் கடைசி நாள்... பேசாம அதுலே சேர்ந்திடு... எப்படியாவது பிரைஸ் அடி! உம்!

கி.ம. (ஆர்வத்தோடு): என்ன போட்டிடா அது?

மு. க்ஷ: தமிழ்க் கவிதைப் போட்டி!

கி. ம: உன்னே அறைஞ்சா என்ன? இவ னேக் கவிதை எழுதச் சொல்றியா?

நாக: என்னே என்னடா அம்பிகாபதின்னு நினேச்சியா?

மு. க்ஷ: என்னடா விஷயத்தைப் புரிஞ் சுக்காமப் பேசறீங்க. தமிழ்க் கவிதைப் போட்டியிலே எவண்டா கலந்துப்பான்? மிஞ்சி மிஞ்சிப் போனு ஒருத்தன், இரண்டு பேர்... அட மூணு பேர்னே வெச்சுக்க... இவனுக்கு மூணாவது பிரைஸாவது வந்து தானே ஆகணும்?

பூட் பா: கரெக்ட்! தமிழ்லே எவண்டா கவிதை எழுதுவான்?...

நாக: ஆமாம்! இங்கிலீஷ்லேன்னு இவரு அப்படியே கவிதை எழுதிக் குவிச்சுடுவார்!.. பெரிய மில்டன்!

மு. க்ஷ: ஸ்....ஸ்...

கி. ம: டேய் இவன் சொல்றதும் வாஸ் தவம்தாண்டா... கவிதைப் போட்டியிலே எவனுமே கிட்ட வரமாட்டான்... நாகு! பேசாமல் எதையாவது எழுது... ஒரு கை பார்த்துடலாம்.

மு. க்ஷ: இதை விட்டா வேறே வழியே இல்லே.

கி. ம: பேசாமல் இருங்கடா...காரியத் தைக் கவனிப்போம்... சீக்கிரம் ஒரு பேப்பர், பேனு எடுங்க... இவன் கவிதை எழுதட்டும்.

பூட் பா: நான் அப்பவே பிடிச்சு பேப்பர், பேனுவைத்தான் தேடிக்கிட்டிருக்கேன்...

முக க்ஷ: என் மேஜை டிராயரிலே இருக்கு மேடா...

பூட் பா: இந்த ரூம்லேயே காணேம்.

கி. ம: படிக்கிற பசங்க ரூமாவா இருக்கு இது?... ஒரு பேப்பர் கிடையாது... பேனு கிடையாது...

பூட் பா: பிளேட் இருக்கு.

முக க்ஷ: பேப்பரும் பேனுவும் இருந்தால் தான் படிக்கிற பசங்க இருக்காங்கன்னு அர்த்தமா..., தெரு விளக்கிலேயே ஒருத்தர் பாடம் படிச்சு ஹைகோர்ட் ஜட்ஜ் ஆகலே?

கி.ம: அதுக்கும், இதுக்கும் என்னடா சம்பந்தம்?

முக. க்ஷ: சம்பந்தம் இருக்குதோ இல் லேயோ... படிப்பு விஷயத்தைப் பத்திப்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்கு அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/7/65

பேச்க வரச்சே... அந்த உதாரணத்தைத் தான் சொல்வாங்க. நானும் சொல்லிட்டேன்... ஆமாம், தெரு விளக்கிலேயே படிச்சாரே அவர் பேரென்ன... முத்துஸ்வாமி தீக்ஷிதரா?

பூட். பா: இல்லே... ஷ்யாமா சாஸ்திரி!

இ. ம: தியாகராஜர்.

முக. க்ஷ: சே! அவர் சினிமா ஆக்டர்.... (திடீரென்று ஞாபகம் வந்து) சே! அந்தக் காலத்துலே பாகவதர் ஆக்ட் பண்ணிப் பார்க்கணும்... என்ன குரல்... ஆகா (தன்னையும் மறந்து பாட ஆரம்பித்து விடுகிறான்) மன்மத லீலையை வென்றார் உண்டோ. ஓ....ஓ!... (நாகுவைப் பார்த்து) நாகு!

நாக (சினிமா பாணியில்): சுவாமி!...

இ. ம: ஷட் அப்!... இந்தாடா... என் பையிலேயே பேனா இருக்குது. இந்தா இந்த நோட்டுலே பேப்பர் இருக்கு... கம் ஆன்... கவிதை எழுது.

நாக: என்னடா நிஜமாவா சொல்றே...?

இ. ம: பின்னே என்ன, உங்கிட்ட விளையாடறமா? இந்த ரூமிலே இருக்கறவங்க எல்லாரும் பிரைஸ் வாங்கிறாங்க என்கிற பேர் கண்டிப்பா வந்தாகணும்... உம், எழுது!

நாக: சே! எனக்கென்னடா கவிதை எழுதத் தெரியும்?...

இ. ம: அதெல்லாம் அநாவசியம். தைரியமா ஆரம்பி. தனிச்சா வரும்.

பூட். பா: எல்லாம் அவ்வளவுதான்டா... இப்ப நம்பளை எல்லாம், நம்ப அப்பா அம்மா வெல்லாம் காலேஜ்லே சேர்த்தாங்களே.. நாம பெரிய புத்திசாலிங்கன்னு சேர்த்தாங்க? சேர்ந்தா தனிச்சா படிப்பு வராதான்னு ஒரு அசட்டு நம்பிக்கை...

இ. ம: நீ பேசாம இரேண்டா... இதோ பார் நாகு! இன்னும் ஐந்து நிமிஷம் டைம் தரேன்... மரியாதையா கவிதை எழுது. இல்லே...இந்த ரூம்லே நீ படற அவஸ்தை... காலேஜை விட்டே ஓட வேண்டியிருக்கும்.

பூட். பா: உம்... எழுதுரா.

முக. க்ஷ: சீக்கிரம்...

நாக (அழ மாட்டாமல்): சொல்றதைக் கேளுங்கடா. வேணாண்டா... எனக்கெப் படிடா பிரைஸ் வரும்?

இ. ம: நீ எழுது. பிரைஸ் வராட்டி உன்னை ஒண்ணும் செய்யலே.

நாக: பிரைஸ் வரலேன்னு நிச்சயமா கோவிச்சுக்க மாட்டீங்களே?

முக. க்ஷ: நிச்சயமா கோவிச்சுக்க மாட்டோம்... உம் எழுது... டைம் ஆறது.

நாக: இப்படி அவசரப்படுத்தினா எப்படி... எனக்கு 'மூட்' வரலே....

இ. ம: என்னது? 'மூட்' வரலையா?

நாக: ஆமாம். மகாபலிபுரம் போனால் தான் எனக்கு 'மூட்' வரும்.

இ. ம (அவன் மண்டையிலடித்து): பெரிய கவிஞர் இவரு!... எழுதுரா ராஸ்கல்...

நாக: என்னத்தைடா எழுதறது...

முக. க்ஷ: எதையாவது எழுது.

நாக (பரிதாபமாக): கொஞ்சம் டைம் கொடுங்கடா... ப்ளீஸ்...

இ. ம. இன்னிக்குத்தானேடா கடைசி நாள்... எழுது... எழுது... டைம் ஆறது.

[மூன்று பேருமாக அவனை நெருங்கி மிரட்ட, நாகராஜன் பேனாவைக் கையில் எடுக்கிறான்.]

பூட். பா: உம்!...

இ. ம: கம் ஆன்!

நாக: ஒரு பத்து நிமிஷம் பேசாம இருங்கடா. எதையாவது எழுதித் தொலைக்கிறேன்!

இ. ம: ஆல் ரைட்...

(அவரவர்கள் அவரவர்கள் காரியத்தில் ஈடுபடுகிறார்கள். நாகராஜன் எழுத முனைகிறான். சற்று நேரம் கழித்து)

நாக: உம்... ரெடி!... இந்தாங்க கவிதை!

இ. ம: எழுதிட்டியா! பலே!... நீ ஆம்பிளை சிங்கண்டா. கொண்டா படிச்சுப் பார்க்கலாம்.

நாக: இரு... இரு... இதுக்கு மேலே எனக்கு எழுதத் தெரியாது... தெரிஞ்சதை எழுதிக் கையெழுத்தும் போட்டுட்டேன்.., இதைப் போட்டியிலே சேர்த்தால் சேருங்க, விட்டா விடுங்க...

(அதைக் கீழே போட்டுவிட்டு ஓடி விடுகிறான். மற்றவர்கள் அதை எடுத்துப் படிக்கிறார்கள்.)

இ. ம (உரக்கப் படிக்கிறான்):

போட்டியிலே நான் மாட்டிகிட்டா
பொறுக்க முடியுமா நான் கலாட்டா!
ஒண்ணும் தோணலே, ஓடிப் போறேன்
தேடாதீங்க நானே நாடி வாரேன்!

முக. க்ஷ: ராஸ்கல்! கவிதையாடா இது?

பூட். பா: போட்டியிலே மாட்டிக்கிட்டாக்க உங்க கலாட்டா என்னாலே பொறுக்க முடியாமப் போயிடும். இன்னிக்கு ஓடிப் போயிடறேன். என்னைத் தேடாதீங்க. நானே நானே திரும்பி வரேன்...

இ.ம: ஆஹா! அவர் வள்ளுவர்! எழுதிட்டுப் போயிட்டாரு. இவரு பரிமேலழகர்... அர்த்தம் எழுதறாரு...

பூட். பா: இப்ப என்னடா பண்றது?

முக. க்ஷ: டேய் ஐடியா!

இ. ம: இரும்பியுமா?

முக. க்ஷ: பேசாம இந்தக் கண்ணறாவிக் கவிதையை அவன் பேரிலே நாமே போட்டியிலே சேர்த்துடலாம். மானம் போகட்டும். அப்பத்தான் அவனுக்குப் புத்தி வரும்.

பூட். பா: மானம் போனா புத்தி வரும்... அதாவது புத்தி இருந்தா மானம் இருக்காது.. அதாவது உலக மேதைகள் எல்லாம் மானத்தைத் துறந்தவர்கள்... ஆஹா! என்ன கருத்து!

இ. ம: ஷட் அப்!... அவன் சொன்ன மாதிரி நாமே கவிதையை அவன் பேர்லே அனுப்பிடுவோம் .... மாட்டிக்கிட்டு முழிக்கட்டும்.

முக. க்ஷ: தமிழ் புரொபஸர் அவனை உண்டு இல்லேன்னு பார்த்துடுவார்...

பூட். பா: அவனுக்குச் சரியா வேண்டியது தான்.

இ. ம: வரட்டும் அவன்... கொடுக்கிற உதையிலே...

முக. க்ஷ: கட்டி வெச்சு உதைக்கணும்டா அவனை!

பூட். பா: ஜாயிண்டுக்கு ஜாயிண்ட் பேர்க்கணும்டா!

இ. ம: அவன் பல்லைத் தட்டிக் கையிலே கொடுக்கிறேன் பார்!

பூட் பா: டேய்... தமிழ்க் கவிதை எழுதின உடனே ஒருத்தனுக்குக் கிடைக்கிற மரியாதையைப் பார்த்தீங்களாடா? ஆஹா தமிழ் நாடே!

காட்சி 2

[கல்லூரியில் ஆண்டு விழா நடந்து கொண்டிருக்கிறது. போட்டிகளில் பரிசுபெற்ற மாணவ மாணவிகள் பரிசுகளோடு பெருமிதமாக நிற்க, பரிசு பெறாத மாணவ மாணவிகள் இதென்ன பிரமாதம் என்ற பாவனையில் அவர்களைப் பார்க்கிறார்கள்......

பரிசு விவரங்களை அறிவித்துக் கொண்டிருப்பவர் மாணவர்கள் கூச்சலையும் மீறி, தன் குரல் கேட்க அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.......]

அறிவிப்பாளர்: கடைசியாகத் தமிழ்க் கவிதைப் போட்டி முடிவு.

[தமிழ்ப் பண்டிதர் -- புரொபஸர் -- எழுந்திருக்கிறார்......]

த. பு: மாணவ, மாணவிகளே... தமிழ்க் கவிதைப் போட்டி முதல் முறையாக இந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது. மாணவர்களிடம் இவ்வளவு தமிழ் ஆர்வம் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் நினைத்ததற்கு மாறாகவே மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

[மாணவர் கூட்டத்தில் நாகராஜன் நண்பர்கள் மூவரும் ஒருவருக்கொருவர் நாகராஜனுக்கும் பரிசு ஏது என்று கேட்டுக் கொள்கிறார்கள்]

த. பு. (தொடர்ந்து): நாங்கள் நினைத்தோம் — ஒரு கவிதைகூட வராது என்று. ஆனால் என்ன ஆச்சரியம்... உண்மையாகவே ஒரு கவிதை வந்துவிட்டது... அந்தக் கவிதைக்கே பரிசளிக்கிறோம்!

[நாகராஜன் நண்பர்கள் முகத்தில் சந்தோஷம், ஆச்சரியம், ஏமாற்றம் முதலிய பல உணர்ச்சிகள் மாறி மாறி வருகின்றன.]

த. பு. (மேலும் தொடர்ந்து) ஒரே ஒரு கவிதை வந்ததால் மட்டுமல்ல அதற்குப் பரிசு. கவிதை தரக் குறைவாக இருந்தால் யாருக்குமே பரிசு இல்லையெனத் தீர்ப்பளித்திருப்போம். ஆனால், இந்தக் கவிதை உண்மையிலேயே சிறப்பாக இருப்பதால் அதற்கு முதற் பரிசு அளிக்கிறோம்... முதற் பரிசு பெற்ற மாணவர்... நாகராஜன்! — பி. ஏ. வகுப்பு.

[மாணவர்கள் கரகோஷம்...... நாகராஜன் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறான்...]

த. பு. (அழைக்கிறார்): நாகராஜன்!...

[நாகராஜன் தயங்கித் தயங்கிச் சென்று பரிசுக் கோப்பையைப் பெறுகிறான். மாணவர்கள் விசிலடித்து மகிழ்கிறார்கள். பரிசு பெற்று வரும் அவனை அவனது அறை நண்பர்கள் கட்டியணைத்துக் கொள்கிறார்கள்.]

த. பு: அந்தக் கவிதையைப் படிக்கிறேன் கேளுங்கள்.

போட்டியிலே நான் மாட்டிக்கிட்டா
பொறுக்க முடியுமா நான் கவாட்டா!
ஒண்ணும் தோணலே ஓடிப் போறேன்—
தேடாதீங்க நானே நாடி வாரேன்!

மாணவர்கள்: (கூக்குரல்,.... விசில்)...

த. பு: சற்றுப் பொறுமையாக இருங்கள். அர்த்தமில்லாத பிதற்றல் போல் தோற்ற



மளிக்கும் இக் கவிதை, ஓர் ஆழ்ந்த கருத்தை வெளியிடுகிறது.

மாணவர்கள்: (மீண்டும் விசில், கூக்குரல், ஏளனம்).

த. பு.: உங்களைப் போலத்தான் சில ஆசிரியர்களும் நினைத்தார்கள். ஆனால் நான் விளக்கிக் கூறிய பிறகு வியந்து பாராட்டினார்கள். கவிதையின் அர்த்தத்தைக் கவனியுங்கள்.

போட்டியிலே நான் மாட்டிக்கிட்டா
பொறுக்க முடியுமா நான் கவாட்டா!
ஒண்ணும் தோணலே, ஓடிப் போறேன்
தேடாதீங்க நானே நாடி வாரேன்...

''போட்டியிலே நான் மாட்டிக்கிட்டா''—

அதாவது, இந்த உலகப் போட்டியில் நான் சிக்கிக் கொண்டால்,

''பொறுக்க முடியுமா நான் கலாட்டா''—

அதாவது, பொறுக்க முடியுமா நான் கல் ஆட்டா — அதாவது என்றால் பொறுக்க முடியுமா, நான் என்ன ஆட்ட முடியாத, அசைக்க முடியாத கல்லா?

''ஒன்னும் தோணலே ஓடிப்போறேன்,
தேடாதீங்க நானே நாடி வாரேன்!'' —

இந்த உலகில் நான் செய்வதறியாது செத்து மடிகிறேன்... மடிந்தும் என்ன பயன்? அடுத்த ஜன்மத்தில் மீண்டும் இந்த உலகையே அல்லவா நான் நாடி வருவேன்!

ஆஹா! பார்த்தீர்களா?.... என்ன வேதாந்தம், என்ன தத்துவம்! இந்தப் பயனற்ற உலக வாழ்வை எப்படிச் சித்திரித்துவிட்டார்! வார்த்தைகள் இவரிடம் விளையாடுகின்றன. எளிமையான சொற்கள் — உயர்ந்த கருத்துக்கள்! 'கலாட்டா' என்ற சொல் — அதை வைத்து 'நான் என்ன ஆட்ட முடியாத கல்லா?' என்று கேட்கிறார். 'கலாட்டா'வை நாம் விளையாட்டாக நினைத்துக் கோட்டா செய்கிறோம். இவருடைய கவிதைத் திறன் மேலும், மேலும் வளரட்டும் என்று ஆசீர்வதிக்கிறேன்.

[மாணவர்கள் கரகோஷம்..... கூட்டம் கொஞ்சம், கொஞ்சமாகக் கலைகிறது. தமிழ்ப் புரொபஸர் சைகை செய்து நாகராஜனை அழைக்கிறார். அவன் அவரைப் பெருமிதத்தோடு அணுகுகிறான்......]

த. பு: (அவனைத் தனியே அழைத்து) நீயா சொந்தமாத்தான் இதை எழுதினியா?

நாக: ஆமாம் ஸார்! ரொம்ப திங்க் பண்ணி எழுதினேன். திடீர்னு இன்ஸ்பிரேஷன் வந்துடுத்து. உடனே ஒரு மூட் வந்தது. எழுதித் தள்ளிட்டேன்!

த. பு: ஓஹோ! (கோபமாக) மூட் வந்துதா?

நாக: (சற்றுப் பயந்து) ஸார்... நீங்க...

த. பு. (இன்னும் கோபமாக): இன்ஸ்பிரேஷன் வந்துதா?

நாக: நான் அதுங்கிட்ட போகலே ஸார்.. அதுவாதான் எங்கிட்ட வந்தது...!

த. பு: வாயை மூடு... இன்னொரு தடவை இந்த மாதிரி கவிதை, கிவிதை எழுதினே, உன்னைத் தொலைச்சுப்பிடுவேன் தொலைச்சு!

நாக: ஸார்....!

த. பு.: ஒன்னும் தெரியலேன்னு, மத்தவங்கள் மாதிரி வாயை மூடிக்கிட்டிருக்கிறது தானே?

நாக: ஸார்...!

த. பு: உன் கவிதை லட்சணம் என் மானத்தை வாங்கறதுக்கு இருந்தது. மத்த டிபார்ட்மெண்ட் புரொபஸர் எல்லாம், 'தமிழ் டிபார்ட்மெண்ட் அழகைப் பார்த்தியா'ன்னு கேலி பண்ணித் தீர்த்துட்டாங்க. அப்புறம் நானு உட்கார்ந்து உன் தரித்திரம் பிடித்த கவிதைக்கு ஓர் அர்த்தத்தைக் கண்டுபிடிச்சேன். சனியன், அதுக்கு அர்த்தம் தேடறதுக்குள்ளே நான் பட்ட பாடு!

நாக: ஸார்....!

த. பு: ஏன்யா இன்னும் இங்கே நிக்கறே, தொலைஞ்சு போ...

[நாகராஜன் தப்பித்தது போதுமென்று நழுவுகிறான்.]

த. பு: ஏய்... நாகராஜன்... வாய்யா இங்கே... எங்கே போறே...?

நாக: என் ரூமுக்குப் போறேன் ஸார்...

த. பு: பாக்கெட்லே இருக்கிற பேனாவை எடு....

நாக: எதுக்கு ஸார்...(எடுத்துக் கொடுக்கிறான்.)

த. பு. (அதை வாங்கிக்கொண்டு) இனிமே ஏதாவது பேனாவைக் கையிலே தொட்டே, உன்னைத் தீர்த்துக் கட்டிப்பிடுவேன்... உம், போய்த் தொலை... (போகிறார்)

[நாகராஜன் நிக்கிரமை பிடித்தாற்போல் நிற்க, தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த மாணவி ஒருத்தி தயங்கித் தயங்கி நாகராஜனை நோக்கி வருகிறாள்.]

அந்தப் பெண் (தயக்கத்தோடு, ஒரு கல்லூரி-மாணவிக்கு எவ்வளவு நாணம் உண்டோ அவ்வளவே நாணத்தோடு): வந்து...மிஸ்டர் நாகராஜன்... உங்க கவிதை...

நாக (பயந்து): தெரியாமல் எழுதிட்டேன். இனிமே எழுதலே...

அவள் (அநுதாபத்தோடு): மத்தவங்க புரிஞ்சுக்க முடியலேயேன்னு வருத்தப்பட்டுப் பேசறீங்க போலிருக்கு...

நாக: நீங்க... நீங்க...

அவள்: என் பேர் மாலதி... பி. ஏ. முதல் வருஷம் படிக்கிறேன்.

நாக: என் பேர் நாகராஜன். பி. ஏ. கடைசி வருஷம் முதல் தடவையா படிக்கிறேன். உங்க பேர் என்ன, மிஸ் மாலதியா?

மாலதி: யெஸ்... யெஸ்... எனக்குக் கவிதைன்னு உசிரு... இந்தக் கவிதையை நீங்களாவே எழுதினீங்களா?

நாக (இன்னமும் ஒன்றும் புரியாமல்): இல்லே, வந்து... அது... வந்து... எல்லாரும் என்னை மிரட்டிறாங்க... இல்லாட்டா நான் எழுதியே இருக்க மாட்டேன்.. சத்தியமாச் சொல்றேன். என்னை நம்புங்க.

மாலதி: நீங்க ஒரு பிறவிக் கவிஞராத்தான் இருக்கணும்... இல்லேன்னு, இந்த மாதிரி பேச மாட்டீங்க.

நாக: போட்டியிலே கலந்துக்கணும்னு நான் கனவிலேகூட நினைக்கவில்லே.

மாலதி: ஒரு பிறவிக் கவிஞருக்கு, இந்த மாதிரி புகழிலே எப்படி ஸார் ஆசை இருக்கும்? அதான் உங்களுக்குப் போட்டியே பிடிக்கலே. நல்ல வேளை. உங்க பிரண்ட்ஸ் உங்களை மிரட்டிப் போட்டியிலே கலந்துக்க வெச்சாங்க. இல்லேன்னு இப்படிப்பட்ட ஒரு மேதை இந்தக் கல்லூரியிலே இருக்கிற விஷயமே தெரியாமப் போயிருக்கும்!

நாக: நீங்க என்ன சொல்றீங்க? என் கவிதைக்குக் கூட அர்த்தம் புரிஞ்சுடுத்து. உங்க பேச்சுக்கு அர்த்தமே புரியலே.

மாலதி (சிரித்து): தமாஷா பேசறீங்க.

நாக: நீங்க சொல்லித்தான் தெரியறது.

மாலதி: மிஸ்டர் நாகராஜன்! நான் ஒண்ணு கேட்பேன். தருவீங்களா? (தொடரும்)


மீன் விழியோ!
மான் விழியோ!
EYE-TEX
ஐடெக்ஸ்
கண்மை
விழியோ!



41. முதல் சந்திப்பு

அதிசூரனும் அசுரேந்திரனும் போர்க் களத்தில் இறந்ததையும் அசுர சேனைகள் சிதறி ஓடுவதையும் கண்ட சூரபன்மன் வடவாமுகாக்கினி போலக் கனன்று எழுந்தான். தானே போரில் குதிக்க வேண்டியதுதான் என முடிவு செய்தான். தனது தேரில் ஏறிப் போர்க் களம் வந்து தனுசை வளைத்து நாணை மீட்டிப் பெரும் ஒலி எழுப்பினான். அந்த ஒலியைக் கேட்ட பூத சேனைகள் அஞ்சி நடுங்கின. அச்சங் கொண்ட அவர்கள் தலைவிரிகோலமாக ஓடினர். சூரபன்மனின் நாணொலியின் ரீங்காரம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை விடாமல் ஒலித்தது. அந்த ஓசையைக் கேட்டு நாராயண மூர்த்தியே தமது தலையை அசைத்தார். பிரம்மன், இந்திரன், இயமன் ஆகியோர் தங்களுக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர்.

பூதசேனைத் தலைவர்கள் நூற்று எண்மரும் மனத்தைத் திடம் செய்து கொண்டு சூரபன்மன் மீது மலைகளையும் மரங்களையும் வீசியெறிந்தார்கள். சூரபன்மன் பத்து லட்சம் கோடி பாணங்களை விடுத்துத் தன் மீது சீறி வந்த மலைகளையும் மரங்களையும் துகள்களாக்கினான். பூதசேனைத் தலைவர்கள் நூற்றெண்மரும் வருந்திச் சோர்ந்து மயங்கினர். இலக்கம் வீரர்களையும் கண் பஞ்சடைந்து போகச் செய்தான் சூரன். வீரமார்த்தாண்டர், வீரராக்கதர், வீரமகேந்திரர், வீரதீரர், வீரமகேச்சுரர், வீரகேசரி, வீரபுரந்தரர், வீராந்தகர் ஆகியோரையும்



சூரபன்மன் தோல்வியடையச் செய்து எதிர்ப்பவர்கள் எவருமின்றிப் போர்க் களத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

வீரவாகுதேவர் தேரில் ஏறிச் சூரபன்மன் இருக்கும் இடத்துக்குச் சென்றார். ''முன்பு வந்து நம் நகரத்தை அழித்துச் சென்றவன் இவன் தான்'' என்பதைச் சூரன் அறிந்ததும் பெரும் கோபம் கொண்டு, வீரவாகுவை இழித்தும் பழித்தும் பேசினான். அதன் பின் இருவருக்குமிடையே அதிகோரமான போர் மூண்டது. வீரவாகு தேவர் சூரபன்மனின் நெற்றியைக் குறி வைத்து எய்த பாணங்கள் வைர மலையில் தாக்கிய பொன்னூசிகளைப் போல முனை மழுங்கித் துகளாகி வீழ்ந்தன. வீரவாகு தேவர் வாயுவாஸ்திரம், அக்கினி அஸ்திரம், சூரியாஸ்திரம் வருணாஸ்திரம், இந்திராஸ்திரம், நிருதி அஸ்திரம் முதலிய தெய்வாஸ்திரங்களை ஏவினார். அந்தத் தெய்வப் படைக் கலங்களும் சூரபன்மனின் உடலில் பட்டு வலிமை யிழந்து அழிந்தன.

சூரபன்மனின் அளப்பரும் ஆற்றலைக் கண்டு வியந்த வீரவாகுதேவர் பிரம்மாஸ்திரத்தையும் நாராயணாஸ்திரத்தையும் ஏவினார். அவையும் தமது ஆற்றல் ஒழிந்து அழிந்தன. சூரபன்மன் பெற்றுள்ள வரங்களின் சிறப்பையும் அவனது வல்லமையையும் எண்ணி வியந்து நின்றார் வீரவாகுதேவர்.

சூரபன்மன் வீரவாகுதேவரை நோக்கிக் கொக்கரித்தான்: '' அற்பனான தூதனே! மும்மூர்த்திகளுக்கும் முதல்வராகிய தேவ தேவன் சிவபெருமான் தந்தருளிய வரங்களின் மகிமையினால்,

எந்தத் தெய்வாஸ்திரத்தை என் மீது ஏவினாலும் என்னை வெல்ல முடியாது'' என்று ஆர்ப்பரித்தான்.

தேவாதிதேவனான சிவபெருமானின் பெயர் பூண்ட அஸ்திரமே எஞ்சியிருந்தது. வீரவாகு தேவர் பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து சூரபன்மன் மீது பிரயோகித்தார். அந்த அஸ்திரம் வடவாமுகாக்கினி போன்று இடி மின்னல்களுடனும் விஷத்துடனும் இருளைப் பரப்பி ஆரவாரத்துடன் சென்றது. அதிவேகமாக ஆரவாரம் செய்து வரும் பாசுபதாஸ்திரத்தைக் கண்டதும் சூரபன்மன் தன்னிடமிருந்த பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து ஏவினான். இரண்டு சிவாஸ்திரங்களும் பிரபஞ்சங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கும்படி போரிட்டுத் தம்மை விடுத்தவர்களிடமே திரும்பிச் சென்று விட்டன. பிறகு இருவரும் முத்தலைப் பாணம், வேல், தண்டாயுதம் இவற்றால் போர் செய்து கொண்டார்கள்.

சூரபன்மனின் தண்டாயுதம் வீரவாகுதேவரின் மார்பைத் தாக்கியது. அவரது உடலிலிருந்து உதிரம் ஊற்றெடுத்து ஆறு போல் ஓடியது. வீரவாகுதேவர் செயலற்றுத் தேரின் மீது வீழ்ந்தார். தேவர்கள் கதிகலங்கினர். அப்போது வீரவாகுதேவரின் தேர்ச் சாரதியாகிய விசாலி தேரை ஒரு பக்கமாகச் செலுத்தினான். சூரபன்மன் வீரவாகுதேவர் ஒருவாறாக ஒழிந்தான் என்று எண்ணிப் பூதசேனைகளின் மீது பாணங்களைச் சூறாவளி போல் விடுத்தான். பூதசேனையைச் சேர்ந்தவர்களில் எண்ணற்றவர் இறந்தனர். எஞ்சியவர்கள் பயந்து ஓடினர்.

பூதசேனைகளும், வீரவாகுதேவரும் போர்க் களத்தில் வலியிழந்து சின்னாபின்னப்பட்டிருப்பதை யறிந்த கந்தவேள், தமது சாரதியாகிய வாயுதேவனைப் பார்த்து. ''நமது தேரை வேகமாகச் செலுத்திச் சூரபன்மன் முன் கொண்டு போய் நிறுத்து'' என்று ஆணையிட்டார். அதன்படி நவரத்தின மயமான அந்தத் தேரை மனோவேகத்தில் ஓட்டிக் கொண்டு போய்ப் போர்க்களத்தில் இறுமாந்திருந்த சூரபன்மன் முன் கொண்டு போய் நிறுத்தினார் வாயுதேவன்.

சூரபன்மனுக்கும் எம்பெருமானுக்கும் இதுதான் முதல் சந்திப்பு. எப்பொழுதும் முதல் சந்திப்புக்குத்தான் பெருமை அதிகம். அருளுக்கும் இருளுக்கும், கருணைக்கும் கொடுமைக்கும், அறிவுக்கும் மருளுக்குமிடையே நேர்ந்த சந்திப்பு இது. முருகப் பெருமானைப் பார்த்தான் சூரபன்மன். பயங்கரமான அந்தப் போர்க்களத்திலே, பகைமை தலைவிரித்தாடும் யுத்த பூமியிலே கருணை வழியும் முகத்துடன் காட்சி தந்தார் கந்தப் பெருமான்.

முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரம்ஈ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ்
சரணமும் தெரியக் கண்டான்

தாமரை மலர்ந்தது போன்ற குளிர்ந்த ஆறுமுகங்களைக் கண்டான் சூரபன்மன். அந்த முகங்களிலே கருணை நிலவு வழிகிறது. பன்னிரு திருச்செவிகளைப் பார்த்தான். அவற்றில் பன்னிரண்டு குண்டலங்கள் மிளிர்ந்தன. ஆறு பொற்கிரீடங்கள்; அழகான திருமார்பு. தண்டையும் சிலம்பும் அணிந்திருந்த தாமரைப் பாதங்களையும் கண்டான். இதிலிருந்தே முருகன் குழந்தை என்று தெரிகிற தல்லவா? ஞானியருக்கும் தவசியருக்கும் எட்டாத முருகப் பெருமானை முடியிலிருந்து அடிவரை கண்டான் சூரபன்மன். அவனைப்பற்றி ஆச்சரியப்படுகிறார் கச்சியப்பர்.

பூவல கண்ட மெல்லாம்
புரந்திடுஞ் சூரன் தன்னைத்
தீவினை யாளன் என்றே
செப்புவர்; சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல்
முன்னர்வந் தெய்தப் பெற்றான்
ஆ! இவன் தவத்திற்கன்றி
அறத்திற்கும் முதல்வன் அன்றோ?

'எல்லோரும் சூரபன்மனைக் கொடியவன், தீவினையாளன் 'என்று சொன்னார்கள்: அப்படிச் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை. அவன் எத்துணைக் காலம் தவம் செய்திருந்தால் ஆண்டவன் அவனுக்குக் காட்சி தருவார்? அவன் தவம் மட்டும் அல்ல; அறமும் செய்திருக்கிறான். கண்ணுக்குத் தெரியாமல் முந்தைய ஜென்மத்தில் செய்திருக்கிறான். தேவர்களும் முனிவர்களும் இன்னமும் இத்தன்மையன் என்று கண்டு கொள்ள முடியாத பரம்பொருளை நன்றாகக் கண்டவன் அன்றோ சூரபன்மன்?'' என்று கச்சியப்பர் வியந்து சொல்கிறார்.

சுவாமியைக் கண்டும் பரகதி கோரும் பான்மையைப் பெறவில்லை சூரபன்மன். 'எடுத்து வைத்தும் கொடுத்துவைக்க வில்லை' என்று கூறுவது போல், சுவாமியைப் பார்த்த சூரபன்மன் அவரை வணங்கி அருள் பெறவில்லை. கேலியாகச் சிரித்தான்.

''குழந்தை முருகா! தேவர்கள் உன்னை ஏமாற்றி இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். உன் மேல் எனக்குக் கோபம் ஏற்படவில்லை; பச்சாத்தாபம் தான் வருகிறது. உனக்கு உதவியாக வந்த சேனைகளின் ஆற்றல் அழிந்தது. பூத சேனைகள் புறங்கொடுத்து ஓடி விட்டன. கடைசியில் சின்னஞ்சிறு குழந்தையான நீ என்னுடன் போர் செய்ய வந்திருக்கிறாய். உன் தந்தையாகிய சிவபெருமானும், திருமாலும், பிரம்மாவும் என்னுடன் போர் செய்ய வேண்டும் என்று எண்ணியதில்லை. அப்படியிருக்கச் சிறுவனான நீ வந்திருக்கிறாய். உன்னை மன்னித்து விடுகிறேன். நீ போய் விளையாடிக் கொண்டிரு'' என்று சூரபன்மன் கூறினான்.

சூரபன்மன் கூறியதைக் கேட்டு எம்பெருமான் புன்னகை புரிந்தார்.

கொடிய நஞ்சை நோக்கிக் குளிர்ந்த தேவாமுதம் பேசியது: '' சூரபன்ம ! நீ சொன்னபடி நான் குழந்தைதான். ஆனால் என் கையில் உள்ள வேல் குழந்தையல்ல. நீ சிறந்த வீரன். வாயால் பேசாதே. கையால் பேசு'' என்றார் எம்பெருமான்.

என்றும் புதிய, நினைக்குந்தோறும் நவநவமான அநுபவத்தைத் தருகிற பிரணவ ரூபனான எம்பிரான் குழந்தைத் தானே ?

எம்பெருமான் கூறியதைக் கேட்ட சூரபன்மனுக்குக் கோபம் பொங்கியது; அவனது கண்கள் அக்கினி ஜ்வாலையைக் கக்கின. தனது பெரிய வில்லை வளைத்தான். கந்தவேள் ஒரு பெரும் வில்லை வளைத்து நாணொலி செய்தார். அண்டங்கள் யாவும் உடைவது போன்ற பெருமுழக்கம் ஏற்பட்டது.

இதிகாச புராணங்களில் கண்டுள்ள போர்களிலெல்லாம் முதலிடம் பெறும் மகத்தான போர் தொடங்கியது. சூரனுக்கும், சுவாமிக்கு மிடையே போர் தொடங்கியது. சூரபன்மன் கோடி பாணங்களைத் தொடுத்தான். அந்தப் பாணங்களினால் எம்பெருமானும், அவரது தேரும் மறைக்கப் பட்டன. முருகப் பெருமான் விடுத்த பாணங்கள் சூரபன்மனின் பாணங்களை அழித்தன. சூரபன்மன் நஞ்சுதோய்ந்த பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்களையும் அழித்தார் சுவாமி. சூரபன்மனின் தோள்களை நோக்கிப் பதினான்கு பாணங்கள் விடுத்தார். அந்தப் பாணங்கள் சூரபன்மனின் தோள்களைத் துளைக்கவில்லை; மாறாக ஒடிந்து விழ்ந்தன. அவனது வச்சிர உடலின் வலிமையைக் கண்ட எம் பெருமான், ஆயிரம் பாணங்களை விடுத்து வில்லை ஒடித்தார். சூரபன்மன் பிரம்மதேவர் அளித்திருந்த அயிற் படையை விடுத்தான். அதனை அழித் தார் சுவாமி.

பின்னர், சூரபன்மனின் தேரையும், அவனுக்கு உதவியாக வந்திருந்த பதினான்கு லட்சம் தேர்களையும் சிதைத்து அழித்தார். முருகப் பெருமானது வல்லமையைக் கண்ட சூரபன்மன் முத்தலைச் சூலம் ஒன்றை எடுத்து அவர் மீது வீசினான். அதனைப் பாணங்களினால் வீழ்த்திய எம்பெருமான், சூரபன்மனின் தேரின் குடையையும், அவனது மகுடத்தையும் வீழ்த்தினார். சூரனின் ஆபரணங்களையும் அவனது நெற்றியி லிருந்த வீரப் பட்டயத்தையும் அழித் தார். சூரபன்மனுக்கு ஏற்பட்ட பரிபவ நிலையைக் கண்ட அவனது வீரர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டு கொடிய போர் செய்தனர். முருகப் பெருமான் தம் திருக் கரத்திலிருந்த சக்ராயுதத்தை ஏவினார். அந்த சக்ராயுதம் அசுரர்களின் சிரங்களை அறுத்தும், கரங்களைத் துண்டித்தும் சூரபன்மனின் நூறாயிரம் வெள்ளம் சேனைகளையும் அழித்து விட்டது.

இப்படியாக எம்பெருமானுக்கும், சூரபன்மனுக்கும் நீண்ட நேரம் போர் நடந்தது. 'சுவாமி, நீண்ட நேரம் போர் செய்ய வேண்டுமா?' என்ற கேள்வி வரும். எம்பெருமான் விளையாடுகிறார் — பெற்றோர் குழந்தையுடன் விளையாடுவது போல்.

குழந்தையுடன் விளையாடுகிற பொழுது வருகிற ஆனந்தம் சுதானந்தம். கடவுளோடு விளையாடுகிறபோது வருகிற ஆனந்தம் சதானந்தம். சூரபன்மன் சுவாமிக்குக் குழந்தைதானே? அதனால் நீண்ட நேரம் விளையாடினார். அவனது போர் ஆற்றலை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்றே, தாம் விரைவில் வென்று விடாமல் அதிக நேரம் விளையாடினார்.

நூறாயிரம் வெள்ளம் சேனைகளும் அழிந்து விட்டதைக் கண்ட சூரபன்மன், இனி நின்றால் அபஜயம் என்று எண்ணினான். அவமானம் அடைந்து குன்றிப் போனான். போர்க்களத்தி லிருந்து விலகி, தொங்கிய தலையுடன் தோட்டத்து வழியாக வீரமகேந்திர புரம் சென்றான். (தொடரும்)

அத்தியாயம் முப்பத்துமூன்று

தெய்வத்தைக் காணோம்!

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

உருமாறிப் போன பழைய கவுண்டன் பாளையத்தில் விழல் வேய்ந்த ஓலை வீடுகள் ஒன்றைக்கூடக் காணோம். எல்லாம் ஓட்டு வீடுகளாக மாறி விட்டிருந்தன. புராதன மச்சு வீடுகள் சிலமட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்படியே இருப்பது தெரிந்தன. ஊருக்கு நடுவே உயரமான பெரிய தொட்டி கட்டி அதில் பம்ப் செட் மூலம் கிணற்றிலிருந்து நீர் நிரப்பி, அங்கிருந்து வீட்டுக்கு வீடு தண்ணீர்க் குழாய் போடப்பட்டிருந்தது. இது தவிர ஒவ்வொரு வீட்டுக்கும் மின்சார விளக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இதனலெல்லாம் அந்த ஊரின் தோற்றமே அடியோடு மாறிப் போயிருப்பதைக் கண்டு அதிசயித்துப் போனன் சபேசன். கோயிலும், அதைச் சார்ந்த கொடி மர மேடையும், அதற்கு இப்பால் பெரியதோர் ஆலமரமும், பழைய பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லாமலிருந்தால், அவ்வூரை அவனல் அடையாளம் கண்டுகொண்டிருக்கவே முடியாது. அவன் சிறுவனயிருந்தபோது மாசத்தில் ஓரிரு முறை தன் தாயுடன் அந்தக் கோயிலுக்கு வந்து போனதையும், அப்படி வரும்போதெல்லாம் கொடிமர மேடை மீது ஏறிக் குதித்து விளையாடியதையும் இப்போது நினைவுகூர்ந்து நெஞ்சம் குதூகலித்தான். அத்துடன் இந்த மாற்றங்கள் அனைத்தும் சுதந்திரத்துக்குப் பின் ஏற்பட்டவையே என்பதை எண்ணிப் பார்த்தபோது அவன் மனம் பெருமையால் பூரித்துப் புளகிதமடைந்தது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று பர்லாங் தூரம் சென்றால் அவனுடைய சொந்தக் கிராமம் வந்துவிடும். கோவில் முனையிலிருந்து மேற்காக வளைந்து மீண்டும் தெற்கு நோக்கிச் சென்ற அந்த வண்டிப் பாட்டையில் கால்களை வீசிப் போட்டு நடக்கலானன் சபேசன். சற்றுத் தூரம் சென்றதும் 'ராஜன் காலனி' என்று ஒன்று புதிதாக முளைத்திருந்தது தெரிந்தது. கீழண்டைப்புறம் சில தோட்டங்களை அழித்து மனைக்கட்டு நிலங்களாகப் பிரித்து விற்பனைக்கெனப் போட்டு வைத்திருப்பதும் புலனகியது. எங்கோ தொலை தூரத்தில் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் 'பம்ப் செட்' இயந்திரத்தின் ஒலி இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

காலை மணி ஒன்பதரை அல்லது பத்து இருக்கும். வெயிலின் உறைப்பே தெரியவில்லை. சில்லென்ற சீதக் காற்று வீசிக் கொண்டிருந்



தது. அவ்வப்போது மேகக் குடை விரிப்பின் நிழல் பூமியைத் தழுவிச் செல்வதும், அதைத் துரத்திப் பிடிக்க வருவது போல் வெயில் பளிச்சென்று காய்வதுமாக அங்கு ஒரு கண்ணாமூச்சி ஆட்டமே நிகழ்ந்து கொண்டிருந்தது. எதிரே வானக் கூரையை உரசுவது போல் கம்பீரமாக உயர்ந்து நீண்டு நின்றது குருடி மலை. அதன் தொடர்ச்சியாக இப்பால் மால்மருகனான மருதகுமரன் கோயில் கொண்டுள்ள மருத மலை. அவ்விரண்டு மலைகளும் கூப்பிடு தொலைவில் இருப்பதுபோல் தோன்றினாலும் இங்கிருந்து ஏழெட்டு மைல்களுக்கு அப்பால் அவை உள்ளன என்பது அவனுக்குத் தெரியும். அவற்றின் அடிவாரத்திலிருந்து பாதியளவு உயரத்துக்குப் பச்சைப் பசேலென்றும், அதற்குமேல் பகுதி ஆழ்ந்த நீல நிறமாகவும் அதற்கும் மேலே உச்சிப் பரப்பில் ஒருவித வெண்ணிறப் புகை மூட்டம் சூழ்ந்தும் காணப்பட்ட அவ்வினிய நெஞ்சையள்ளும் காட்சியைக் கண் குளிரப் பார்த்தவாறு நடந்து கொண்டிருந்த சபேசன், ''தம்பி யாரு? எந்த ஊருக்குப் போறது?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். எதிரே கிழவன் ஒருவன் மூட்டை முடிச்சுக்களோடு வந்து கொண்டிருந்தான்.

''நானு தாத்தா? இங்கே சங்கனூர்ப் பள்ளத்து மேலக் கிராமத்துக்குப் போறேன்!''

''பட்டணத்திலேயிருந்து வார்றீங்களாக்கும்......?''

''ஆமாங்க; நீங்க?''

''நமக்கு ஊர் பன்னிமடை. மகளைப் பார்க்க இருகூருக்குப் போறேன்.''

கிழவன் அவனைக் கடந்துபோய் விட்டான். தன்னுடைய கிராமத்து ஜனங்களில் யாராவது எதிர்ப்பட மாட்டார்களா? தன்னை அடையாளம் தெரிந்துகொண்டு ஏதாவது பேச மாட்டார்களா? என்று அவன் மனம் பரபரத்தது. காரணம், அவர்களிடம் தன் தாயின் சுக க்ஷேமங்களைப் பற்றி முதலிலேயே விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல்தான். ஆனால் அவனைத் தெரிந்தவர்களோ, அவனுக்குத் தெரிந்தவர்களோ, யாருமே எதிர்ப்படவில்லை.

அதனாலென்ன? இதோ அவனுடைய பிறந்த ஊர் வந்து விட்டது! முப்பது முப்பத்தைந்து வீடுகளை கொண்ட சின்னஞ்சிறு கிராமம். அந்த வீடுகளில் பாதி விழல் வேய்ந்த குடிசைகள். மற்றவை மச்சு வீடுகள். ஒன்றிரண்டு சீமை ஓட்டு வீடுகளும் தென்பட்டன. அதன் சூழ்நிலை அத்தனை வளமாகவோ, பசுமையாகவோ காணப்படவில்லை. கிராமத்துக்குப் பின்னால் ஒரே பொட்டல்வெளி; பக்கவாட்டில் இரண்டொரு கரும்புத் தோட்டங்கள்; எதிரே சோளம் அறுவடையான காய்ந்த நிலங்கள். ஆனாலும் சபேசனுக்கு அந்தக் கிராமம் ஒரு சொர்க்கபூமிபோல் காட்சியளித்தது.

அவன் கிராமத்து எல்லையைக் கடந்து உள்ளேயும் கால் வைத்துவிட்டான். உடலில் ஒரு புல்லரிப்பு. உள்ளத்தில் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு. விஷம் கொண்ட நல்ல பாம்புடன் போரிட்டு ஜெயிக்கும் கீரிப்பிள்ளை ஏதோ ஒரு மூலிகையைத் தேடி ஓடி அதன் மீது விழுந்து புரளுமாமே அதுபோல், பர்மாவின் தலைநகர் ரங்கூனிலும், தமிழகத்தின் தலைநகர் சென்னையிலும் படாத பாடுபட்டு வெளியேறி வந்திருந்த அவனுக்குத் தன் சொந்தக் கிராமத்து மண்ணை மிதித்ததும், அதிலே விழுந்து புரண்டு எழுந்திருக்க வேண்டும் போல் இருந்தது. அந்த விசித்திர மன அரிப்பை ஒருவாறு அடக்கிக் கொண்டு பூமியில் கால்களைப் புதையப் புதைய ஊன்றி நடந்த அவன் தன்னை மீறிய களைப்பினால் கால்கள் தளர்ந்து பின்னலிட ஓரிடத்தில் நின்றான். இன்னும் சில விநாடிகளில் தன் அருமை அன்னையைக் காணப் போகிறோம் என்ற அளவுக்கு மீறிய மகிழ்ச்சி உணர்ச்சியே அவனை அவ்வாறு தள்ளாட வைத்துவிட்டது.

அதோ, ஒரு கொடுக்காப்புளி மரம்; அதற்கு இப்பால் எலுமிச்ச மரம் ஒன்று. அவ்விரண்டுக்குமிடையே ஒரு சிறிய பழைய சுற்றுக்கட்டு மச்சு வீடு. வாசல் தாழ்வாரத்தின் இருபுறமும் உயரமான திண்ணைகள். எலுமிச்ச மரத்துக்குப் பக்கத்திலேயே சிறியதொரு கிணறு. அதன் கைப்பிடிச் சுவர் கொஞ்சம் உடைந்து விட்டிருக்கிறது. வீட்டைச் சுற்றி வேலியாகக் காட்டாமணக்குச் செடிகள் இருந்தனவே, அவை எங்கே? நாலுபுறமும் திறந்தவெளியாகக் கிடக்கிறது. ஆனால் அந்தச் சனி மூலையிலிருந்து நொச்சி மரப் போத்து மட்டும் அப்படியே — ஆனால் பெரிதாக — வளர்ந்திருக்கிறது!....

மெல்ல நடந்து வந்த சபேசன் அவ்வீட்டின் வாசற்படி மீது ஏறி நின்றான். 'அம்மா' என்று அழைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தோட அவனது வாயும் கால்களும் பரபரத்தன. வாசற்கதவு ஒருக்களித்துச் சாத்தியிருந்தது. அந்தக் கதவையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான்.

'அம்மா இப்போது என்ன செய்வாள்? புறக்கடையில் ஏதாவது வேலையாக இருப்பாளோ? அல்லது என் தந்தையாரையும் என்னையும் நினைத்துக் கொண்டு எங்காவது ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கிடப்பாளோ? ஆமாம்; கடந்த பதினைந்து வருடங்களாக இதைத் தவிர அவளுக்கு வேறு என்ன நிலை இருக்க முடியும்?'

சபேசனின் கண்கள் கலங்கின. அவற்றை அவசரமாகத் துடைத்து விட்டுக் கொண்டு முன்போல் முகத்தில் புன்னகையைப் பூசிக் கொண்டான். சட்டென்று அவன் சிந்தனை வேறொன்றுக்குத் தாவியது. 'அம்மா இப்போது வயதாகிவிட்டிருப்பாள். தலைநரைத்து, உடல் தளர்ந்து கிழக்கோலத்திலிருப்பாள். அந்நிலையில் அவளை என்னால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடியுமா? ஓ...... இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி! நல்ல கட்டுமஸ்தான தேகம்; எலுமிச்சம் பழ நிற மேனி; என்னைப் போல் கொஞ்சம் குள்ளம்; காதில் கனமான பாம்படம்; அள்ளிச் செருகிய கூந்தல்; பின் கொசுவம் வைத்துச் சேலை உடுத்துவது; ரவிக்கை போடும் பழக்கமில்லை—இதெல்லாம் கிடக்கட்டும். மாசற்ற அந்த வட்ட முகத்தின் வலது கன்னத்துக்கு மேலே மிளகு அளவுக்கு ஒரு மரு இருக்குமே, அது ஒன்றே அவளை எந்த நிலையிலும் என்னால் அடையாளம் கண்டு கொள்ளப் போதுமானது.

ஆனால் அவன்தான் என்னைத் தெரிந்து கொள்ளக் கொஞ்சம் சிரமப்படுவான் !...... இல்லை; அப்படி நினைப்பது தவறு. ஒரு தாய்க்குத் தன் பிள்ளையை — அவன் ஐம்பது ஆண்டுகள் பிரிந்து நூறு வயதுக் கிழவனானாலும்—அவனுடைய ஒரே ஒரு சுண்டு விரலின் நகக் கணுவைப் பார்த்துக்கூட உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியும்.'

கையிலிருந்த கான்வாஸ் பையைத் திண்ணை மேல் வைத்து விட்டுச் சட்டைக் காலரை இழுத்து விட்டுக் கொண்டு மெல்லத் தொண்டையைக் கனைத்தவாறு, "அம்மா!" என்றான். ஆகா! அந்தக் குரலில்தான் எத்தனை அன்பு! எவ்வளவு ஆவல்? எத்தகைய ஆவேசப் பரபரப்பு!

ஒருக்களித்திருந்த வாசற் கதவு மெல்லத் திறக்கப்பட்டது. பாய்ந்து செல்லத் தயாராகத் தன் வலது காலை முன்னே தூக்கி வைத்திருந்த சபேசன் சட்டென்று நிமிர்ந்தான். நடுத்தர வயதான பெண்மணி ஒருத்தி வெளியே வந்தாள். அவசரக் குறுகுறுப்புடன் அவனை ஏறிட்டு நோக்கிய அவனை அவளும் ஒருவிதக் குழப்பத்தோடு பார்த்து, "யாரு தம்பி, நீங்க?" என்று வினவினாள்.

"நீங்க?..... ஓ, என் கடைக்குட்டி அத்தை மீனாட்சியா?" என்றான் சபேசன் வெட்கப் புன்சிரிப்புடன்.

" ஆமாம்; நீங்க யாருன்னு தெரியல்லையே!" என்று மீண்டும் குழறினாள் அவள்.

சபேசனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன அத்தை, என்னைத் தெரியவில்லையா? உங்கள் அண்ணார் சாமிக்கண்ணுவின் பிள்ளை நடனசபேசன் நான்!" என்று கூறி மீண்டும் சிரித்த அவன் தணிந்த குரலில், "அம்மா என்ன செய்துக்கிட்டு இருக்காங்க?" என்று மனப் பூரிப்புடன் கேட்டான்.

மீனாட்சி என்ற அந்தப் பெண்மணியின் முகம் பேயறைபட்டது போல் வெளிறியது. கண்கள் கலங்கிப் பனித்தன. "வாங்க தம்பி, உள்ளே வாங்க!" என்று கம்மிய குரலில் கூறியவாறு கதவைப் பரக்கத் திறந்து விட்டாள்.

"அம்மா எங்கே அத்தை? அம்மா எங்கே?"

கதவுக்குப் பின்னால் ஒடுங்கி நின்ற மீனாட்சி கூடத்து அறையின் சிறிய மாடம் ஒன்றில் எரிந்து கொண்டிருந்த அகல்விளக்கைச் சுட்டிக்காட்டி, "அதோ அங்கே இருக்காங்க! அதை ஏத்தி இன்னையோட எட்டு நாட்களாச்சு!" என்று முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு பொருமினாள்.

ஃ ஃ ஃ

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணம்மா என்னும் ஒரு பெண்மணியின் உதரக் கருவறையில் உதிரப் பிண்டமாய்ப் பத்து மாதங்கள் வாசம் செய்து, உயிரும் உருவுமாக இவ்வுலகில் வெளிப்போந்து, கையசைத்துக் கால் உதைத்துக் கண்ணீரின்றி அழுதும், காரணமின்றிச் சிரித்தும் முகப் பரிச்சயம் பண்ணிக் கொண்டு, உருண்டு புரண்டு கவிழ்ந்து எழுந்து தவழ்ந்து நிமிர்ந்து,



"ஊரிலிருந்து, உன் அப்பா கடிதம் போட்டிருக்கிறார், படிக்கிறேன் கேள். மாப்பிள்ளைக்கு, அநேக ஆசி. எனக்குக் காலில் முள்குத்தி 'செப்டிக்'காகி விட்டது. உங்க மாமியாருக்கு, ஆஸ்த்துமா அதிகம். உங்க மைத்துனிக்கு, ஏழை விழுந்து உடலெல்லாம் காயம். ஆக, இங்கு எல்லோரும் சௌக்கியம்...."

முனை விரல் பற்றித் தளர்நடை பயின்று, முலைப் பால் நீக்க முரண்டு பிடித்து, பிறை நிலாக் கண்டு நெய்ச் சோறுண்டு, தள்ளு வண்டியால் தளர்நடை நீங்கிப் புழுதி அளைந்து குதித்து ஆடி, வீட்டைச் சுற்றி, வீதியைச் சுற்றி, காடு கரம்பு கழனி மேடெல்லாம் ஓடி வலம் வரக் கால் முளைத்துப் பின் 'வாலும்' முளைக்கவே, ஆசான் தேடி, 'அரி ஓம்' ஓத ஏடும் எழுதுகோலுமாகப் பள்ளிக்குச் சென்று, எழுத்தறிந்து, எண் அறிந்து, மெய்யறிந்து, பொய்யறிந்து, பொய்யுருவாம் புவனமறிந்து, அதை ஆட்டுவித்து அலைக்கழிக்கும் பணத்தின் பெருமையுமறிந்து, அது ஓட, அதனை ஓடிப் பிடிக்க ஊர் கடந்து, நாடு கடந்து, கடல் கடந்து, பயனின்றிக் கைசோர்ந்து, கால் சோர்ந்து, மெய் சோர்ந்து மனமும் சோர்ந்த நிலையில், தான் முளைத்தெழுந்த மூலக் கருவறைத் தெய்வத்தைத் தரிசித்தாவது புத்துயிரும், புதுப் பலமும் பெறலாம் என்ற பேராவலோடு புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து பார்க்கும் போது அங்கு அந்தக் கோவிலும் இல்லையாம்; அதில் குடிகொண்டிருந்த தெய்வத்தையும் காணோமாம் ! இதை எப்படி நம்புவது?

சபேசனால் நம்பவே முடியவில்லை. அவன் நம்பவில்லையானால் 'அது' இன்னமும் அவன் வரை உண்டு என்றுதானே ஆகும்? தன் உள்ளத்தால், உணர்ச்சிகளால், உயிர்மூச்சால் அவ்வுண்மையை ஒப்புக்கொள்ள மறுத்து, அவற்றாலேயே அதனை — அந்தக் காணாமற் போன கோவிலை — தனக்குத் தானே சிருஷ்டித்துத் தன் எண்ணத்தால், ஏக்கத்தால், தன்னையே மீண்டும் உதிரக் குழம்பாய் உருக்கிக் கொண்டு அக்கோயிலின் கருவறையில் குடியேறி, ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல, பத்து நாட்கள் — அவை

பத்து மாதகால உணர்வாக — வாசம் செய்து, மறுபடியும் நிணமும் தசையுமான ஒரு மனிதப் பிண்டமாய் உயிர்த்துச் சிலிர்த்து இவ்வுலகை நோக்கி வெளிப் போந்தவன் போல் இன்றுதான் அந்த வாசல் திண்ணையை விட்டுக் கீழே இறங்கிய அவன், சுற்றுமுற்றும் பார்த்து ஓர் அவலப் புன்னகை பூத்தவாறு, ''ஆமாம்; என் அன்னை இறந்து தான் விட்டாள்!'' என்று அவ்வுண்மையை முதன் முதலாக ஒப்புக் கொள்கிறவன் மாதிரி வாய் விட்டு முணுமுணுத்தான்.

''ஆனது ஆச்சு, போனது போச்சு; அதையே நினைச்சுக் கவலைப்பட்டுக் கிடந்து என்ன பிரயோசனம் தம்பி? வாங்க, வயித்துக்கு எதனாச்சும் சாப்பிடுங்க!''

அத்தை மீனாட்சியின் அன்புக் குரல் இது. கடந்த பத்து தினங்களாக ஒவ்வொரு வேளையும் அவனைச் சாப்பிடக் கூப்பிடும்போதெல்லாம் அவள் இதே சொற்களைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவனும் அந்தப் பேச்சை ஆமோதிப்பவன்போல் மெல்லத் தலையசைத்தபடி திண்ணையை விட்டு இறங்கிக் கிணற்றடிக்குப் போவான்; குளிப்பான்; ஆடைகளைத் துவைத்து உலர்த்தி அணிந்துகொண்டு அப்படியே புறக்கடை வாசல் வழியாகச் சமையலறைக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு அந்தப் பக்கமாகவே திரும்பி வந்து திண்ணையில் ஏறி உட்கார்ந்து கொள்வான். வீட்டினுள் காலெடுத்து வைப்பதேயில்லை. அடுத்த வேளையும் அதே அழைப்பு, அதே ஆறுதல் மொழி, அதே செயல்; அதற்கடுத்த வேளையும் அப்படியப்படியே ! இவ்வாறு கடந்த பத்து தினங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறான் சபேசன். ஆனால் அவ்வியக்கத்தைப் பற்றி அவன் ஏதும் அறியான்; எதுவும் உணரான். அப்படி ஒரு சமாதி நிலை! மோனத் தவ மயக்கம் !

அந்நிலையை விட்டு நழுவி வந்த இன்று தான் — இந்த விநாடிதான் — அத்தையின் சொற்கள் அவனது செவியிலே இறங்கி, நெஞ்சில் படர்ந்து அறிவைத் தொட்டன. 'உண்மைதான்' என்பதுபோல் அவளை நிமிர்ந்து நோக்கினான். இத்தனை நாட்களும் ஒரு சொட்டுக் கண்ணீரையும் காணாமல் வறண்டு வெறுத்திருந்த அவனது விழிகள் இப்போதுதான் முதன் முறையாகச் சிவந்து கலங்கி நீர் உகுத்தன. கதவைப் பிடித்து நின்றிருந்த மீனாட்சியம்மாளுக்கும் அழுகை வந்து விட்டது. அவள் முகத்தை முந்தானையால் மூடியவாறு உடல் குலுங்கினாள்.

சபேசன் மௌனமாய்க் கிணற்றடிக்குப் போய்த் தண்ணீர் சேந்திக் குளிக்கலானான். குளிர்ந்த நீரைத் தலையில் கொட்டக் கொட்ட நேற்றும் அதற்கு முந்தின நாட்களும் தன் தாயைப் பற்றி அத்தை சொன்ன சில விஷயங்கள் மெல்ல மெல்ல அவன் நினைவை வந்து நெருடின.

பர்மாவில் இருக்கும் அந்நியரெல்லாம் அவரவரது உடைமைகளை அங்கேயே விட்டு விட்டு உடனடியாக வெளியேறிவிட வேண்டுமென்ற அந்நாட்டு அரசாங்கத்தின் ஆணைப் படி, தாமும் தம் மைந்தனும் கப்பலேறிச் சென்னைக்கு வரப் போவதாகவும், அங்கிருந்து இரண்டு மூன்று தினங்களுக்குள் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்துவிடுவதாகவும் கணவர் எழுதியிருந்த கடிதத்தைக் கண்டு கொஞ்சமும் கவலைப்படாமல் மட்டற்ற மகிழ்ச்சியே அடைந்தாள் கண்ணம்மா. காரணம், ஐம்பத்தைந்து வயதைக் கடந்துவிட்ட நிலையில் அநாதரவாகத் தன்னந் தனியே கிராமத்தில் கிடந்து அல்லல்படுவதைச் சகிக்க முடியாமலிருந்த அவளுக்கு, ஆஸ்திபாஸ்தி ஏதுமில்லாது போனாலும் வெறுங்கையோடு தன் கணவரும் மகனும் வீடு வந்து சேர்ந்தாலே போதும் என்றாகிவிட்டது. எனவே, அவர்களை ஆவலுடன் எதிர்பார்க்கலானாள். ஆனால் அந்த ஆவலில் பாதியை அழித்துக் கொள்ளும்படியாக அடுத்து இன்னொரு கடிதம் வந்தது. அதில், தமக்கு முதல் கப்பலிலே இடம் கிடைக்காததால் மகனை மட்டும் ஏற்றி அனுப்பி யிருப்பதாகவும், அடுத்த கப்பலில் தாம் வருவதாகவும் எழுதியிருந்தார் அவளுடைய கணவர்.

இந்த விஷயம் அவளுக்கு அவ்வளவாக நம்பிக்கைப்பட வில்லை. ஏனென்றால், தன் கணவர் பர்மாவுக்குப் போனதிலிருந்து அங்கு ஒரு பர்மியப் பெண்ணுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று ஏற்கனவே பராபரியாகக் கேள்விப்பட்டு அவர் மீது ஒருவித அவநம்பிக்கையும், வெறுப்பும் கொண்டிருந்த அவள், இப்போது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மகனை மட்டும் கப்பலேற்றி விட்டு அவர் அந்தப் பர்மாக்காரியுடன் தங்கிக் கொள்ளத்தான் 'கப்பலில் இடம் கிடைக்கவில்லை' என்ற சாக்குச் சொல்லிக் கடிதம் எழுதியிருப்பதாக எண்ணி விட்டாள். ஆயினும் அதற்காக அவள் வருந்தவில்லை. 'தன் அருமைப் பிள்ளை வீடு வந்து சேர்ந்தாலே போதும்' என்று ஒவ்வொரு நாளும் கவுண்டன் பாளையத்துக்கு நடந்து போய் அங்கு செய்திப் பத்திரிகை வாங்கிப் படிப்பவரான ஒரு பள்ளியாசிரியரிடம் பர்மா அகதிகளை ஏற்றி வரும் கப்பல் சென்னை வந்து சேரும் நாளை ஆர்வத்தோடு விசாரித்து வரலானாள்.

அந்தக் கப்பல் சென்னைக்கு வந்த மூன்றாம் நாள் அந்தச் செய்தியை உபாத்தியாயர் பத்திரிகையில் படித்துச் சொன்னதைக் கேட்டதும் அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அன்று முதலே தன் பிள்ளைக்காகப் பலகாரப் பட்சணங்கள் செய்யவும், அரிசி பருப்பு வாங்கிச் சேமித்து வைக்கவும் ஆரம்பித்து விட்டாள். நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடிக் கொண்டிருந்தன. சபேசன் வரவில்லை.

கவுண்டன் பாளையத்து உபாத்தியாயர் தினமும் ஒரு செய்தியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். சென்னையில் சோழவரம் என்ற இடத்திலே பர்மா அகதிகள் தங்கியிருக்கின்றனர் என்று ஒரு செய்தி; பிறகு அவர்களை மண்டபம் காம்புக்கு அனுப்பியிருப்பதாக இன்னொரு செய்தி; அதன்பின் திருச்சி மாவட்டத்தில் எங்கோ ஓர் ஊரில் தங்கச் செய்திருப்பதாக மற்றொரு செய்தி. இதெல்லாம் போக்கிடமற்ற அகதிகளைப் பற்றிய விஷயம். வீடு வாசல் உற்றார் உறவினர் உள்ளவர்களின் நிலையென்ன? அவர்

களுக்கெல்லாம் இலவச ரயில் பிரயாண வசதி செய்து கொடுத்து அனுப்பி விட்டதாகக் கடையில் ஒரு செய்தியைப் படித்துச் சொன்னார் ஆசிரியர். அப்படியானால் சொந்த ஊர், சொந்தத் தாயார் இருந்தும் சபேசன் இன்னும் வந்து சேரவில்லையே?

கண்ணம்மாளினால் இருப்பே கொள்ள முடியவில்லை. அவள் தவியாய்த் தவித்தாள். கப்பல் ஏறி வந்த பிள்ளையை எங்கே போய்த் தேடிக் கண்டுபிடிப்பது? ரங்கூனிலிருந்தும் கடிதம் வரவில்லை. தினமும் கோவை ரயில் நிலையத்துக்குப் போவதும் வருவதுமாக அலைந்து கொண்டிருந்தாள் அவள். ஏமாற்றம் எல்லையைக் கடந்தது. கொஞ்ச நாட்களில் அவளது புத்தியும் பேதலித்தாற் போல் ஆகிவிட்டது. ஓயாத புலம்பல், தீராத பிலாக்கணம். உணவு தள்ளுபடியாகியது. உடல் நலம் குன்றியது. எலும்பும் தோலுமாக இளைத்து உரு மாறினாள். அந்நிலையிலும் அவள் தன் மகன் வருவான் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை. வழக்கம் போல் ஒரு நாள் கோவை ஸ்டேஷனுக்குப் போய்த் திரும்பி வரும்போது வழியிலேயே மயக்கமாகி விழுந்தாள். கிராமத்து ஆட்கள் பார்த்துவிட்டுத் தூக்கி வந்து வீட்டில் கிடத்தினார்கள். மறுநாள் காலை அந்தப் பேதைத் தாயின் உயிர் பிரிந்தது.

சீர உடம்போடு இணைற்றடியில் நடுங்கிக் கொண்டு நின்ற சபேசன், ''அம்மா!'' எனத் திடீரென்று அலறியதைக் கேட்டு, ''என்ன தம்பி?'' என்றவாறு அரக்கப் பறக்க ஓடி வந்தாள் மீனாட்சி. அவளைப் பேந்தப் பேந்தப் பார்த்து விழித்த அவன், ''ஒன்றுமில்லை, அத்தை!'' என்று முனகிக்கொண்டே புறக்கடையை நோக்கி நடந்தான்.

மீனாட்சியம்மாளுக்குப் பிள்ளை குட்டிகள் ஒன்றும் கிடையாது. சொந்த வீடு, சொந்த நிலம் என்றும் ஏதும் இல்லாதவள். அவளுடைய கணவனுக்குப் பயிர்த் தொழில் —கூலிக்குத்தான். காலமெல்லாம் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருப்பவள். சபேசனின் தாய் கண்ணம்மா அவளுக்குக் கொஞ்சம் உதவியாயிருந்தாள். கிராம முன்சீபின் தயவால் ஊருக்கு வெளியே புறம்போக்காகக் கிடந்த ஒரு துண்டு நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டு காலம் கடத்தி வந்த அவள், தன் அண்ணி கண்ணம்மா இறந்த மறு நாள் அந்தக் குடிசையைப் பிரித்துப் போட்டு விட்டு, இந்த வீட்டுக்குக் குடிவந்துவிட்டாள். 'இவ்வளவு பெரிய வீட்டைச் சும்மா பூட்டிப் போட்டுப் பாழடைய விடக்கூடாதே' என்று தான் வந்து குடியிருப்பதாக வெளியில் சொல்லிக் கொண்டாள். இந்நிலையில் சபேசனின் வருகை அவளுக்கு உள்ளூற ஒரு விதத் திகில் உண்டு பண்ணியது. எனினும் அநாதரவாகிவிட்ட அவன் தன்னை வீட்டை விட்டு வெளியேற்றிவிட மாட்டான் என்ற தைரியமும் இருந்தது. அத்துடன் பர்மாவிலிருந்து வந்திருக்கும் பிள்ளையாண்டானிடம் பணம் காசு இருக்கும் என்றும், அந்தப் பணத்தைக் கொண்டு அவனுக்குச் சமைத்துப் போடும் சாக்கில் தானும், தன் கணவனும் கொஞ்ச நாட்களை நிம்மதியாகக் கடத்தலாம் என்றும் கற்பனை பண்ணினாள். ஓர் ஏழையின் உள்ளம் இதைத் தவிர வேறு எப்படி எண்ணக் கூடும்? சபேசனோ தன் நிலை பற்றி அவளிடம் இது வரை ஒன்றுமே கூறாமலிருந்தான். இன்று தானே அவனுக்கு இவ்வுலகப் பிரக்ஞை திரும்பியிருக்கிறது?

உணவு பரிமாறிக்கொண்டே மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள் மீனாட்சி. முதலில் தன் அண்ணியாரின் உதாரண குணங்களையும் அன்பு உள்ளத்தையும் கண்ணீருக்கிடையே வெகுவாகப் புகழ்ந்து பேசிவிட்டுப் பிறகு அவள் எங்கெங்கே யாராரிடம் கொடுக்கல் வாங்கல் செய்திருக்கிறாள் என்ற விவரங்களைக் கூறலானாள். அதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் வரவேண்டிய பணம் ஒரு பத்துப் பதினைந்துக்குள்ளும், கொடுக்க வேண்டிய கடன் ஓர் இருபது முப்பதுக்குள்ளும்தான் இருக்கும். ஆயினும் இவற்றை அவள் பிரஸ்தாபித்ததன் நோக்கம், இந்தத் தகவல்களைக் கேட்டுச் சபேசனிடமிருந்து வரும் பதிலைக்கொண்டு அவனது கையிருப்பு நிலவரத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம் என்பதுதான்.

இந்தச் சூட்சமத்தை அறியாத சபேசன் ஆழ்ந்த கவலையோடும், மிகுந்த வேதனையோடும் தன் அவல நிலையை — கப்பலை விட்டு இறங்கிய நாளிலிருந்து அவ்வூருக்கு வந்து சேர்ந்த நாள்வரை — தனக்கு ஏற்பட்ட இன்னல், இடுக்கண்களையும், பணமில்லாது தான் அனுபவித்த துன்பம் துயரங்களையும் ஒளிவு மறைவின்றி உருக்கமாக விளக்கிக் கூறினான். மீனாட்சிக்கும் அவனுடைய சோகக் கதைகளைக் கேட்டு மனம் மிகவும் நொந்துதான் போயிற்று. ஆனால் அவன் மூலம் அவள் எதிர்பார்த்திருந்த அந்த 'நிம்மதி'யோ?...

(தொடரும்)



வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான செண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான செண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!







மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ்— மயக்கும் 17 செண்டுகளின் அற்புதமான கலவை

FT.G.7 TAM.


தர்மராஜனைச் சந்திக்க வந்த பெரியசாமியின் கழுத்தைப் பிடித்து அழுக்கித் திக்குமுக்காட வைக்கிறான் சந்துரு....
ஆ... ஆ... ஆ...!
அவள் எங்கே?
கதை: கௌசிகன்:
19
சித்திரம் ரமணி..
ஆளுக்குப் பேச்சு மூச்சில்லையே?
உயிர் – இருக்கிறதல்லவா?
ஆளுக்கு நினைவு வருவதற்குள் அவனை உள்ளே பிடித்து இழுத்துக்கொள்.
உன்னுடைய ஒத்துழைப்புக் கிடைக்காத வேளைகளில் நாங்களும் உங்கள் நிலைக்கு இறங்கி வரத்தான் வேண்டியிருக்கிறது பெரியசாமி.
ரேவதி, நீ முன் சீட்டில் போய் உட்கார்ந்துகொள். ஆனால் பின்னால் நடப்பதைத் திரும்பிப் பார்க்காதே. ஆண்களின் அர்த்தமும் முரட்டுத்தனமுமான சில செயல்களைப் பெண்களால் ரசிக்க முடியாது.


அகப்பட்டுக் கொண்ட ஆத்திரத்தில் பெரியசாமியின் சீற்றம் பன்மடங்காகிறது. ஆனால் சேகரின் இரும்புப் பிடியோ....?
இப்படி நள்ளிரவில் என்னை நீங்கள் இருவருமாகச் சித்திரவதை செய்வது நாகரிகமான செயலல்ல
பெரியசாமி இனித் திமிறிப் பயனில்லை. என் கேள்விக்கு நீ தரும் பதில் சரியில்லாவிடில் உன்னுடைய கொழுத்த மணிக்கட்டை முறிக்கும் நிலை ஏற்படும். சேகர் கொஞ்சம் அந்தச் சுவிட்சை அமுக்கிக் காட்டட்டுமா
ஆ....ஆ.... ஐயோ...!
குபேரா ஹோட்டலின் நிர்வாகம் இன்னொருவரின் கீழ் இருந்தாலும் அதன் உரிமையாளன் நீதான் என்பது எனக்கு ரகசியமல்ல. ஆதலால் அதை நீ மறுத்துப் பயனில்லை. மாலதி அந்த ஹோட்டலில் தங்கி இருந்த போது அவளுடன் நெருங்கிப் பழகிய அந்த நபர் யார்...பேச மாட்டாயா....?
ஹா... வேண்டாம்...வலி தாங்க முடியவில்லை. நான் உடல் நலமில்லாதவன். என் மீது கருணை காட்டுங்கள். நான் ஏதும் கூறினாலும் அது என்னைச் சிறைச்சாலை வாசியாக்கி விடும்...
இந்தக் கதைக்கெல்லாம் நான் ஏமாந்து விடுவேன் என்று எண்ணுகிறாயா பெரியசாமி? வீணாகக் கையை ஒடித்துக் கொள்ளாதே.
ஐயோ!.. ஐயோ!... என்னைக் கொன்றாலும் என் வாயிலிருந்து எதுவும் வராது.
உன்னை இப்படி அடிக்க வேண்டி இருப்பதற்கும் உன் கையை முறுக்கி ஒடிப்பதற்கும் வருந்துகிறேன் பெரியசாமி. நீ உண்மை பேசாத வரை நான் உன்னை விடுவிக்கப் போவதில்லை.
தொடரும்

கியூவரிசைக் கதைகள்



துமிலன்

கல்யாணக் கதை

பாலிகா ஜகதீசுவரி தர்மக் கல்யாண மண்டபத்தில் ஓர் ஏழைகூட மூன்றுநாளைக்கு மூவாயிரத்தொரு ரூபாய் மட்டுமே வாடகை கொடுத்துக் கல்யாணம் செய்யலாம். அப்பளம், ஆவக்காய், கொழுக்கட்டை பௌடர் முதலியன ஏற்றுமதி செய்யும் லட்சாதிபதியான லட்சுமணன் தம் பெண் ரூபாவதியின் கல்யாணத்தை அதில்தான் நடத்தினர்.

கல்யாண தினத்தன்று மாலை பாட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ஏராளமான கூட்டம். மண்டபத்தில் விருந்தினர் கூட்டம் வழிந்து கொண்டிருந்தபோது எதிரில் மோட்டார் வண்டிகள் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. மாப்பிள்ளைப் பையனின் தந்தை மகாதேவன் ஒரு பெரிய, மிக நவீன அச்சாலயத்தின் சொந்தக்காரர்; ஒரு பெரிய காகித வியாபாரிகூட. அவர் பதினாயிரத்தெட்டு அழைப்புக் கடிதங்கள் அச்சடித்து அனுப்பியிருந்தார். அதற்கு அவர் சிரமப்படவேயில்லை.

வசந்தன் அந்தக் கல்யாணத்துக்கு வருகை தந்திருந்தான். லட்சுமணன் அவனுக்கு எட்டிய உறவினர்.

மாதங்கியிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகி விட்டன. சாப்பிட்டுப் போவதற்காகக் காத்

திருந்த அவனது கண்கள் தற்செயலாகப் பெண்கள் உட்கார்ந்திருந்த வரிசைப் பக்கம் சென்றன. மறுகணம் அவை கூர்ந்து நோக்கின. அங்கே மாதங்கிகூட உட்கார்ந்திருந்தாள். ஆனால் அது அவளேதானா, அவள் சாயலுள்ள வேறொரு பெண்ணா என்று அவனால் நிச்சயிக்க முடியவில்லை.

அதைப் பற்றி அவன் மனத்தால் ஒரு முடிவுக்கு வருவதற்குள், அவன் கால்கள் அவனைப் பெண்கள் வரிசைப் பக்கம் இழுத்துச் சென்றன. அவன் நின்று கவனித்த இடத்திலிருந்து இருபத்தைந்து நாற்காலிகளுக்கப்பால் அவள் உட்கார்ந்திருந்தாள். அவனை நோக்கித் தலையை ஆட்டினான். பிறகு கையைக் காண்பித்துக் கூப்பிட்டான். மறுகணம், பெண்கள் மூன்று பேர், சிறுமிகள் இரண்டு பேர், நடுத்தர வயதுள்ள ஸ்திரீகள் நாலு பேர், பாட்டிமார்கள் பத்துப் பேர் தங்கள் தங்கள் நாற்காலிகளிலிருந்து எழுந்தனர். ஒவ்வொருவரும் அவன் தன்னைத்தான் சாப்பிடக் கூப்பிடுகிறான் என்று நினைத்துக் கொண்டுவிட்டனர்.

வசந்தன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான். கல்யாணச் சீராக வைத்த முறுக்குகளில் ஒன்றில் ஒரு சுற்றுக் குறைந்திருந்ததற்காகக் கோபித்துக் கொண்டு செல்லும் சம்பந்தியைப் போல் அவன் அவ்வளவு வேகமாகச் சென்றான்.

அவன் மண்டபத்துக்கு வெளிப் பக்கம் வந்து கொண்டிருந்த போது, ''தேங்காய் வாங்கிக் கொண்டு போகவில்லையா?'' என்று சொல்வது கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மாதங்கி நின்று கொண்டிருந்தாள்.

''நான் உங்கள் பின்னாலேயே ஓடி வந்து கொண்டிருக்கிறேன்'' என்று அவள் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கச் சொன்னாள்.

''நீங்கள் வருவதைப் பார்த்து விட்டுத்தான் நானும் வந்தேன்'' என்று வசந்தன் ஜம்பமாய்ச் சொன்னான்.

''அதோ, அந்தக் கோடியில் புல்தரையில் போய் உட்கார்ந்து கொள்ளலாம்'' என்று மாதங்கி கூறவே, இருவரும் அந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.


''நடுவில் உங்களை என்னமோ, ஏதோ சந்திக்க முடியவில்லை. பிள்ளை வீட்டுக்காரர்கள் எனக்கு உறவு'' என்றாள் மாதங்கி.

''தங்களை இத்தனை நாட்கள் பார்க்காமல், இல்லை, இல்லை, அந்தக் குடும்ப நட்சத்திரக் கதை பாக்கியையும் கேட்காமல் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. தயவுசெய்து கதையைச் சொல்கிறீர்களா?'' என்று வசந்தன் கேட்டான்.

''நான் எழுதிய கடிதத்தைக் கூடத் தாங்கள் சரியாகப் படிக்கவில்லை என்று தெரிகிறது. அந்தக் கதையைத் தாங்கள் தான் பூர்த்தி செய்ய வேண்டுமென்று எழுதியிருந்தேன்'' என்றாள் மாதங்கி.

''ஆமாம்! எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில், இல்லை, இல்லை. பசியில் எல்லாம் மறந்து போய் விட்டது. தங்கள் உத்தரவுப்படி நானே அந்தக் கதையை முடிக்கப் பார்க்கிறேன்'' என்று வசந்தன் கூறினான்.

''யாராவது பார்க்கப் போகிறார்கள். இன்னும் பத்து விரற்கடை தள்ளி நகர்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்!'' என்று விஷமப் புன்னகையுடன் மாதங்கி சொன்னாள்.





"இந்த இரைச்சலில் நான் சொல்வது நன்றாகக் காது கேட்காது!" என்று வசந்தன் கூறிக் கொண்டே அவளருகில் நகர்ந்து வந்து உட்கார்ந்தான். கதையை ஆரம்பித்தான் :

"**வீ**ரபாலா ஒரே ஒரு படத்தில் மட்டும் நடிக்க ஏற்பாடாயிற்று. அவள் அண்ணன் கோபி அவளுக்குப் பாதுகாப்பாக, படப் பிடிப்பின்போதெல்லாம் உடன் வந்து போய்க் கொண்டிருந்தான்.

அவள் நடித்த படத்தில் ஜோதிமணி தான் கதாநாயகன். வீரபாலா ஐந்தாவது கதாநாயகி. கதாநாயகன் ஒரே சமயத்தில் ஐந்து பேரைக் காதலிக்கிறான். அதற்குக் காதல் என்று பெயர். ஆனால், அந்த ஐந்து பெண்களும் தேச வழக்கப்படி அவனைத் தவிர வேறு யாரையும் கனவில்கூட எண்ணிப் பார்ப்பதில்லை. வீரபாலாவுக்கோ உண்மையிலேயே அவனிடம் சபலம் ஏற்பட்டிருந்தது.

திரைப்படக் காதல் சக்கரவர்த்தி என்று புகழ்பெற்ற ஜோதிமணி வழக்கம் போல் காதல் கட்டங்களில் அபாரமாய் நடித்து வந்தான். படத்தில் நடிக்கும் ஒரே குடும்ப நட்சத்திரமான வீரபாலாவுடன் சேர்ந்து நடிக்கும் கட்டங்களில் சிங்கார ரச உணர்ச்சி ததும்ப நடித்தான். ஒரு நாள் படப் பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது வசனபாகத்தில் எழுதப்பட்டிராத சில வாக்கியங்களைத் தானாகவே சமயோசிதமாக உபயோகித்துப் பேசினான். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அவனது சாமர்த்தியத்தை வியந்தார்கள். அவளுக்கு அப்போது அவன் மீது மோகம் தலைக்கேறியிருந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது.

கதைப்படி, வீரபாலா அவனிடம் பிணக்கு செய்கிறாள். அவன் அவளை எட்டிப் பிடிக்க முயலும்போது அவள் ஓடி விடுகிறாள். இந்தக் கட்டத்தில் வீரபாலா மிக நன்றாக நடித்தாள். அவள் அவனிடமிருந்து தப்பி ஓட முயல்கிறாள். ஆனால் அவன் பாய்ந்து அவளை இறுகப் பிடித்து அணைத்துக் கொள்கிறான். வீரபாலா அவனிடமிருந்து திமிறிக்கொண்டு அவன் கன்னங்களில் பளீர் பளீரென்று அறைகிறாள்.........

இந்த அறைகளை எதிர்பார்த்திராத ஜோதிமணி சமாளித்துக் கொண்டு, "உன் மலர்க் கரங்களால் நீ என்னை அடிப்பதற்கு நான் சென்ற ஜன்மத்தில் எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும். உன் பஞ்சனைய கரங்கள் நோகப் போகின்றனவே. அவற்றைப் பிடித்து விடட்டுமா?" என்று கூறினான்.

வசந்தன் இப்படிச் சொல்லி வரும்போது கல்யாணப் பந்தலில் பாட்டுக் கச்சேரி முடிந்து விட்டது. மைக்கில் ஒருவர் பேசினார். "அன்பார்ந்த நண்பர்களே! அடுத்த பந்தி சாப்பாட்டுக்கு, முந்நூறு ஆண்களும், நூற்றைம்பது ஸ்திரீகளும் நாற்காலி வரிசைப்படி எழுந்திருந்து வரும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று அறிவித்தார்.

"இது வரிசை முறை எப்படி அபிவிருத்தி அடைந்து வருகிறது, பார்த்தீர்களா?" என்றான் வசந்தன்.



"பின்னே சாப்பிடுவதற்கு மூவாயிரம் நாலாயிரம் பேர்கள் வந்திருந்தால் என்ன செய்வது?" என்றாள் மாதங்கி.

"அதோ ஒருவர் கையில் செல்வழி அப்பளத்தை வைத்துக் கொண்டு நிற்கிறார் பாருங்கள்" என்று வசந்தன் கூறிச் சற்றுத் தூரத்திலிருந்த ஒருவரைக் காண்பித்தான்.

"அவர் நான்கு பந்தியில் இடம் இல்லாமல் ஏமாற்றமடைந்திருப்பார். பாவம், நல்ல பசி போலிருக்கிறது. அவர் கையிலிருப்பது செல்வழி அப்பளம் அல்ல. அது போலவே இருக்கும் கல்யாண அழைப்புக் கடிதம்" என்றாள் மாதங்கி. பிறகு, "வீரபாலா அத்துடன் நடிப்பதை நிறுத்திக் கொண்டு விட்டாளாக்கும்" என்று தொடர்ந்து கேட்டாள்.

"இல்லை. பட ஒப்பந்தத்தில் டைரக்டர் சொல்கிறபடி நடிக்க வேண்டுமென்றிருக்கிறது. எந்த ஆணும் பெண்ணை அணைத்துக் கொள்ளக் கூடாது, ஆபாசமாக நடிக்கக் கூடாது என்ற ஒரு ஷரத்து இல்லை. தவிர அவளது அண்ணன் கோபியும், ஜோதிமணியும் நண்பர்களாகி விட்டிருந்தார்கள். ஜோதிமணி, தான் நடிப்புக் கலையில் ஆழ்ந்து போய்த் தன்னை மறந்து விட்டிருந்ததாகவும் இனி வீரபாலாவுடன் நடிக்கும் போது கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதாகவும் சத்தியம் செய்து கொடுத்தான். தான்

நடந்து கொண்ட விதத்துக்கு வீரபாலாவி விடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவன் சகோதரி சிறியநாயகி இந்தக் காரியத் துக்காக அவனே மிகவும் கண்டித்தாள். ஆனல் அவன் அவளேக் கட்டிப் பிடித்திழுத்த காட்சி படப் பிடிப்பு மிக நன்ருக இருந்ததால் அதை அப்படியே கதையில் வைத்துக் கொள் ளத் தீர்மானித்தார்கள். அதற்காக வீரபாலா வுக்குப் பேசியதைவிட அதிகப் பணம் கொடுக்க ஜோதிமணி சம்மதித்தார்.

படக்கதைப்படி அவர் மூன்றும் நம்பர் காதலியையே மணக்கவிருந்தார். ஆனல், கோபியின் வற்புறுத்தலின் மீதும், அவன் சகோதரி சிறியநாயகியின் வற்புறுத்தலின் மீதும், ஐந்தாம் நம்பர் காதலியான வீரபாலாவைக் கல்யாணஞ் செய்துகொள்ளச் சம்மதித்தார். இவ்விதமாக அந்தப் பெண் ணின் கற்பு மேலெழுந்தவாரியாகப் பாதிக்கப் பட்டதற்குப் பரிகாரமளிக்கப்பட்டு விட்டது.

ஜோதிமணிக்கும், வீரபாலாவுக்கும் கல் யாணம் நடக்கும் காட்சியைத் தத்ரூபமாகப் படம் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாஸ்திரோக்தமாக நடக்கும் கல்யாணங் களில் பிளாஸ்டிக் அம்மி, பிளாஸ்டிக் நுகத்தடி முதலியன உபயோகிக்கிருர்கள். அது மாதிரி இல்லாமல் அசல் கருங்கல் அம்மி, மர நுகத்தடி முதலியன வைக்கப்பட் டிருந்தன.

படம் பிடிக்கும் தினத்தில் ஸ்டுடியோ வில் ஒரே கூட்டம். வீரபாலாவின் கல்லூரி சிநேகிதிகளும், இஷ்டமித்ரபந்து ஜனங் களும் வந்து கூடியிருந்தார்கள். ஆனல் அன்று நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடிக வைதிகர்கள் யாரும் வரவில்லே. ஒரு போட்டிப் பட முதலாளி அவர்களேப் படப் பிடிப்புக்கு வராமல் செய்து விட்டார் என்று சந்தேகப்பட்டார்கள்.''

''என்ன கதை சொல்லுகிறீர்கள் நீங்கள்? போட்டிப்பட முதலாளியாவது, நடிக வைதி கர்களே வராமல் செய்வதாவது?'' என்று குறுக்கே புகுந்து கிண்டல் செய்யலானுள் மாதங்கி.

''இப்படி நீங்கள் கதை நடுவில் குறுக்கிட் டிருக்கக் கூடாது. மன்னித்தேன். அதோடு இந்தக் காலத்தில் படம் எடுப்பவர்களிடையே ஒரு போட்டா போட்டி நிலவி வருகிறது என்பது உங்களுக்குத் தெரியவில்லே போலும். உங்கள் அறியாமைக்கு வருந்துகிறேன். 'காதல்' படத்தில் ஐந்து கதாநாயகிகள் என்று கேள்விப்பட்டதும், 'மோதல்' படத் தில் ஏழு கதாநாயகிகளேப் போட்டிருந் தார் அந்தப் போட்டிப்பட முதலாளி. இங்கே கல்யாணக் காட்சியைத் தத்ரூபமாகப் படம் பிடிக்கப் போகிருர்கள். இன்னின்ன நடிகர் களேப் 'புக்' செய்திருக்கிருர்கள். இந்த மாதிரிக் காட்சிகளில் இவர்களுக்குள்ள பழக்கம் வேறு யாருக்கும் கிடையாது என்று கேள்விப்பட்டதும், போட்டிப் படாதிபதி அவர்களுக்கு அதிகப் பணம் தருவதாகக் கூறியதோடு மட்டும் நில்லாது, அவர்கள் படப் பிடிப்பு வைத்துக் கொண்டிருந்த அன் றைக்கே, தமது படத்துக்குக் கல்யாணக் காட்சியை முதல் காட்சியாகப் பிடிக்கத் திட்டமிட்டுக் 'கால்ஷீட்'டும் கொடுத்துவிட்



டார். அதனுல் அந்த வைதிக நடிகர்கள் வர வில்லே!'' என்ருன் வசந்தன்.

''மொட்டைத்தாதன் குட்டையில் விழுந் தான் என்பது போல ஏதோ காரணம் சொல்லுகிறீர்கள். சொல்லுங்கள். சொல்லி விட்டுப் போங்கள். நடிகர்கள் வரவில்லே என்பதற்காகக் கதையை மாற்றி விட்டார் களோ?'' என்று கேட்டாள் மாதங்கி.

''அவ்வளவு சீக்கிரத்தில் தோல்வியை ஒப்புக் கொள்வார்களா? நமது நடிகர்களே அவர்கள் கலேப்பதாவது என்று சீறிஞர்கள்!''

''அப்படியா? இருதரப்பினரும் மோதிக் கொண்டு நிஜச் சண்டையே போடத் தொடங்கி விட்டார்களோ? அந்தச் சண் டையை அப்படியே தத்ரூபமாகப் படம் பிடித்திருந்தால் நன்ருயிருந்திருக்கும்! அந்த மூளே எங்கே இருக்கப் போகிறது? ஆமாம், அப்படியானுல் அன்றையப் படப் பிடிப்பை நிறுத்தி விட்டார்களா?''

''சண்டையும் போடவில்லே; கிண்டையும் போடவில்லே. இப்படி ஒருவரைப் போல் ஒருவர் படம் எடுப்பது எதற்கு? பணம் சம்பாதிப்பதற்குத்தானே? அதனுல், படப் பிடிப்பை நிறுத்திக் கொண்டு பணத்தை இழப்பார்களா?''

''பின்னே என்ன செய்தார்கள்? உங்க ளுக்கு வரவரக் கதை சொல்லும் சக்தியே குறைந்து விட்டதோ என்று தோன்றுகிறது.

ஏதோ மனத்துக்குத் தோன்றியபடி சொல்லிக் கொண்டு போகிறீர்கள்!''

''உங்களுக்கும் கதை கேட்கப் பொறுமை இல்லை. அதனால் உங்கள் மனோதர்மத்துக்கு ஏற்றபடி ஏதேதோ பேசிக் கொண்டே போகிறீர்கள். கேட்க இஷ்டமிருந்தால் கதையைக் கேளுங்கள். இல்லாவிட்டால் ஆளை விடுங்கள்!'' என்ற வசந்தன் தொடர்ந்தான்:

''அதற்காக அவர்கள் படப் பிடிப்பை நிறுத்தி விடவில்லை. கோபி ஒரு வான் வண்டியில் ஏறிச் சென்று இரண்டு டஜன் வைதிகர்களைப் பிடித்துப் போட்டுக் கொண்டு வந்தான். குறித்த நேரத்தில் கல்யாணச் சடங்குகள் ஆரம்பமாயின. எதிர்பாராத விதத்தில் கல்யாணம் உண்மையிலேயே தத்ரூபமாய் நடப்பதில் ஜோதிமணிக்கு ஒரு பெருமை. பெண்ணின் தமையன் என்ற முறையில் கோபி வீரபாலாவைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தான். சிறியநாயகி நாத்தனார் முறையில் தாலிக் கயிற்றை முடிந்தாள். ஜோதிமணி தன் பக்கத்தில் அமர்ந்திருந்த வீரபாலாவைப் பார்த்தான். ''என் அருமைப் பிராணநாதா!'' என்று அவள் அழைத்த போது அவன் விழித்தான்.

அந்தக் காட்சிப் படப் பிடிப்பு முடிந்து விட்டது. உடனே கோவில் முன் வந்து, ''நண்பர்களே! இது வெறும் சினிமாக் கல்யாணமல்ல. உண்மைக் கல்யாணம். பரம்பரைப் புரோகிதர்கள் சாஸ்திரோக்தமாக நடத்தி வைத்த கல்யாணம். ஆகையால் இது 'ஹிந்து லா' படி செல்லும் கல்யாணம்'' என்றான். பிறகு சிறியநாயகி ''என் தம்பிக்குக் கல்யாணமானதில் எனக்குள்ள சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வீரபாலா உண்மையிலேயே அவன் மீது ஆசைப்பட்டிருந்ததால் நானும், கோபியுமாகச் சேர்ந்து நிஜக் கல்யாணமாகவே செய்து வைத்து விட்டோம்'' என்று தெரிவித்தாள். ஜோதிமணி, ''எனக்கு எல்லாம் தெரியும். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். படப் பிடிப்பு முழுதும் முடிந்த பிறகு, 'என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?' என்று அவளைக் கேட்கலாமென்றிருந்தேன்'' என்று ஜம்பமாகக் கூறினான்.

வசந்தன் கதையை முடித்துக் கொண்டிருந்த போது அங்கே ஓர் அம்மாள் வந்தாள்.

''வசந்தா, இங்கேயா இருக்கே? சாப்பிட்டாயா, இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லே, அம்மா! நடுவிலே இந்தப் பெண்......'' என்றான்.

''யார் குழந்தை நீ? மாதங்கியா?'' என்று அந்த அம்மாள் அன்புடன் கேட்டாள்.

மாதங்கி உடனே எழுந்திருந்தாள். அந்த அம்மாள் அவளை உட்கார வைத்துத் தானும் கீழே உட்கார்ந்து கொண்டாள்.


''உன்னைப் பற்றித் தினமும் சொல்வான். நீ இப்படித்தான் இருப்பாய் என்று கற்பனை செய்து கொண்டிருப்பேன், அவன் வர்ணித்ததைவிட நீ அழகாயிருக்கிறாயே. நல்ல குணமும் முகத்தில் சொட்டுகிறதே!''

வசந்தன் ஒரு கர்நாடகப் பெண்ணைப் போல் தலையைக் குனிந்து கொண்டான்.

''அவர், அடிக்கடி அம்மா, அம்மா என்று உங்களைப் பற்றிக் குறிப்பிடுவார். எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருக்கும். என் அப்பாவிடம் நானே உங்களை வந்து பார்க்கச் சொல்கிறேன்'' என்றாள். பிறகு, ''அப்பாவே இதோ வந்து விட்டார்!'' என்றாள்.

வசந்தன் மாதங்கி இருவருக்கும் கல்யாணம் நிச்சயமாயிற்று என்று நான் சொல்லத் தேவையில்லை. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்து வை என்பார்கள். ஆயிரம் கற்பனை செய்து கல்யாணம் செய்து வைப்பது என் போன்றவர்களின் தொழில்.

வைபகாரி உத்தண்டன்



ஒவ்வொரு சம்பள தினத்தன்றும் நிர்மலா அந்தக் குழந்தைகளுக்கு மிட்டாய்கள் வாங்கி வருவாள்.

அன்று வழக்கத்துக்கு அதிகமாகவே இரண்டு, மூன்று வகைகளில் மிட்டாய்கள் வாங்கி வந்திருந்தாள் அவள். காரணம் அவள் பணி புரிந்து வந்த கல்லூரியில், அவளுக்குப் பதவி உயர்வு கிடைத்திருந்தது. விரிவுரை யாளராக அதுவரை இருந்த நிர்மலா தானே முதல் பேராசிரியையாகப் பொறுப் பேற்றிருள்.

அந்தப் பெரிய வீட்டில் நான்கு ஒண்டிக் குடிகள் இருந்தன. அவற்றில் மூன்று பெரிய சம்சாரிகள்;



விசாலமான இரண்டு அறைகளில் குடியிருந்த நிர்மலா மற்றொரு ஒண்டுக்குடி. அதுமட்டுமல்ல; தனிமையில் தான் அவள் குடித்தனமும் நடந்து வந்தது.

''பதவியில் மட்டும்தானா? சம்பளத்திலும் உயர்வு உண்டா?'' — இப்படிக் கேட்டவள் பாரதி. வீட்டின் நடுப்பகுதியில் குடியிருக்கும் அந்தப் பெண்மணி அரசாங்க அலுவலகத்தில் கடந்த இருபத்தைந்து வருட காலமாகப் பணி புரிந்து, கொஞ்ச காலத்துக்கு முன்னால்தான் 'அப்பர் டிவிஷன்' எழுத்தராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் ஒரு சம்சாரியின் மனைவி. பதவி உயர்வோடு அன்புக் கணவருக்குக் கொஞ்சம் சம்பள உயர்வும் கிடைத்ததே? நிர்மலாவை அவள் கேட்க மாட்டாளா என்ன?

''உண்டு, மாமி! சுமார் நூற்றி ஐம்பது ரூபாய்கூடக் கிடைக்கும்...'' என்றாள் நிர்மலா.

''அம்மாடியோ!...'' — பாரதி.

''நிர்மலாவை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், மாமி? எத்தனை பட்டங்கள் வாங்கியிருக்கிறாள், தெரியுமா? வேதாந்தப் பாடத்தில் எவ்வளவு பெரிய படிப்பு! ...இந்தப் படிப்புக்கு எப்பொழுதோ பேராசிரியைப் பதவி கிடைத்திருக்க வேண்டும்!'' — இப்படிச் சொன்னது சரோஜா. நிர்மலாவை அடுத்துப் பின் பகுதியில் குடியிருப்பவள். நாலு குழந்தைகள். குறைந்த வருமானமானாலும் நிறைந்த மதி உள்ளவள்.

நிர்மலா சரோஜாவைப் பற்றி 'மகாலட்சுமி மாதிரியிருக்கிறாள்' என்று அடிக்கடி நினைத்துக் கொள்ளுவாள்.

ஆனால் இடைரென்று ஒரு வார்த்தை முன்றுவது நடமிடமிருந்து — தேவகியம்மாளிடமிருந்து—வந்தது. தேவகி அம்மாள், வக்கீலான தன் புருஷனுடனும் அடக்கின் உருவங்களான ஐந்து குழந்தைகளுடனும் நேர் எதிர்ப் 'போர்ஷ'னில் குடி யிருந்தாள். கோர்ட்டில் அந்த மகானுபாவர் என்ன பேசுவாரோ தெரியாது, ஆனால் தேவகியம்மாளுக்கு அவர் அடக்கம்தான்.

''நிர்மலா என்ன படித்து, எத்தனை சம்பாதித்து என்ன புண்ணியம்? தன்னந்தனியாக அவள் இருப்பது எனக்கு மனசுக்கு எத்தனை வருத்தம் தெரியுமா? யாருக்காக பாங்கியில் சேர்த்து வைக்க வேணும்?....'' — இப்படித்தான் பேசினாள் தேவகி அம்மாள்.

நிர்மலா சிரித்தாள். ''தேவகியம்மா! நான் ஏன் வேதாந்தப் பாடத்தில் பட்டங்கள் பெற்றிருக்கிறேன்? வாழ்க்கையை நான் வேதாந்தமாகவே எனக்கு ஆக்கிக்கொண்டிருக்கிறேன். என் கடமை இதுதான் என்று எனக்குத் தோன்றி, நான் என்னுடைய கல்விக் கடமையைச் செய்துகொண்டு, பகவான் கீதையில் சொல்லியபடி தாமரை இலைத் தண்ணீராக இருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!...''

இப்படிக் கூறிக்கொண்டே நிர்மலா சிரித்தபடியே தன் குடியிருப்புப் பகுதிக்குப் போய் விட்டாள்.

'விசித்திரமான பெண்...'

'தாய்க்குத் தவறாமல் கிராமத்துக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறாள்....இங்கே குடி வந்து மூன்று வருஷங்களாகின்றன. ஒரு முறையாவது அந்தத் தாயைப் பார்க்கப் போனதில்லையே...'

'படித்து விட்டால் கர்வம் வந்து விடுமா? புருஷர்களைக் கண்டால்





அகம்பாவம் வந்து விடுமா?...ஆனால் நிர்மலா நல்ல பெண். அடக்கமானவள். அவளுக்கும் ஆசைகள் என்று இருக்காதோ?...'

— இப்படியெல்லாம் பக்கத்துக் குடித்தனக்காரர்கள் மறைவாகவும் பகிரங்கமாகவும் பேசுவது நிர்மலாவுக்குப் புரியாத விஷயம் அல்ல. இவற்றை யெல்லாம் கேட்டு அவள் உணர்ச்சியின் உருவமாகி விடமாட்டாள்.

அவள் அறையில் மாட்டப்பட்டிருந்த பகவான் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர், அன்னை நிவேதிதா தேவி ஆகியோரின் படங்கள் அவளுக்கு ஆறுதல் அளிக்கும். அந்தி மயக்கம் பகலையோ இருட்டையோ பாதிப்பது கிடையாது; அதற்கு நிரந்தரத் தன்மையும் கிடையாது. அதைப் போலவே இந்த 'மயக்கப் பேச்சுக்கள்' அவளுடைய வேதாந்தப் பாடத்தில் ஊறிப்போன நெஞ்சுக்கு எந்த விதமான கலக்கமும் அளிப்பது கிடையாது.

ஆனால் இன்று அப்படியில்லை. எப்பொழுதும்போல் பஞ்சுபோல் எளி சாக இருக்கும் அவள் மனம் இன்று சற்றே கனத்திருந்தது. 'எல்லாவற்றையும் சமமாகப் பாவிக்கும் மனநிலை வந்துவிட்டால், எந்த விதமான மனக் கிலேசத்துக்கும் இடம் கிடையாது என்று நிர்மலா தன் தோழியை நிர்ண யித்த அந்தக் கல்வியின் மூலமும், தான் மற்றவருக்கு அதைப் போதித்த நிலையிலும் இதை உணர்ந்திருப்பினும், அன்று தேவகியம்மாள் கூறிய அந்த வார்த்தைகள் அவள் மனத்தைக் கவ்விப் பிடித்திருந்தன.

"...யாருக்காகப் பாங்கியில் சேர்த்து வைக்கணும்?..."

சுவாமி விளக்கைக்கூட ஏற்றாமல், நாற்காலியிலேயே உட்கார்ந்தவாறே சிந்தித்த வண்ணமிருந்த நிர்மலா, எழுந்தவளாய் மேஜை 'செண்டர் டிராயரை'த் திறந்து, பாங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.

ஐயாயிரம் ரூபாய்க்கும் மேலே சேர்த்து வைத்திருந்தாள்.. ஆமாம், யாருக்காகச் சேர்த்து வைத்திருந்தாள்? கிராமத்திலிருந்த வயதான தாயாருக்கு அனுப்பவா? அப்படி அனுப்பினாலும் அந்தக் கிராமமே அல்லவா அந்தப் பணத்தைச் சூறையாடி விடும்?... எப்பொழுதோ, தன்னுடைய ஐந்தாவது வயதிலேயே காணாமற் போனானே ஒரு தம்பி, தனக்கென்று பிறந்திருந்ததாகத் தான் எண்ணி வந்த அந்த ஒரே தம்பி — காணாமற் போனானே அவனுக்காகவா சேர்த்து வைக்கிறாள் நிர்மலா? பெருமூச்செறிந்துகொண்டே தனக்கென்று ஏதோ சமைத்துக்கொள்ளச் சமையலறைக்குள் சென்றாள் நிர்மலா.

கல்லூரி முடிந்து, பஸ் ஏறி, மவுண்ட் ரோட்டுக்கு வந்து இறங்கினாள் நிர்மலா. அவளுக்கு அன்று பசியாக இருந்தது. ஏதாவது சாப்பிடலாம் என்று ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தாள். பெண்களுக்கென்று தனிப் பகுதியில் சென்று அமர்ந்தாள்.

சர்வரிடம் ஒரு தோசையும், காப்பியும் கொண்டு வரச் சொல்லிவிட்டு, தன் கைகளிலிருந்த ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டியபடி இருந்தாள் நிர்மலா.

சர்வர் தோசையைக் கொண்டுவந்து வைத்தான். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே, நிர்மலா சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதெல்லாம் அந்தச் சர்வர் தன் எதிரிலேயே நின்று கொண்டிருப்பதைப் போலவே அவளுக்கு உணர்வு தட்டியது.

அவளுக்கு வெறுப்பாக வந்தது. அவன் கொண்டு வந்து வைத்த காப்பியை, அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல், 'மடமட'வென்று குடித்துவிட்டு, 'பில்லை' எடுத்துக்கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டாள்.

சமூகத்தில் பெண்மையின் பாதுகாப்பு என்பது, வேதாந்தப் போக்குப்படி மனத்தின் அடிப்படையில்தான் முதலில் விளைய வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. பச்சை நிஜார் போட்டிருந்த அந்தச் சர்வர் — அவன் முகத்தைக்கூட அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. அத்தனை இளைய வயதில் அவனுக்கு ஏற்பட்ட கடமையை அவன் செய்யாமல், என்ன பார்வை வேண்டிக் கிடக்கிறது...?

வீட்டை அடைந்து, தெருப் பக்கத்தை ஒட்டியிருந்த தன் பகுதியைத் திறந்து உள்ளே சென்றாள் நிர்மலா. இதற்குள் மாலையின் அந்தி வேளை பெருவாரியாக மறைந்து, இருட்டின் நடுவே இலேசாக அசட்டு ஒளி விட்டுக் கொண்டிருந்தது.

தெருவைப் பார்த்த ஜன்னலைத் திறந்தாள் நிர்மலா. வீட்டின் முன்னால் சின்னஞ்சிறு தோட்டம் உண்டு. அதற்கு அப்பால் காம்பவுண்டுச் சுவர்; அதற்கப்புறம், வீதியில் அந்த இருட்டும் ஒளியும் கலந்திருந்த சூழ்நிலையில் நின்று கொண்டிருந்தது.

பச்சை நிற அரை நிஜார் 'பளிச்'சென்று முதலில் கண்ணில் பட்டது; 'படீரென்று' ஜன்னல் கதவை மூடினாள் நிர்மலா.

பின்னாலேயே வந்து விட்டானோ?

பட்டப் பரீட்சைகளுக்குக் கூடப் பயப்படாத ஒரு படபடப்பும் பயமும் நிர்மலாவின் நெஞ்சில் நிறைந்தது. 'அச்சம் இல்லாத ஒரு மனத்தில் அழுக்காறோ, கவலையோ, கபடமோ நிறைய முடியாது' என்று அன்று தான் பாடம் நடத்தியிருக்கும் அவளுடைய மனத்தில் அச்சத்தின் ஒருவிதமான பொறி தட்டவும், மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் ஏற்பட்டன.

இரவு படுக்கையில் படுத்துக்கொண்டவளுக்குச் சரியான தூக்கம் இல்லை. ஏதேதோ எண்ணங்கள். கிராமத்துக்குச் சென்று, அம்மாளையும் அழைத்துக் கொண்டு வந்து தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவு. 'என் உயிர் இந்த மண்ணிலேயே பிரிய வேண்டும்' என்று பிடிவாதம் செய்யும் அம்மா கிராமத்தை விட்டு வருவாளா?

நிர்மலா எழுந்து விளக்கைப் போட்டாள். சுவர் நிலைக் கண்ணாடியில், இரவு வேளையில், மின் ஒளியில் கலந்த சோகத்துடன் தன் முகத்தைப் பார்த்த அவளுக்குப் பெருமையாகவே இருந்தது. அவள் அழகுதான்! முப்பது வயது எய்திய மாதிரியே தெரியவில்லையே!...

அடிக்கடி பகவத்கீதையில் படித்திருக்கிறாள்; அதை மற்றவருக்கு எடுத்து இயம்பியும் இருக்கிறாள். "புறம் செல்லும் மனத்தைத்திருப்பி உட்குவிந்து ஆன்மாவில் ஊன்றி இரு; தியானத்தால் ஆன்மா புலனாகும்."

இந்த எழுச்சி பொருந்திய எண்ணத்தினால் தான் தன் இளமை அழகு, மெருகு குறையாமல், பிரகாசம் அதிகமாகி ஒளிர்கிறதோ...

அவள் தன் மனத்துள் அமைத்துக் கொண்ட மனக் காவலில், அவள் அழகென்ற அக்கினியின் காட்சியில் சூழ்நிலை பிரமித்துப் பார்த்து ஒதுங்கிய நேரத்தில்—

இந்தப் 'பச்சை நிஜாரா' அவளுடைய மனத்தைச் சஞ்சலப்படுத்திவிட்டான். மனக் காவல் அழகெனும் கௌரவத்துக்கு இழுக்கு வராமற் காத்ததற்கு அர்த்தமே இல்லையோ?

தாயார் எத்தனையோ முறை திருமணம் செய்துகொள்ளச் சொல்லி அவளை வற்புறுத்தியிருக்கிறாள்; அவளுடன் பட்டப் படிப்புப் படித்த ஒவ்வொரு யுவதிக்கும் கூடத் திருமணமாகிக் கொண்டிருந்தது; கல்லூரி நாட்களில் மாணவர்களின் 'காதல் வேதாந்தமும் கூட' அவளை ஒன்றும் செய்ய முடியவில்லை.

'பெண்மையின் கௌரவம்!'

அது அன்று தனக்குக் கிடைக்கவில்லையோ என்று எண்ணியபோது...

வேதாந்தம் படித்துப் படித்து, பேசிப் பேசி, போதித்துப் போதித்துச் சமநிலை பெற்றிருந்த அந்த மனத்தின் விரிசலில் விம்மினாள் நிர்மலா.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பகல் நேரம். கல்லூரியிலிருந்து திரும்பி விட்டிருந்தாள் நிர்மலா.

இந்திய விடுதலை வீரர்களுக்கு எங்களது அஞ்சலி



இந்தியா தொழில்மயமாகத் துவங்கியிருக்கிறது. அது தொழில் நிறைந்த நாடாக முன்னேறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இதனால் கைத்தறிக்கு இந்தியாவில் முடிவு ஏற்பட்டு விடாது என்று நான் நம்புகிறேன். நம் நாட்டுக் கைத்தறித் துணிகளைவிட மிகுந்த அழகு பொருந்திய ஒன்றினை நான் அபூர்வமாகத்தான் பார்க்கிறேன். இவை மிக உயர்ந்த கைவண்ணமும், கலை வண்ணமும் கொண்டவையாகும். ஓர் அழகுப் பொருள் என்பதாலும், நம்முடைய பாரம்பரிய கைவண்ணத்தை நிலை நிறுத்துவதாக இருப்பதாலும், கைத்தறி ஜவுளிகளுக்கு ஊக்கமும், ஆதரவும், தருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென்று நான் நம்புகிறேன்.

-ஜவஹர்லால் நேரு

கடுமையாக உழைத்து உற்பத்தியை உயர்த்தும் அதே நேரத்தில் அழகும், பாரம்பரியான கை வண்ணத்திறனும் கெடாதபடி பார்த்துக் கொள்ளுவோம் என்று இந்தப் புனித நாளில் சபதமேற்போம்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
'பால சுந்தரம் கட்டிடம்'
34/1 ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.

கைத்தறித் துணிகளுக்குப் பிரத்தியேக ரிபேட் 31-10-1965 வரை நீடிக்கப்பட்டுள்ளது
மொத்த வியாபாரம்: ரிபேட் 3 பைசாவிலிருந்து 5 பைசாவாக உயர்த்தப் பட்டிருக்கிறது

பட்டு, செயற்கைப் பட்டு, மற்ற பருத்தி இல்லாத கலப்புக் கைத்தறித் துணிகளுக்கும் | ரிபேட் 5 பைசா

இந்த விசேஷ சலுகை எங்கள் எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும் பிரதம சங்கங்களிலும் கிடைக்கும்

பாகீரதி, சரோஜா, தேவகியம்மாள் மூதியவர்கள் நிர்மலாவின் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். நிர்மலா தன் புடவைகளைப் பெட்டியில் வைத்து அடுக்கிக் கொண்டிருந்ததைக் கண்டுதான் ஆச்சரியமடைந்தார்கள்.

''நாளையிலிருந்து ஒரு மாதம் கல்லூரி விடுமுறை அல்லவா?.... கிராமத்துக்குச் சென்று அம்மாவையும் பார்த்துவிட்டுக் கொஞ்ச நாட்கள் இருந்துவிட்டு வரலாம் என்றிருக்கிறேன்...'' என்றாள் நிர்மலா.

தேவகியம்மாள்தான் உடனே சொன்னாள்: ''நல்ல காரியமடி அம்மா! அதைச் செய் முதலில்! பெற்றவள் மனசு எத்தனை நாட்களாக உன்னைப் பார்க்க அங்கலாய்த்துக் கொண்டிருக்கும்? காசு பணத்துக்குப் பாசம் என்று தெரியுமா?''

''வரும்போது அம்மாவையும் அழைத்துக் கொண்டு வந்துவிடு, நிர்மலா!'' என்றாள் சரோஜா.

''அம்மா வந்தவுடன், இந்தத் 'தனிப் பிறவிக்கு' ஒரு துணையைத் தேடித் தரச் சொல்ல வேண்டும்; அதற்கு நாமெல்லாம் பலத்த முஸ்தீபு செய்ய வேண்டும்...''

நடுவே தேவகியம்மாள் மறுபடியும் கூறினாள்: ''....ஏண்டி, பாகீரதி! காலையில் நிர்மலா கல்லூரிக்குப் புறப்பட்டுப் போன பிறகு யாரோ அவளைத் தேடிக் கொண்டு...''

நிர்மலா தன் அலுவல்களைச் சற்றே நிறுத்தி விட்டு அவர்களைப் பார்த்தாள்.

சரோஜா தொடர்ந்து சொன்னாள்: ''ஆமாம், நிர்மலா! நீ காலேஜுக்குப் புறப்பட்டுப் போனவுடன், யாரோ பச்சை டிராயர் போட்டுக் கொண்டு ஓர் இளவட்டத்துப் பையன், சுமார் பதினெட்டு இருபது வயசு இருக்கும், உன்னைத் தேடிக் கொண்டு வந்தான்.... என்ன காரியம் என்று கேட்டேன். அவன் சொன்னால்தானே? நேரில் தானே சொல்லணும் என்றான்......''

''இதுவரையில் — இந்த இரண்டு வருஷ காலமாக—உன்னைத் தேடிக்கொண்டு யாருமே வந்ததில்லையே, நிர்மலா....''—இது பாகீரதி.

இந்தப் பேச்சு எதுவுமே நிர்மலாவுக்குப் பிடித்தால்தானே தனது படிப்பு, பட்டம், வகிக்கும் உத்தியோகம், கை நிறைந்து வாங்கும் சம்பளம் ஆகியவை அனைத்தும் இவர்களுக்கு ஒரு பொருட்டில்லாமல் ஏதோ ஒரு சின்ன விஷயத்துக்காகத் தன்னைக் கிண்டுவார்கள்போல் பேசுகிறார்களே.

மாலை வேளை நெருங்கி வந்தது. இரவு மெயிலில் நிர்மலா ஊருக்குப் புறப்படுகிறாள். ஒண்டுக் குடித்தனக்காரர்கள் மூன்றுபேரும் சேர்ந்து கொண்டு நிர்மலாவுக்கு ஒரு விருந்தளித்தார்கள்.

விருந்து முடிந்தது. வாண்டுப் பயல்கள் ஓடிச் சென்று டாக்ஸியை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

பெட்டி, படுக்கை டாக்ஸிக்குள் சென்றன. டாக்ஸிக்குள் ஏறப் போன நிர்மலாவின் கண்கள் அகஸ்மாத்தாகத் தெருக் கோடிக்குத் திரும்பின. பச்சை டிராயர்....

அவ்வளவுதான். அவசரம் அவசரமாக டாக்ஸிக்குள் ஏறினாள். டாக்ஸியும் உடனே புறப்பட்டது......

இப்படி முடியும்



போடி, வைத்தியம்! என்னமோ கொலைக் குற்றம் செஞ்சு விட்டது போல...... வாடி இப்படி........

உனக்கென்னடி..... நாளைக்கு ஊருக்குப் போய் விடுவாய். பெண்கள் எல்லாம் ஆண்கள் மாதிரி சீட்டாடினால் என் அப்பாவுக்குப் பிடிக்கவே பிடிக்காது. தெரியுமா? அதுவும் இந்த இரவு நேரத்தில்.....உன் கழுத்தறுப்புக்காகத்தான் வருகிறேன். தெரியுமா? சரி, சரி. இந்தா சீட்டுக்கட்டு. கலைத்துப் போடு.

விமலா ரமணி

ரயில் வெகு வேகமாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. ஆயினும் நிர்மலாவின் மனம் ஓடிய வேகத்தில் ரயிலின் வேகம் குறைவாகவே அவளுக்குத் தோன்றியது.

அவன் எதற்காக மறுபடியும் வந்தான்? தான் புறப்பட்டு வந்த பிறகு அவன் வீட்டுக்குப் போயிருப்பான்; பாகீரதி, சரோஜா, ஐயையோ, அந்தத் தேவகியம்மாளிடம் என்ன சொல்லியிருப்பான்?.... தன்னை இப்போது அச்சுறுத்தும் சக்திக்கு எப்படி இந்த கைய மகத்தான பலம் வந்தது? பார்க்கப் போனால் அவளுக்கு அவன் ஒரு தூசு! 'மளமள'வென்று போலீஸ் நிலையத்துக்கு நடந்தால் அவன் நிலைமை தூள் தூளாகி விடும்.....

ஆயினும் நிர்மலாவின் மனம் ஏன் இப்படிப் பதறுகிறது? ஓடுகிற ரயிலின் பாதை ஓரத்தில் ஏதோவொரு சின்னக் கிராமத்தில், கல்யாணப் பந்தலும், 'காஸ் விளக்குகளும்' அமளி துமளியுமாக இருப்பதைப் பார்க்கிறாள் அவள்..... அவள் நினைத்துக் கொண்டிருக்கும் 'மனக் காவலுக்கு' அதுதான் அர்த்தமோ?...

நிர்மலா கிராமத்துக்கு வந்து இரண்டு நாட்கள் சென்றன. தாயும் மகளும் பாசத்தின் உருவங்களாக மாறி, இரவு பகலாகப் பேசி, அளவளாவி மகிழ்ந்தார்கள். தன் வழக்கப்படி அந்தப் பாசம் நிறைந்த தாய், பெண்ணின் கல்யாண விஷயத்தைப் பற்றியும் கேட்காமலில்லை.

ஆனால் முன்பெல்லாம் அவள் அவ்விஷயத்தைப் பற்றிக் கேட்டதற்கும் இம்முறை கேட்டதற்கும் வித்தியாசம் இருந்தது.

''......உனக்குத் தகுந்தாற்போல் வயதிலும், படிப்பிலும் உத்தியோகத்திலும் தகுதியான வரம் கிடைக்க வேண்டும். பேப்பரில் விளம்பரப்படுத்தத்தான் வேண்டும், நிர்மலா.......''

நிர்மலா மௌனம் சாதித்தது அந்தத் தாய்க்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தப்

பேச்சை எடுத்தால் எப்பொழுதும் எரிந்து விழும் மகள். இப்போது வார்த்தையால் சம்மதம் தெரிவிக்காவிட்டாலும் எதிர்ப் பேச்சு எதுவும் பேசாமல் மௌனம் சாதிப்பது ஏன்?

இதுவே அந்தத் தாயின் நெஞ்சத்தில் சிறிது மகிழ்ச்சியை ஊட்டியது.

பிற்பகல் இரண்டு மணி இருக்கும். நல்ல வெய்யிலில் கிராமம் உறக்கத்தில் இருந்தது.

'போஸ்ட், போஸ்ட்.....' என்று தபால்காரர் இந்த மதிய அமைதியைக் கிழித்தவராய்க் குரல் கொடுத்துக் கொண்டு வந்தார்.

நிர்மலா வாசலுக்கு வந்தாள். இரண்டு கடிதங்கள் வந்தன. இரண்டும் கவர்கள் தாம். ஒன்றின் விலாசத்தில் தெரிந்த கையெழுத்து: அவளுடைய கல்லூரித் தோழியும் சக விரிவுரையாளருமான சாந்தா எழுதியிருந்தாள். மற்றதின் விலாசத்தில் தெரியாத கையெழுத்து: அதை அப்புறம் படித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் முதல் கவரைப் பிரித்தாள் நிர்மலா.

மிகச் சுருக்கமாகவே எழுதியிருந்தாள் சாந்தா. இதற்காக ஒரு கவரை வீணடித்திருக்க வேண்டாமே! ஆனால் அதிலிருந்த விஷயம்.....

"'அன்புள்ள நிர்மல்,

உனக்கு இக்கடிதம் ஆச்சரியத்தைத் தரும். என் திருமணம் நிச்சயமாகி விட்டது. அடுத்த மாதம் ஒரு நாளில் முகூர்த்த தேதி குறிக்கிறார்கள். நம் 'செட்'டில் இப்போது நீ ஒருத்திதான் பாக்கியிருக்கிறாய். இல்லையா?

நிர்மலா! இறைவன் நமக்கு மனத்தைக் கொடுத்தது அதை நாம் ஆட்டிப் படைப்பதற்கே என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது நம்மை ஆட்டிப் படைக்கும் பதில் விளையாட்டு தொடங்கும் போதுதான் நம்மை நாம் உண்மையில் உணர்கிறோம்.

இந்த உணர்வில் நீயும் வெகு விரைவிலேயே ஆழ்ந்துவிடுவாய் என்று விரும்பும்,

உன் அன்புத் தோழி,

சாந்தா."

நிர்மலா அதிசயித்தாள். 'கல்யாணமே வேண்டாம்' என்று கல்லூரி மேடையில் கர்ஜித்தவளா இன்று இப்படி எழுதுகிறாள்? மனத்தின் வேதாந்தத்தைப் பற்றித் தனக்கே எழுதுகிறாளே ?

அந்த மற்றொரு கவரைப் பிரித்தாள். என்ன ஆச்சரியம்! அது கொஞ்சம் விரிவான கடிதமாகவே யிருந்தது: கடிதத்தின் கடைசியில் கையெழுத்தைப் பார்த்தாள் நிர்மலா.

திகைத்தாள்........

யார் ?

அவள் அருமைத் தம்பி — பல வருடங்களுக்கு முன்பு எங்கோ காணாமற் போன கோபால் — எழுதியிருந்தான். உணர்ச்சியும் படபடப்பும் நிறைந்த மனசோடு கடிதத்தைப் படித்தாள் நிர்மலா.

"அன்புள்ள அக்காவுக்கு,

இரண்டு முறை உன் வீட்டுக்கு உன்னை வந்து பார்க்கத் தயங்கித் தயங்கி வந்தேன். என் மனச்சாட்சியின் உறுத்தலின் காரணமாகவோ என்னவோ, நான் வந்தபோதெல்லாம் நீயும் வீட்டில் இல்லை. நீ நல்ல நிலைமையில் இருப்பதைக் கேள்விப் பட்ட பிறகு, உனக்கு நான் தம்பி என்று சொல்லிக் கொண்டு உன் கௌரவத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை.

அன்று ஹோட்டலில் பார்த்தவுடனேயே உன்னை நான் அடையாளம் கண்டு கொண்டு விட்டேன். நான் கொண்டு வந்து கொடுத்த தோசையையும் காப்பியையும் சாப்பிட்ட நீ, என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை. உன்னை நான் அடையாளம் கண்டு கொண்டபோது, என்னை நீ கண்டு கொண்டிருந்திருக்க முடியாதா?

ஒரு முறை உன் வீதிக்கு வந்தபோது ஜன்னல் கதவை மூடி அடைத்தாய்.

நீ டாக்ஸியில் ஏறியதை, தெரு ஆரம்பத்தில் வந்து கொண்டிருந்த நான் நன்றாகப் பார்க்கவே செய்தேன். என் எதிரே ஓடி வந்து என்னைத் தாண்டிச் சென்ற டாக்ஸியில் சென்ற நீ, மறுபக்கம் திரும்பிக் கொண்டு போனாய்.

உண்மைதான், அக்கா! எனக்கு உலகம் அன்று புரிந்து விட்டது! உன் புகழும் பொருளும் என் எளிமையின் முன்பு என்னாகும்? உன் வரை நீ சரிதான் என்று நான் எண்ணிக் கொண்டு விட்டேன்.....

நீ குடியிருக்கும் வீட்டுக்காரர்களிடம் நான் யாரென்று இன்னமும் கூறவில்லை; அன்று உன்னை நான் டாக்ஸியில் பார்த்த பிறகு அப்படியே திரும்பி விட்டேன்.

எங்கள் ஹோட்டல் முதலாளி, வடக்கே ஹைதராபாத்தில் தமது புதிய கிளை ஒன்றை ஆரம்பிக்கிறார். அங்கே செல்லும் 'சர்வர்களுக்கு' அதிகச் சம்பளம் தருவதாக வாக்களித்ததால் நான் இன்று அங்கு புறப்படுகிறேன். பார்க்கப் போனால் மனிதன் அதிகமாக ஊதியம் பெறத்தானே உயிர் வாழ்கிறான்?

அம்மாவுக்கும் உனக்கும் எனது வணக்கங்கள். உன் அன்புத் தம்பி,


கோபால்."

கடிதம் கைகளிலிருந்து நழுவ, நிர்மலா அப்படியே வாசல் திண்ணையில் உட்கார்ந்து விட்டாள். பச்சை நிஜார் அவள் மனத்தை உறுத்தியது. பொல்லாத மனக் காவல் என்று தான் எதையோ பாராட்டிக் கொண்டு வந்ததால்தான் அந்தப் 'பச்சை நிஜாரை' அவள் நிமிர்ந்தே பார்க்கவில்லையோ ?

'மனத்தை நாம் ஆட்டிப் படைத்தது போக, அது நம்மை ஆட்டிப் படைக்கத் தொடங்கும் போதுதான் நம்மை நாம் உணர்கிறோம்......'

'பார்க்கப் போனால் மனிதன் அதிகமாக ஊதியம் பெறத்தானே உயிர் வாழ்கிறான்..?'

நிர்மலா வீட்டுக்குள் ஓடிச் சென்று ஊஞ்சல் மேல் விழுந்து விம்மினாள். முதலில் அசாத்தியமான வேகத்தோடு ஆடிய அந்த ஊஞ்சல், மெதுவாய் வேகம் குறையக் குறையச் சம நிலைக்கு வந்து நின்றது.



உப்பு முதல் கற்பூரம் வரையில் எல்லா விஷயத்தைப் பற்றியும் கட்டுரைகள் வெளிவந்துவிட்டன. எந்த விஷயம் பற்றிக் கட்டுரை எழுதலாம் என்று ஒருமணி நேரமாகத் தலையைப் பத்து விரல்களாலும் அழுந்தச் சொறிந்து கொண்டும் பயன் இல்லை.

அதே சமயம், 'எலே, எருமை மாடு' என்று பக்கத்து வீட்டுத் தாத்தா பேரனைச் செல்லமாக அழைத்தது காதில் விழுந்தது.

அவ்வளவுதான். நான் ஞானோதயம் பெற்றேன். பலன். — எருமை மாட்டின்மேல் ஏறிக் கொண்டு வரப்போகிறேன். பயப்படாதீர்கள். கற்பனை எருமைதான்.

'எமன் ஏறும் வாகனம்' என்று புராண காலத்திலிருந்து அறியப்படும் எருமை இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட இருப்பதிலிருந்து இந்த எருமை என்ற மிருகம் ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவனை நினைவூட்டும் வகையில் ஆதிகாலம் தொட்டு இருந்து வருகிறது. அந்தத்தில்கூட இருக்கும். அதாகப்பட்டது அழிவற்றது.

எருமை மிகவும் பொறுமைசாலி. கழுதையை விடவா என்ற ஆராய்ச்சியை இது வரை யாரும் தொடங்கி முடிவு காணவில்லை. குட்டை நீரில் எருமை அனந்தசயனம் செய்யும் போது உலகில் மனிதன் அடையக்கூடிய சாயுஜ்ய பதவிகூட இதற்கு ஈடாகுமா என்று எருமைகள் நினைக்கும்.

கன்றுக்குட்டி இல்லாமல்கூட எருமை மாடு பால் கறக்கும் என்று ஓர் எருமை நிபுணர் எழுதியது நினைவுக்கு வருகிறது.

எருமைப் பால் காப்பிதான் திக்காக இருக்கும். எருமைத் தயிர் புத்தியை மந்தப்படுத்தும். -- இது பாட்டியம்மாக்களின் பொன்மொழிகள்--அநுபவ பூர்வமான பொன்மொழிகள்.

'போனால் போகட்டும் போடா' என்ற அலட்சியத் திமிர் எருமையின் ரத்தத்தில் ஊறி யிருப்பதால் தான் அவைகள் நடு ரஸ்தாக்களில் கால்களை ஊன்றி நீண்ட நேரம் நின்று விடுவதும் பிறகு மலை அசைவது போல் அசைவதும் தினமும் நாம் காணும் நிகழ்ச்சி.

எருமைக்கடா என்று ஒருவர் திட்டினால் அதன் பொருள் பின்வருமாறு இருக்கும்.

கரும்பாறைக் குண்டாக இருப்பவன்; பிறருக்கு ஒதுங்கி இடம் விடாது ரோட்டை அடைத்துக் கொண்டு போகும் ஆள்; 'மசமச' என்று சுறுசுறுப்பு இல்லாமல் இருக்கும் ஆள்; மந்த புத்திக்காரன்.

சில பழமொழிகள் :

எருமை மாட்டின் மேல் மழை பெய்த மாதிரி
ஏழைக் குடும்பத்துக்கு எருமையே காமதேனு
எருமைக்கு மிஞ்சிய பொறுமையும் இல்லை.
எருமைக்கு மிஞ்சிய கருப்பும் இல்லை.

எருமை சம்பந்தப்பட்ட சில கதைகள்.

கருப்புக் கோட்டு போட்ட ஒரு வக்கீலை ஓர் எருமை மாடு துரத்த அவர் ஓடினார். அதைச் சைக்கிளில் வந்த மாஜிஸ்டிரேட் ஒருவர் பார்த்து விட்டுப் போய் வக்கீல் கோர்ட்டுக்கு வந்ததும், 'எருமை மாட்டோடு இன்றைக்கு ஓட்டப் பந்தயம்போலிருக்கு' என்று கிண்டல் செய்தார்.

'ஆமாம். அதுமுதல் எனக்கு யாரைப் பார்த்தாலும் எருமை மாடு மாதிரி கண்களில் ஒரு பிரமை தோன்றுகிறது' என்று மூக்கை அறுத்தார் வக்கீல்.

★

ஒரு லாட்ஜ் -- ஒரே ஒரு பாத்ரூம் -- பத்து அறைகள். - பத்து அறைகளிலும் உள்ளவர்கள் எட்டு மணிக்குள் குளித்தாக வேண்டும். முதல் அறைக்காரர் குளிக்கப் போனால் ஒரு மணியாகும். மற்றவர்களுக்கு அவஸ்தை. ஒரு நாள் ஒரு நண்பர் மற்றொருவரை, 'என்ன ஸார், இரண்டு நிமிடத்தில் குளித்து விட்டீர்களே!' என்று கேட்டார். நண்பர் பதில் சொன்னார். 'காக்காய்க் குளிதான் குளிக்கணும். நான் என்ன எருமையா மணிக் கணக்கிலே சேற்றுக் குட்டையில் பள்ளி கொள்ள' என்று கேட்டார். முதல் அறைக்காரர் காதில் அந்த சம்பாஷணை விழுந்தது. பலன் மறு நாள் முதல் அவர் குளிக்க எடுத்துக் கொண்ட நேரம் மூன்றே நிமிஷங்கள்தான்!

★

'ஸார், ஸார்! ராமு என்னை எருமை என்கிறான்.'

'இல்லை, ஸார்! முதல் முதலில் அவன்தான் என்னை எருமை என்றான்.'

'எருமைக்கிடாக்களா! நான் ஒருவன் இங்கே இருப்பது உங்களுக்கு அறிவில்லை' என்று கோபித்தார் உபாத்தியாயர். பையன்கள் இருவருக்கும் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது.

★

'பெண்ணுக்கு வரதட்சிணை ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதுமா? அல்லது வரதட்சிணைக்குப் பதில் ஒரு எருமை மாடு போதுமா? -- பெண்ணின் அப்பா.

'எருமை மாடே போதும். தங்கச் சுரங்கம் மாதிரி. ஒரு மாட்டுப் பாலைக் கறந்து தண்ணீரை விட்டு விற்று, தயிரும் தோய்த்து நெய்யாகவும் விற்று விடுவேன். அதைக் கொண்டு இன்னும் ஓர் எருமை மாடு வாங்கி விடுவேன், இரண்டே வருஷங்களில்' என்று பதில் சொன்னவர் பையனின் தாயார்.

★

'எருமைப் பால் மட்டும்தானே இருக்கிறது? நீ எப்படிப் பசும் பால் கொடுக்கப் போகிறாய் அப்பா' என்று பால்காரர் மகன் கேட்க, அவன் தகப்பனாராகிய பால்காரர் சொன்னார்.

'ஒரு சேர் எருமைப் பாலில் இரண்டு சேர் தண்ணீரைச் சேர் -- அதுதான் சுத்தமான பசும் பால். பசும்பால் விற்கப் பசுமாடு தேவையில்லை. எருமை மாடே போதும்!'

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED NO. M. 4392
Registered as a Newspaper in Ceylon

